REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 செப்டெம்பர் 22 வியாழக்கிழமை

# தினகரன்
THINAKARAN தினகரன்

வரு. 90 இல. 224 | Thursday 22, September, 2022 | 16 பக்கங்கள் | 40/-




உணவுக் கையிருப்பு, பாதுகாப்பு கிராமிய புத்தெழுச்சி:

## ஜனாதிபதியின் திட்டம் யாழ்ப்பாணத்தில் அறிமுகம்

யாழ்.GA தலைமையில் நேற்று ஆரம்பம்



**யாழ். விசேட நிருபர்**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் படி அண்மையில் தேசிய ரீதியாக உருவாக்கப்பட்ட உணவுக் கையிருப்புப் பாதுகாப்பு மற்றும் போசாக்கை உறுதிப்படுத்துவதற்காக கிராமிய பொருளாதார புத்துயிரூட்டல் கேந்திர நிலையங்களை வலுவூட்டுவதற்கான பல்வகைத்துறைசார் ஒருங்கிணைந்த பொறிமுறை உருவாக்கம் தொடர்பான மாவட்ட மட்ட கலந்துரையாடல் நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

மாவட்டச் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் தலைமையில் நேற்றைய தினம் புதன்கிழமை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற யாழ். மாவட்டத்துக்கான கலந்துரையாலின் போது மாவட்ட மட்ட குழுவொன்றும் உருவாக்கப்பட்டது.

உணவுக் கையிருப்புப் பாதுகாப்பு மற்றும் போசாக்கை உறுதிப்படுத்துவதற்காக கிராமிய பொருளாதார 06

ஜப்பான் முன்னாள் பிரதமர் ஷின்ஷோ அபேயின்

## இறுதிச்சடங்கில் கலந்து கொள்கிறார் ஜனாதிபதி

ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷின்ஷோ அபேயின் உத்தியோகபூர்வ இறுதிச் சடங்கில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 26ஆம் திகதி ஜப்பான் பயணமாகவுள்ளார்.

ஷின்ஷோ அபேயின் உத்தியோகபூர்வ இறுதிச் சடங்கு டோக்கியோவில் எதிர்வரும் 27ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்த உத்தியோகபூர்வ இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள 190 வெளிநாட்டு பிரமுகர்கள் மற்றும் அரச தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஜப்பானிய பிரதமர் புமியோ கிஷிடா மற்றும் ஜப்பானிய அரசாங்கத்தின் உயர்மட்ட பிரதிநிதிகளையும் ஜனாதிபதி சந்திக்க உள்ளார்.

ஜப்பான் விஜயத்தின் பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 29ஆம் திகதி பிலிப்பைன்ஸில் நடைபெறும் ஆசிய 06

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பொதுநலவாய செயலாளர் சந்திப்பு



இரண்டாம் எலிசபெத் மகாராணியின் இறுதிக் கிரியையில் கலந்துகொள்வதற்காக லண்டனுக்கு விஜயம் செய்திருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் பற்றீசியா ஸ்கொட்லாண்டுக்கும் 06

# மலேசியாவில் பத்தாயிரம் இலங்கையருக்கு தொழில்

## அந்நாட்டு அமைச்சரவையில் தீர்மானம் நிறைவேற்றம்

மலேசிய அரசாங்கம் பத்தாயிரம் இலங்கையருக்கு வேலைவாய்ப்புக்களை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளது.

தெற்காசிய நாடுகள் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் முயற்சிகளில் ஒன்றாக இத் தொழில்வாய்ப்புக்களை வழங்குவதற்கு மலேசிய அரசாங்கம் முன்வந்துள்ளது.

சுற்றாடல்துறை அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட்டுக்கும் மலேசிய மனிதவள மேம்பாடுகள் அமைச்சர் சரவணன் ஆகியோருக்கிடையில் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையின் போது இதற்கான இணக்கம் காணப்பட்டுள்ளது. இது தொடர்பான ஆரம்ப முயற்சிகளை வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவுடன் இணைந்து அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் மேற்கொண்டிருந்தார்.

இந்த முயற்சிகளின் முன்னேற்றங்கள் தொடர்பில், தெரிந்துகொள்ளும் நோக்குடனே அமைச்சர் மலேஷியா சென்றிருந்தார்.

தென்கொரியாவில் நடைபெற்ற காலநிலை மாநாட்டில் பங்கேற்றுவிட்டு நாடு திரும்புகையிலேயே சுற்றாடல் 06



அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் மலேசிய அமைச்சர் சரவணனுடன் நடத்திய சந்திப்பில் இணக்கம்

## நச்சுத்தன்மை கொண்ட 'திரிபோஷ' எங்குமே விநியோகிக்கப்படவில்லை

பொய்க் குற்றச்சாட்டு சுமத்துவோர் மீது சட்ட நடவடிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நச்சுத்தன்மை கொண்ட திரிபோஷ விநியோகிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டை முழுமையாக நிராகரிப்பதாகவும் அது தொடர்பில் பரப்பப்படும் தகவல்கள் அடிப்படையற்றதெனவும் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல பாராளுமன்றத்தில் 06

## இறக்குமதி செய்யப்படும் அரிசி குறித்து திரிபுபடுத்தி பிரசாரம்

சபையில் அமைச்சர் மஹிந்த அமரவீர விளக்கம்



இறக்குமதி செய்யப்படும் அரிசியைவிட எமது நாட்டு அரிசி, தரத்தில் கூடியதாகும். அவ்வாறு இல்லாமல் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசி பாவனைக்கு உகந்தது அல்ல என தெரிவிக்கப்படும் செய்திகள் திரிபுபடுத்தப்பட்டவையாகுமென விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி 06

விவசாயத்தில் ஆர்வம் காட்டும் இளைஞர்களுக்கு:

## பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக 02 இலட்சம் காணி உறுதிப்பத்திரங்கள்

ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாக அமைச்சர் ஹறின் தெரிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

விவசாயத்தில் ஆர்வம் காட்டும் இளைஞர்களுக்கு பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்காக இரண்டு இலட்சம் காணி உறுதிப்பத்திரங்களை வழங்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளதுடன் 06

ரஷ்யாவில் உக்ரேய்ன் படை மீட்டெடுத்த

## இலங்கையர் ஏழு பேரும் நலமாக உள்ளதாக அறிவிப்பு

துருக்கியிலுள்ள இலங்கை தூதரகம் தெரிவிப்பு



உக்ரேய்ன் படையினரால் மீட்கப்பட்ட இலங்கையர் 07 பேரும் மிகவும் பாதுகாப்பாகவும் நலமாகவும் இருப்பதாக துருக்கி தூதரக வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன.

துருக்கியிலுள்ள இலங்கைத் தூதரக 06

மலை உச்சியில் ஆதிசிவன் ஐயனார் ஆலயம்;

## குருந்தூர்மலை ஆக்கிரமிப்புக்கு செந்தில் தொண்டமான் கண்டனம்

தமிழ் மக்களின் பூர்வீக பிரதேசம் எனவும் சுட்டிக்காட்டு



முல்லைத்தீவு மாவட்டத்தில் குருந்தூர்மலை தண்ணிமுறிப்பு பகுதியில் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களான 632 ஏக்கர் காணிகள் பிக்குவின் பங்கேற்போடு கடந்த 11 ஆம் திகதி தொல்பொருள் திணைக்களத்தால் 06

## கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தம் கிடைத்ததும் IMF இறுதி முடிவு

மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவிப்பு



கடன் மறுசீரமைப்பு தொடர்பான ஒப்பந்தங்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் இருதரப்பு கடன் வழங்குநர்களிடமிருந்து கிடைக்கவுள்ளதாக தெரிவித்துள்ள மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி 06

## உள்ளூராட்சி தேர்தல் திகதி குறித்து விரைவில் தீர்மானம்

ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா



உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான திகதியானது 2022 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர் பட்டியல் மற்றும் துணைப்பெயர் பட்டியல் சான்றளிக்கப்பட்டதன் பின்னரே 06

## உபயோகத்துக்கு உதவாத ரயில் தண்டவாளங்கள்

வெளிநாடுகளுக்கு விற்க அரசு தீர்மானம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாடு எதிர்கொண்டுள்ள நிதி நெருக்கடி நிலையில் பாவனைக்குதவாத ரயில் தண்டவாளங்களை 06

## நீரிழிவு நோயை கட்டுப்படுத்த புதிய மருந்து கண்டுபிடிப்பு

ருஹுணு பல்கலை ஆய்வுக்குழு சாதனை



இரத்தத்தில் உள்ள சீனியின் அளவைக் குறைக்கும் புதிய மருந்தை ருஹுணு பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் குழுவொன்று கண்டுபிடித்துள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு அறிவிக்கும் 06

## நீர்கொழும்பில் விபசார விடுதி ஒன்று முற்றுகை

நிர்வகித்த பெண் உட்பட நால்வர் கைது



நீர்கொழும்பு, குரணையில் ஆயுர்வேத மசாஜ் நிலையம் என்ற பெயரில் நடத்தப்பட்டுவந்த விபசார விடுதி சுற்றிவளைக்கப்பட்டு அதனை நிர்வகிப்பதாக சந்தேகிக்கப்படும் பெண் 06

## இலவசமாக ரொட்டி வழங்கும் இயந்திரம்

டுபாய் அரசு புதிய திட்டம்



நாட்டில் ஒருவரும் பசியால் வாடக்கூடாது என்ற உயர்ந்த எண்ணத்தில், டுபாய் முழுதும் ஆங்காங்கே சூடான ரொட்டியை இலவசமாக வழங்கும், 'வெண்டிங்' இயந்திரங்களை அந்நாட்டு அரசு நிறுவியுள்ளது. 06

## மண்வெட்டி தாக்குதலில் இருவர் பரிதாப பலி

கல்கமுவவில் கோரச் சம்பவம்



கல்கமுவ பிரசேத்தில் இரட்டைக் கொலைச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் (20) இடம்பெற்றள்ளது. சம்பவத்தில் 16 மற்றும் 67 வயதான இருவரே கொலை செய்யப்பட்டுள்ளதாக 06

'ஒன்றாய் எழுவோம்' தொனிப்பொருளில்

## 75 ஆவது சுதந்திர தினம் காலிமுகத்திடலில்



இலங்கையின் 75 ஆவது சுதந்திர தின நிகழ்வுகளை காலி முகத்திடலில் முன்னெடுப்பதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சுதந்திர தின நிகழ்வுகளை பாதுகாப்பான முறையில் 06

## ரயிலுடன் மோதுண்டு விபத்துக்குள்ளான கார்

பெண் காயம்; நுகேகொடையில் சம்பவம்



களனிவெளி ரயில் மார்க்கத்தில் பகிரிவத்தை மற்றும் தெல்கந்த ரயில் நிலையத்துக்கு அருகில் நேற்று (21) காலை ரயில் கடவையில் கார் ஒன்று ரயிலில் மோதி விபத்துக்குள்ளாகியது. 06

# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் லண்டன் விஜயத்தின் போது...







இரண்டாம் எலிசபெத் மகாராணியின் இறுதிச் கிரியையில் கலந்துகொள்வதற்காக லண்டனுக்கு விஜயம் செய்திருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க லண்டனில் உள்ள பௌத்த விகாரைக்கு சென்று மத வழிபாடுகளில் ஈடுபட்டார். அத்தோடு பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் பற்றீசியா ஸ்கொட்லாண்டுக்கும் இடையில் (20) சந்திப்பொன்றும் நடைபெற்றது. இவ் விஜயத்தில் ஜனாதிபதியின் பாரியார், முன்னாள் இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்தனவும் கலந்து கொண்டிருந்தனர்.








சுவிட்சர்லாந்து நாட்டை தலைமையகமாகக் கொண்டு உலகில் ஐந்து நாடுகளில் செயற்படும் பைனஸ் நிறுவனம் இலங்கையின் பெருளாதார மேம்பாட்டுக்கு உதவும் வகையில் 4.5 மில்லியன் ரூபாவை ஜனாதிபதி செயலணி பிரதானியும் முன்னாள் அமைச்சருமான சாகல ரட்நாயக்கவிடம் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து கையளித்துள்ளது. பைனஸ் நிறுவனப் பணிப்பாளர் பாலசிங்கம் ஜோன் வசந்தபாலன் ஜனாதிபதி செயலணி பிரதானியும் முன்னாள் அமைச்சருமான சாகல ரட்நாயக்கவிடம் காசோலையைக் கையளிப்பதையும் வாழைச்சேனை கடதாசி ஆலையின் முன்னாள் தகுதி காண் அதிகாரி மங்கள செனரத் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

# தராசுகளுக்கான தரச் சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தல்

**கல்முனை விஷேட நிருபர்**



அம்பாறை மாவட்ட செயலகத்தின் அளவீட்டு சேவை பிரிவினரால் தராசுகளை பரிசோதனை செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில், அனைத்து வியாபாரிகளும் தமது தராசுகளை பரிசோதனைக்குட்படுத்தி, சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளுமாறு மாவட்ட செயலகத்தினால் உத்தரவிடப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் கல்முனை பிரதேச செயலக வளாகத்தில் செவ்வாய்க்கிழமை (20) ஆரம்பிக்கப்பட்ட இச்செயற்பாடு நாளை வெள்ளிக்கிழமை (23) வரை முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன்போது, இலத்திரனியல் தராசுகள், பாரம்பரிய தராசுகள் மற்றும் நிறுக்கும் உபகரணங்கள் உள்ளிட்ட பல்வேறு அளவீட்டுடன் கூடிய தராசுகள் சரி பார்க்கப்பட்டு, சீல் செய்யப்பட்டு தரச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதில் இப்பிரதேச வர்த்தகர்கள், மீனவர்கள் பலர் தத்தமது அளவீட்டு தராசுகளை கொண்டு வந்து, பரிசோதனைக்குட்படுத்தி தரச் சான்றிதழ்களை பெற்று வருகின்றனர்.எனினும், தராசுகளை பரிசோதனைக்குட்படுத்தி, சான்றிதழ் பெறாத பல வியாபாரிகளின் மோசடி நடவடிக்கைகள் குறித்து தொடர்ந்தும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வருவதனால் அனைத்து வியாபாரிகளும் இச்சான்றிதழை பெற்றுக்கொள்ளுமாறு மாவட்ட செயலகத்தினால் கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# பதுளை பஹ்மியா அரபுக்கலாசாலையில் பட்டமளிப்பு விழாக்கள்

**ஊவா சுழற்சி நிருபர்**

பதுளை பஹ்ஃமியா அரபு கலாசாலையின் நாற்பெரும் விழாக்கள் எதிர்வரும் 24 சனிக்கிழமை இடபெறவுள்ளதாக அதிபர் அஷ்ஷேக் ஏ.எச். நௌஸாத் இஹ்ஸானி தெரிவித்தார்.

கல்லூரி வளாகத்தில் இடம்பெறவுள்ள இவ்விழாக்கள்

கல்லூரியின் தலைவரும் பதுளை மாநகரசபை முன்னாள் பிரதித் தவிசாளருமான ஏ.எச்.எம்.ஜாபீர் தலைமையில் இடம்பெறவுள்ளன.ஏழாவது அல்ஆலிம் பட்டமளிப்பு விழா,மூன்றாவது அல் ஹாபீஸ் பட்டமளிப்பு விழா,விஷேட பட்டமளிப்பு விழா, கல்லூரியின் முப்பதாண்டு நிறைவையொட்டிய புத்தக வெளியீட்டு விழாக்களே அன்றைய தினம் இடம்பெறவுள்ளன. இதில்,பிரதம அதிதிகளாக ரி.எச்,தனியார் நிறுவனத்தின் பணிப்பாளர்.எச்.எம்.எம்.இப்ஹாம், கடுகஸ்தோட்ட ஜும்ஆப் பள்ளிவாசல் தலைவைர்.எம்.அஸாட் ஜுனைத்தீன்,கௌரவ அதிதிகளாக தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் அரபு மொழி சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி.அஷ் ஷேக்.ஏ.ஆர்.ஏ.நஸார் பலாஹி,வைத்திய கலாநிதி.தாஹா எம்.முஸ்தபா,விஷேட பேச்சாளர்களாக வெலிகம பாரீ அரபுக் கலாசாலையின் அதிபர்.அஷ்ஷேக். அல் ஆலீம்.ஏ.ஆர்.எம்.அப்துர்றஹ்மான் மலாஹிமி,கொழும்பு மர்கஸ் ரஸாதியா அரபுக் கலாசாலை விரிவுரையாளர்.அஸ்.ஸேக்.அல் ஆலீம்.எம்.எஹியா பலாஹி ஆகியோர் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இக்கல்லூரியில் கற்கைநெறிகளைப் பூர்த்தி செய்த இளம் மௌலவிகளுக்கான அல்ஆலீம் பட்டங்களும்,அல் ஹாபீஸ் பட்டங்களும் வழங்கி வைக்கப்படவுள்ளன

# சர்வதேச சமாதான நிகழ்வுகள் கல்முனை அல் மிஸ்பாஹ்வில்



**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

சர்வதேச சமாதான தினத்தையொட்டி கல்முனை அல் மிஸ்பாஹ் மகா வித்தியாலயத்தில் நிகழ்வொன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

பாடசாலை அதிபர் அப்துல் றஸாக் தலைமையில் இடம்பெற்ற மேற்படி இந்நிகழ்வில், இனங்களுக்கிடையிலான ஒற்றுமை, சமாதானம் சம்பந்தமாக மாணவர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்வுகளும் இடம் பெற்றன.

பாடசாலை மாணவர்களிடையே சமாதானம் சம்பந்தமாக நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டதுடன், நிகழ்வின் இறுதியில் சமாதான புறா பறக்கவிடப்பட்டது.

# மத்ரஸா மாணவர்களின் விளையாட்டு தினம் மருதானை சின்னப் பள்ளிவாசல் ஏற்பாடு





**சீகிரியா குறூப் நிருபர்**

மருதானை பகுதியில்,முதன் முறையாக மத்ரஸா மாணவர்களுக்கிடையில் சிறப்பு விளையாட்டுப்போட்டி நிகழ்வுகள் அண்மையில் நடாத்தப்பட்டன.

கொழும்பு 10, மருதானை, சின்னப் பள்ளிவாசல் "மத்ரஸதுல் மஹ்தினில் உலூம்" மாணவர்கள் கலந்து கொண்ட இச்சிறப்பு "விளையாட்டு" நிகழ்வுகளை, மருதானை சின்னப்பள்ளிவாசல் நிர்வாக சபை மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள் குழு இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

கொழும்பு 02, "ஹைட் பார்க்" விளையாட்டு மைதானத்தில் இடமபெற்ற இச்சிறப்பு "விளையாட்டு நிகழ்வில், "அறபா" (பச்சை), "மினா" (செம்மஞ்சள்), "சபா" (சிவப்பு), "மர்வா" (நீலம்) ஆகிய நான்கு இல்லங்களைச்சேர்ந்த மத்ரஸா மாணவர்கள் கலந்து கொண்டனர்.

எம்.கே. ரஹ்மதுல்லாஹ் "அறபா இல்லம்" சார்பிலும், எஸ்.எப்.எம். பஹறத் "மினா இல்லம்" சார்பிலும், ஐ.எப். அப்துல்லாஹ் "சபா இல்லம்" சார்பிலும், ரீ. ரசூல் "மர்வா இல்லம்" சார்பிலும் தலைவர்களாகச் செயற்பட்டனர்.

ஓட்டம், மரதன் ஓட்டம், பலூன் ஊதி உடைத்தல், கிரிக்கெட் மற்றும் உதைபந்தாட்டம் ஆகிய விளையாட்டுப்போட்டி நிகழ்வுகள் இதில் இடம்பெற்றன.

பள்ளிவாசல் மேல்மாடியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள "விளையாட்டு மண்டபம் இப்பிரசேத்தில் விளையாட்டு மைதானம் இல்லாத குறையை நிவர்த்தி செய்துள்ளது.

மாணவர்கள், தமது பாடசாலை மற்றும் மத்ரஸா போதனா வகுப்புக்களை நிறைவுசெய்த பின்னர்,

சகலவசதிகளும் உள்ளடங்கியவாறு விளையாடுவதற்கான ஒழுங்குகள் இங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

இப்பள்ளிவாசல் மேல்மாடியில் விளையாடுவதற்கு, 6 முதல் 14 வயதுக்கு உட்பட்ட ஆண் மாணவர்களுக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பள்ளிவாசலில் தொழுகை நேரமல்லாத ஏனைய நேரங்களில் மாத்திரம், தொழுகைக்கு எவ்வித இடையூறுகளும் ஏற்படாதவாறு, தினமும் மாலை மூன்று மணி முதல் இரவு இஷாத் தொழுகைக்கான அதான் ஒலிக்கும் வரையிலும், இங்கு மாணவர்கள் விளையாடுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

# தினகரன்

THINAKARAN

2022 செப்டெம்பர் 22 வியாழக்கிழமை




**தொழுகை நேரம்**

| | |
|---|---|
| சுபஹ் | 04.45 |
| லுஹர் | 12.06 |
| அஸர் | 03.15 |
| மஃரிப் | 06.09 |
| இஷா | 07.19 |

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் புரட்டாசி 5

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | செலவு |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | முயற்சி |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | வெற்றி |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | மறதி |
| மீனம் | சுகம் |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

கடன் மறுசீரமைப்பு குறித்து

## இலங்கை அரசாங்கத்துடனான இருதரப்பு பேச்சுகள் ஆரம்பம்

### இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவிப்பு

இலங்கை அரசாங்கத்தால் அண்மையில் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு பதிலளிக்கும் முகமாக, இலங்கை இந்தியாவுக்கு செலுத்தவேண்டியுள்ள உத்தியோகபூர்வ இருதரப்பு கடன்களை மறுசீரமைத்தல் தொடர்பான முதல் சுற்றுப்பேச்சுகள் கொழும்பிலுள்ள உயர்ஸ்தானிகராலயத்தின் ஏற்பாட்டில் கடந்த 16 ஆம் திகதி நடைபெற்றதாக தூதரகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான நிகழ்ச்சித்திட்டம் விரைவில் அங்கீகரிக்கப்பட்டு செயல்வடிவம் பெறவேண்டு மென்பதற்கு இந்தியா ஆதரவளிப்பதை மிகவும் சுமுகமாக நடைபெற்ற இப்பேச்சுக்கள் பிரதிபலிக்கின்றன. அத்துடன் இலங்கை கடன்களின் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக கடன் வழங்குநர்களின் உத்தரவாதமும் சர்வதேச நாணய நிதியத்தின் இந்நிகழ்ச்சித்திட்டத்துக்கு அவசியமானது.

இவ்விடயத்தில் தொடர்புடைய இலங்கை தரப்பினருடன் இந்தியா தொடர்ந்தும் நெருக்கமாக பணியாற்றும் என்பது குறிப்பிடத்தக்கதென்றும் தூதரகம் தெரிவித்துள்ளது.

## SLRCயில் அத்துமீறிய குற்றச்சாட்டு; நால்வரை தேடுகிறது பொலிஸ்



இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திற்குள் நுழைந்த நால்வரை கைது செய்ய பொலிஸார் பொதுமக்களின் உதவியை கோருகின்றனர்.

2022 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 9 ஆம் திகதி இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திற்குள் சட்டவிரோதமாக நுழைந்து அதன் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த குற்றத்திற்காக தேடப்படும் நான்கு சந்தேக நபர்களின் படங்களை பொலிஸார் பகிரங்கப்படுத்தியுள்ளனர்.

கறுவாத்தோட்டம் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்காக சந்தேகநபர்கள் தேடப்பட்டு வருகின்றனர். படத்தில் உள்ள நான்கு பேரையும் கைது செய்ய பொதுமக்களின் ஆதரவை பொலிஸார் நாடியுள்ளனர். மேலும் 0718 591 588 என்ற எண்ணிற்கு நேரடியாகவோ அல்லது வட்ஸ்அப் மூலமாகவோ தகவல்களை வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வருவாயை முறையாக முகாமைத்துவம் செய்தால்

## அரச வருமானத்தை 4,000 பில்லியனாக அதிகரிக்க முடியும்

### IMF ஐ எதிர்பார்க்க வேண்டிய அவசியமும் இல்லை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



வரி அறவீடு உட்பட அரசாங்கத்துக்கான வருமானத்தை முறையாக முகாமைத்துவம் செய்தால் அரச வருமானத்தை 4,000 பில்லியனாக அதிகரிக்க முடியுமென முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே எம்.பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அரச வருமானத்தை முறையாக முகாமைத்துவம் செய்தால் நாம் சர்வதேச நாணய நிதியத்தை எதிர்பார்க்கத் தேவையுமில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

வரி செலுத்தக்கூடிய அனைவரிடமும் வரி அறவிடப்படுவது உறுதி செய்யப்பட வேண்டுமென தெரிவித்த அவர், அதற்கு முன்மாதிரியாக பாராளுமன்றத்தில் 225 உறுப்பினர்களும் வருமான வரி செலுத்த முன்வர வேண்டுமெனவும் அதற்கான நடவடிக்கைகளை சபாநாயகர் முன்னெடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

வரி அறவீட்டு முறைமையில் மாற்றம் அவசியம் என்பதை சபையில் சுட்டிக்காட்டிய அவர், மறைமுக வரியை குறைத்து நேரடி வரியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று அரச வருமானம் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையை சபையில்

06

சமூக பாதுகாப்பு உதவுத்தொகை

## அறவீட்டுச் சட்டமூலத்தை சபாநாயகர் சான்றுரைப்படுத்தினார்



சமூக பாதுகாப்பு உதவுத்தொகை அறவீட்டுச் சட்டமூலத்தில் (20) தனது கையொப்பத்தையிட்டு சான்றுரைப்படுத்தியதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன பாராளுமன்றத்தில் நேற்று (21) அறிவித்தார்.

இந்த ச் சட்டமூலம் கடந்த 08ஆம் திகதி மேலதிக வாக்குகளால் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்கும் கொவிட் 19 தொற்று நோயினால் பாதிக்கப்பட்ட பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பும் நோக்கில் அறிமுகப்படுத்தப்பட்ட நடைமுறையாக 2022 வரவு செலவுத் திட்டத்தில் சமூகப் பாதுகாப்பு உதவுத்தொகை வரி அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. வருடமொன்றில் கூட்டுமொத்தம் நூற்றியிருபது மில்லியன் ரூபாவை விஞ்சிய இறக்குமதியாளர், உற்பத்தியாளர், சேவை விநியோகஸ்தர் மற்றும் மொத்த விற்பனையார் மற்றும் சில்லறை விற்பனையாளர்களின் மொத்த விற்பனை வரவின்மீது 2.5 வீதம் வரியாக விதிக்கப்படும். இந்த வரியினால் எதிர்பார்க்கப்பட்டுள்ள வருடாந்த வருமானம் 140 பில்லியனாகும்.

இதற்கமைய 2022ஆம் ஆண்டு 25ஆம் இலக்க சமூக பாதுகாப்பு உதவுத்தொகை அறவீட்டுச் சட்டம் நேற்று (21) முதல் நடைமுறைக்கு வருகிறது.






## ஜனாதிபதியின் பிரிட்டன் விஜயம் பொய்யான குற்றச்சாட்டு முன்வைப்பு

பிரிட்டனின் வெஸ்ட்மினிஸ்டர் அபேயில் நடைபெற்ற இரண்டாம் எலிசபெத் மகாராணியின் இறுதிக் ஊர்வலத்தில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கேற்கச் சென்ற ஜனாதிபதி தலைமையிலான குழுவினர் தொடர்பில் பொய்யான தகவல்களை பரப்பி சில பாராளுமன்ற உறுப்பினர்களும் சமூக ஊடகங்களும் மக்களை தவறாக வழிநடத்த முயற்சிப்பதாக அவதானிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.அது வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உத்தியோகபூர்வ அழைப்பின் பிரகாரம் இறுதிக் கிரியையில் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளர் செண்ட்ரா பெரேரா மற்றும் ஜனாதிபதியின் சர்வதேச உறவுகளுக்கான பணிப்பாளர் தினுக் கொழம்பகே ஆகியோர் உத்தியோகபூர்வமாக உள்வாங்கப்பட்டிருந்தனர். மேலும், ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வைத்தியரும் உடன் சென்றிருந்தார்.

முதற்பெண்மணி சிரேஷ்ட பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க தனது தனிப்பட்ட செலவில் இந்தப் பயணத்தில் இணைந்து கொண்டதுடன், காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகரும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவருமான ருவன் விஜேவர்தனவும் ஐக்கிய இராச்சியத்துக்கு தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டிருந்தபோதே, 19ஆம் திகதி நடைபெற்ற புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர் சந்திப்பில் கலந்துகொண்டார்.

இரண்டாம் எலிசபெத் மகாராணியின் இறுதி ஊர்வலத்தில் சர்வதேச நாடுகளை சேர்ந்த தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர். போலந்து ஜனாதிபதி ஆண்ட்ரிசெஜ் டுடா மற்றும் அவரது மனைவி அகதா கோர்ன்ஹவுசர்டுடா, தென்னாபிரிக்க ஜனாதிபதி சிறில் ரமபோசா, கானா ஜனாதிபதி நனா அகுபோஅட்டோ, பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா, இந்திய குடியரசுத் தலைவர் திரௌபதி மூர்மு, சீன பிரதி ஜனாதிபதி வங் கிஷான், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் அவரது மனைவி ஜில் பைடன், இங்கிலாந்து பிரதமர் லிஸ் ட்ரஸ், கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, அவுஸ்திரேலியப் பிரதமர் அன்டனி அல்பெனிஸ், நியூசிலாந்து பிரதமர் ஜெசிந்தா ஆர்டெர்ன், பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரான் மற்றும் அவரது மனைவி பிரிஜிட் உள்ளிட்டோரும் மகாராணிக்கு இறுதி அஞ்சலி செலுத்த கூடியிருந்தனர்.

## விசேட மருத்துவர்கள் ஓய்வு பெற்றாலும் அதற்கான குறைபாடு நிவர்த்திக்கப்படும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

### எதிர்க்கட்சித் தலைவரின் கேள்விக்கு சுகாதார அமைச்சர் கெஹெலிய பதில்



விசேட மருத்துவர்கள் ஓய்வு பெற்று சென்றாலும் பொருத்தமான வேலைத் திட்டங்கள் மூலம் அதற்கான குறைபாடுகள் நிவர்த்திக்கப்படும் என அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

தேவை ஏற்படும் பட்சத்தில் அவர்களது சேவைக் காலத்தை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் சபையில் தெரிவித்தார்.

சுகாதாரத்துறையை முன்னேற்றுவதற்கு பொருத்தமான வேலைத் திட்டங்களை அரசாங்கம் முன்னெடுத்து வருவதாக தெரிவித்த அமைச்சர், விசேட மருத்துவர்கள் பலர் தனிப்பட்ட ரீதியில் சேவையிலிருந்து விலகிக் கொள்வதற்கு தேசியக் கொள்கையே காரணமாகியுள்ளது என்றும் தெரிவித்தார்.

நாட்டில் 2017 ஆம் ஆண்டு 1560 விசேட மருத்துவர்கள் கடமையில் இருந்தனர்.அந்த எண்ணிக்கை தற்போது 2380 ஆக அதிகரித்துள்ளது என சுட்டிக்காட்டிய அவர், இடைப்பட்ட காலத்தில் 800 ற்கும் மேற்பட்ட விசேட மருத்துவர்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதையும் சுட்டிக்காட்டினார்.

எவ்வாறெனினும் அதற்கான செயற்திட்டம் ஒன்றை தயாரித்து ஏதாவது ஒரு அடிப்படையில் தேவைப்படும் போது அவர்களது சேவைக் காலத்தை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போது அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் தமது கேள்வியின் போது,

06

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 238.30 | 249.43 |
| கனடியன் டொலர் | 266.50 | 278.62 |
| யூரோ | 355.51 | 370.47 |
| ஜப்பான் யென் | 2.4825 | 2.5854 |
| சிங்கப்பூர் டொலர் | 252.81 | 263.50 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 406.47 | 422.56 |
| சுவிஸ் பிராங்க் | 369.13 | 386.67 |
| அமெரிக்க டொலர் | 359.17 | 369.94 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 962.56 | கட்டார் ரியால் | 99.05 |
| குவைத் டினார் | 1,174.62 | சவூதி ரியால் | 96.47 |
| ஓமான் ரியால் | 942.58 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.79 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834

தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் புரட்டாதி மாதம் 05ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஸபர் பிறை 25

## குறள் தரும் சிந்தனை



வாளொடென் வன்கண்ணர் அல்லார்க்கு நூலொடென்
நுண்ணவை அஞ்சு பவர்க்கு

*கோழைகளுக்குக் கையில் வாள் இருந்தும் பயனில்லை; அவையில் பேசிட அஞ்சுவோர் பலநூல் கற்றும் பயனில்லை.*

# புலம்பெயர் இலங்கையருக்கான முக்கியத்துவம் மிகுந்த அழைப்பு!

அந்நிய செலாவணிப் பற்றாக்குறையினால் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்திருக்கும் நாட்டை மீளக்கட்டியெழுப்புவதில் அதிகூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் காலஞ்சென்ற பிரித்தானிய மகாராணி இரண்டாம் எலிசபெத்தின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்ளச் சென்றிந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பிரித்தானியாவில் வாழும் புலம்பெயர் இலங்கையர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீட்சி பெறுவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் சூழலில் இச்சந்திப்பு முக்கியத்துவம் மிக்க ஒன்றாக நோக்கப்படுகின்றது. பிரித்தானியாவிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயம் ஏற்பாடு செய்திருந்த இச்சந்திப்பில், பிரித்தானியாவில் வசிக்கும் இலங்கை வர்த்தகர்கள், முதலீட்டாளர்கள், தொழில் வல்லுனர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இச்சந்திப்பின் போது உரையாற்றிய ஜனாதிபதி, 'தற்போதைய நெருக்கடிகளை வெற்றி கொண்டு வளமான தேசத்தைக் கட்டியெழுப்பவென அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட முன்வர வேண்டும்' என்று அழைப்பு விடுத்ததோடு, 'வடக்கில் மாத்திரமல்ல தெற்கிலும் முதலீடுகளை செய்ய முடியும். அதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. உங்களால் முடிந்த விதத்தில் இலங்கைக்கு உதவுங்கள்' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்டெடுக்க முன்னெடுக்கப்படும் முயற்சிகளுக்கு எல்லா மட்டத்தினரும் தம்மாலான பங்களிப்புகளை நல்கி வருகின்றனர்.

அந்த வகையில் பிரிட்டன் உட்பட வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் இலங்கையருக்கும் தம் தாயகத்தை தற்போதைய நெருக்கடியில் இருந்து மீட்டெடுப்பதற்கு பங்களிப்பதற்கான பொறுப்பு உள்ளது.

அவர்கள் தற்போது வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழுகின்ற போதிலும், அவர்கள் தாம் பிறந்த மண்தான் இலங்கை என்பதை ஒருபோதும் மறக்க மாட்டார்கள். அவர்களிடமும் தம் தாயகத்தின் மீது பற்றும் பாசமும் இருக்கவே செய்யும்.

அதேநேரம் இந்நாட்டின் இலவசக் கல்வி, இலவச சுகாதார சேவை என்பவற்றின் மூலம் பிரதிபலன்களை அடைந்துள்ளவர்களில் அவர்களும் அடங்கவே செய்வர். இந்நாட்டு மக்களின் வரிப்பணத்தில் பெரும்பகுதி இவ்விரு இலவச சேவைகளுக்குமே அதிகளவில் செலவிடப்படுகின்றது என்பதை அவர்களும் அறியாதவர்கள் அல்லர்.

அதனால் பொருளாதார வீழ்ச்சியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்காக தம்மாலான பங்களிப்புகளை நல்க வேண்டிய பொறுப்பு அவர்கள் முன்பாகவும் உள்ளது. இதனை அவர்கள் மறக்க மாட்டார்கள்.

இந்தப் பங்களிப்புகளை முதலீடுகளாகவோ உதவி ஒத்துழைப்புகளாகவோ மேற்கொள்ள முடியும். அதனை ஜனாதிபதி தெளிவாகவே எடுத்துக் கூறியுள்ளார்.

இந்த நிலையில் வெளிநாடுகளில் வாழும் இலங்கையர் இந்நாட்டினதும் மக்களினதும் முன்னேற்றத்தை இலக்காகக் கொண்டு உதவி ஒத்துழைப்புகளை நல்க முன்வர வேண்டும். முதலீடுகளையும் மேற்கொள்ள வேண்டும். அது நாடு துரித கதியில் மீட்சி பெற வழிவகுப்பதோடு, நாட்டைக் கட்டியெழுப்ப அளித்த பாரிய பங்களிப்பாகவும் அமையும். இவ்வாறான பங்களிப்பை வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர் நாட்டுக்காக அளிக்க வேண்டும். அது மக்களின் எதிர்பார்ப்பாகவும் இருந்து கொண்டிருக்கின்றது.

அதேவேளை இச்சந்திப்பில் மேலும் உரையாற்றிய ஜனாதிபதி, 'வெளிநாட்டில் வாழும் இலங்கையர் புலம்பெயர் மக்களாக தம்மை அடையாளப்படுத்துகின்றனர். இந்த நிலையில் புலம்பெயர் அலுவலகமொன்றை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் வெளிவிவகார அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்த அலுவலகம் ஜனாதிபதி அலுவலகத்தின் கீழ் சில காலம் இருக்கும். அதன் பின்னர் வெளிவிவகார அமைச்சின் கீழ் அது கொண்டு வரப்படும். இந்த அலுவலகம் வெற்றி பெற வேண்டும் என்றே நாம் எதிர்பார்க்கின்றோம். இதில் நாமனைவரும் கைகோர்க்க வேண்டும்' என்பதையும் குறிப்பிட்டுக் கூறத் தவறவில்லை.

இவ்வாறான நம்பிக்கை தரும் முக்கியத்துவம் மிக்க அழைப்பு உள்ளிட்ட நகர்வுகளை ஆக்கபூர்வமாக நோக்கும் போது, அது நாட்டுக்கும் மக்களுக்கும் சுபீட்சத்தையும் விமோசனத்தையும் பெற்றுக் கொடுக்க வழிவகை செய்யும்.

தற்போதைய சூழலில் அத்தகைய முன்னெடுப்புகள் இன்றியமையாதவை. ஆகவே பிரித்தானியாவில் வாழும் புலம்பெயர் இலங்கையர் மத்தியில் ஜனாதிபதி விடுத்துள்ள அழைப்பை, நாட்டின் தலைவர் விடுத்த அழைப்பாக நோக்கி, நாட்டின் மீட்சிக்கும் முன்னேற்றத்திற்கும் புலம்பெயர் இலங்கையர்கள் ஆதரவும் ஒத்துழைப்பும் நல்க முன்வர வேண்டும். அது வளமான தேசத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கான பாரிய பங்களிப்பாக அமையும்.

editor.tkn@lakehouse.lk

# ஊடகத்துறையில் 55 வருடங்கள் தொடர்ச்சியாக பணிபுரியும் ஊடகவியலாளர் எம்.ஏ.எம்.நிலாம்



**அகவை 77 இல் இன்று**

*மூத்த ஊடகவியலாளரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் சிரேஷ்ட உபதலைவருமான முஹம்மத் ஆரிப் முஹம்மத் நிலாம் இன்று அகவை 77இல் பிரவேசிக்கிறார். 'ஈழத்து நூன்' என்ற புனைபெயருடன் இலக்கியத்துறைக்குள் பிரவேசித்த இவர், 1977 முதல் பத்திரிகைத் துறையில் பணிபுரிந்து வருகிறார். அவர் தொடர்ச்சியாக 55 வருடங்கள் ஊடகத்துறையில் சாதனை புரிந்து வருகிறார்.*

*ஊடகவியலாளர் நிலாமுக்கு இலங்கையின் பிரதான மூன்று பத்திரிகைகளில் பணிபுரியும் வாய்ப்புக் கிடைத்தது. இவருடைய வாழ்வில் இதுவும் ஒரு சாதனையே. 1977ஆம் ஆண்டு தினகரனின் கொழும்பு தெற்கு செய்தியாளராக தன் ஊடகப் பணியை ஆரம்பித்து, பின்பு குருநாகல் மாவட்ட நிருபராக பணிபுரிந்தார். 1983ஆம் ஆண்டு முதல் முழுநேரப் பத்திரிகையாளராக வீரகேசரியில் பத்து வருடங்கள் பணிபுரிந்த இவர், பின் 1983 இல் தினக்குரலில் இணைந்து உதவி ஆசிரியர், பிரதம உதவி ஆசிரியர் பதவிகளை 19 வருடங்களாக வகித்தார்.*

*அதன் பின் 2022 வரை லேக்ஹவுஸ் தினகரன் தமிழ் பிரசுரங்களில் ஆலோசகராகப் பணிபுரிந்து முழுநேரப் பத்திரிகைத்துறையிலிருந்து ஓய்வு பெற்றார். ஓய்வு பெற்ற பின்பும் அடிக்கடி தினகரன் உட்பட பல பத்திரிகைகளுக்கு அரசியல் மற்றும் இலக்கியம் தொடர்பான கட்டுரைகளை எழுதி வருகிறார்.*

*1946.09.22ஆம் திகதி நிலாம், மர்ஹூம் முஹம்மத் ஆரீப் மற்றும் ஹாஜியானி ஹபிலா உம்மாவின் இரண்டாவது மகனாகப் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை நீர்கொழும்பு போலவத்தை ரோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் கற்றார். அதன் பின்னர் தனது சொந்த ஊரான கல்லொழுவை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இணைந்து உயர் வகுப்பு வரை கற்றார்.*

*சவுதி அரேபிய தூதுவராலயத்துக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் விடுத்த வேண்டுகோளையடுத்து அதன் அங்கத்தவர் பத்துப் பேருக்கு வழங்கிய புலமைப் பரிசில் பெற்று ரியாத் நகரின் இமாம் பின் முஹம்மத் சவூதி இஸ்லாமிய பல்கலைக்கழகத்தின் 2004 ஆம் ஆண்டு பத்திரிகைத் துறையில் டிப்ளோமா பட்டத்தைப் பெற்றுக் கொண்டார்.*

*நிலாம் தமிழைப் போன்று சிங்கள அறிவிலும் புலமை மிக்கவராக இருக்கிறார். அவர் பணிபுரிந்த தமிழ்ப் பத்திரிகைகளுக்கு அவருடைய சேவை அத்தியாவசியமாகிறது. சிங்கள அரசியல் தலைவர்களது உரைகளை தமிழ் மக்களுக்கு வழங்குவது இவரது பிரதான பணியாக இருந்தது. பத்திரிகைகளில் நூற்றுக்கணக்கான தலைப்புச் செய்திகள் நிலாம் பெயரிலேயே வந்தமை இவரது திறமையை உறுதிப்படுத்துகின்றது.*

*நிலாமின் பத்திரிகைத்துறை பணிகள் ஆறு தசாப்தத்தைக் கடந்துள்ளது. சாதாரண ஒரு பிரதேச நிருபராக இருந்து ஆலோசகராக வருவதற்கு அவரிடம் காணப்பட்ட திறமையும், கடின உழைப்புமே காரணமாகும். பத்திரிகைளில் மாலை நேரமே புதிய செய்திகளைப் பெறுவதற்கான நேரமாகும். தான் பணிபுரிந்த பத்திரிகைகளுக்கு அவ்வாறான செய்திகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு நிலாம் பெரும் அர்ப்பணிப்புடன் பணியாற்றியுள்ளார். மினுவாங்கொடை கல்லொலுவையிலே நிலாமின் வீடு இருந்தது. அநேகமான சந்தர்ப்பங்களில் கொழும்பிலிருந்து மினுவாங்கொடைக்குச் செல்லும் கடைசி பஸ் வண்டியிலேயே இவர் பயணிப்பார். அவரிடம் சேவை அர்ப்பணிப்பு இருந்ததற்கு இது சிறந்த உதாரணமாகும்.*

*நிலாமின் ஊடகத்துறை மற்றும் இலக்கிய பங்களிப்புக்காக பல விருதுகளை அவர் தனதாக்கிக் கொண்டுள்ளார். 2009ஆம் ஆண்டு கலாபூஷணம் விருதினை கலாசார அமைச்சு அவருக்கு வழங்கியது. 2015 ஆம் ஆண்டு இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் வாழ்நாள் சாதனையாளர் விருதினை அப்போதையஜனாதிபதிமைத்திரிபால சிறிசேனவிடமிருந்து பெற்றுக் கொண்டார். 2004 இல் இலங்கை தமிழ்ப் பத்திரிகையாளர் ஒன்றியம் சிறந்த பத்திரிகையாளர் விருதினை வழங்கி கௌரவித்தது. ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் மூத்த ஊடகவியலாளர் விருதினை வழங்கி கௌரவித்தது. இதுதவிர இந்தியா, மலேசியா போன்ற நாடுகளில் நடைபெற்ற இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடுகளிலும் இவரது இலக்கிய, ஊடகப் பணிக்கு பல கௌரவங்கள் வழங்கப்பட்டன.*

*இவர் தனது வாழ்க்கையில் மறக்க முடியாத அனுபவமாக 2002 ஆண்டு தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த வேளையில் அமெரிக்காவுக்கு விஜயம் செய்த போது அவரது ஊடகக் குழுவில் இணைந்ததைக் கூறுகின்றார்.*

*அமெரிக்க ஜனாதிபதியின் வெள்ளை மாளிகைக்குச் சென்ற முதலாவது தமிழ் ஊடகவியலாளர் நிலாம் என்பது குறிப்பிடத்தக்கது.*

*இந்தியா, பாகிஸ்தான், மலேசியா, சிங்கப்பூர், நேபாளம், சவுதி அரேபியா உட்பட பல உலக நாடுகளுக்கு ஊடகவியலாளராக விஜயம் செய்த அனுபவங்களை அவர் பெற்றுள்ளார்.*

*ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் ஸ்தாபக அங்கத்தவரான இவர் அதன் பொதுச் செயலாளர், உபதலைவர், தேசிய அமைப்பாளர் பதவிகளை வகித்துள்ளார். அதன் 27 வருட வளர்ச்சியில் முக்கிய பங்கு வகித்த ஒருவர் அவராவார்.*

*தனது கிராமமான கல்லொலுவையின் வளர்ச்சிக்குக் குறிப்பாக கல்வித்துறை மேம்பாட்டுக்காக நிறைந்த பங்களிப்பினைச் செய்துள்ளார். வெளிநாடுகளிலிருந்து இங்கு வரும் அறிஞர்கள் மற்றும் கலைஞர்களை கல்லொலுவைக்கு அழைத்துச் செல்வதில் கூடுதலான கரிசனை காட்டியுள்ளார்.*

*இலங்கைக்கு விஜயம் செய்த தமிழ் அறிஞர்களான கவிஞர் சாரண பாஸ்கரன், சிராஜூல் மில்லத், ஏ.கே. அப்துல் சமத், தோப்பில் மீரான் டாத்தோ முஹம்மத் இக்பால், ஹிமானா செய்யத், நாகூர் ஈ.எம்.ஹனீபா, காயல்ஷேக் முஹம்மத் போன்ற பிரபலங்களை தனது சொந்த மண்ணுக்கு அழைத்துச் சென்றுள்ளார்.*

*இவர் பல சமூக இலக்கிய அமைப்புக்களிலும் முக்கிய பதவிகளை வகித்துள்ளார். அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிபர் முன்னணிகளின் செயற்குழு உறுப்பினராக நீண்ட காலம் பதவி வகித்த இவர் நீர்கொழும்பு கலை இலக்கிய வட்டம், இலங்கை தமிழ்ப் பத்திரிகையாளர் சங்கம், மினுவாங்கொடை கலை இலக்கிய வட்டம், தெற்காசிய சுதந்திர ஊடக அமைப்பின் இலங்கைக் கிளை ஆகியவற்றிலும் முக்கிய பதவிகளை வகித்துள்ளார்.*

*பல நூல்களை எழுதியுள்ள இவரது அண்மித்த படைப்பான 'தட்டுத் தாவாரம்' என்ற கவிதை நூல் இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் தலைவர் பேராசிரியர் காதர் முஹைதீனின் தலைமையில் கொழும்பில் வெளியிடப்பட்டது.*

*இருமுறை புனித ஹஜ் கடமையை நிறைவேற்றிய இவர், கல்லொழுவையில் தனது மனைவி மற்றும் இரு பிள்ளைகளுடன் வாழ்ந்து வருகிறார். இவரது ஒரு மகன் சில வருடங்களுக்கு முன்னர் காலமானார். தனது ஓய்வு காலத்தில் தனது கிராமப் பள்ளிவாசல் மற்றும் பாடசாலையின் வளர்ச்சிக்காக பூரண பங்களிப்பினைச் செய்து வருகிறார்.*

*அகவை 77 இல் பிரவேசித்துள்ள மூத்த ஊடகவியலாளர் நிலாமை வாழ்த்துவதோடு மேலும் பல வருடங்கள் அவர் ஆரோக்கியமாக வாழப் பிரார்த்திப்போம். தனது பதினெட்டு வயதிலிருந்து இன்று வரை தனது பேனாவுக்கு ஓய்வு கொடுக்காது எழுதி வரும் நிலாமின் எழுத்துப் பணி தொடர வாழ்த்துகிறோம்.*

**என்.எம்.அமீன்...**

# வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் திறன் வகுப்பறை அங்குரார்ப்பணம்

*யா/வட்டு இந்துக் கல்லூரியில் கல்லூரி அதிபர் அப்புத்துரை ஆனந்தராசா தலைமையில் விஞ்ஞான ஆய்வுகூடத்திற்கான திறன் வகுப்பறை திறப்பு விழா நடைபெற்றது. இத்திறன் வகுப்பறைக்கான பொருட்கள் இரத்தினம் அறக்கட்டளை நிறுவுனர் இ. நித்தியானந்தன் மற்றும் லண்டன் பழைய மாணவர் சங்கத்தினரது நிதி அனுசரணையுடன் அன்பளிப்பு செய்யப்பட்டது.*

*இந்நிகழ்வில் பிரதம விருந்தினரான அருளம்பலம் ஆனந்தராசா, சிறப்பு விருந்தினரான சி.மதியழகன் (பிரதிக் கல்விப்பணிப்பாளர்_திட்டமிடல் பிரிவு, வலிகாமம் கல்வி வலயம்) ஆகியோர் திறன் வகுப்பறைக்கான பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்து வைத்தனர். அவர்கள் திறன் வகுப்பறையை நாடா வெட்டி உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தனர்.*

*அதனைத் தொடர்ந்து பிரதி அதிபர் திருமதி வதனி தில்லைச்செல்வனின் வரவேற்பு உரையும், பாடசாலை மாணவனது திறன் பலகையைப் பயன்படுத்தி தாவரக்கலம் பற்றிய விளக்கமும் இடம் பெற்றன.*

*அதனைத் தொடர்ந்து அதிபர் உரையாற்றிய போது, இரத்தினம் அறக்கட்டளை நிறுவுனர் இ.நித்தியானந்தன் அவர்களுக்கும் லண்டன் பழைய மாணவர் சங்கத்துக்கும் இத்திறன் வகுப்றையை விஞ்ஞான பாடம் கற்கும் மாணவர்களது கற்றலை ஊக்குவிக்கும் முகமாகாக அன்பளிப்பாகத் தந்துதவியமைக்கு நன்றி தெரிவித்தார்.*

*பிரதிக் கல்விப்பணிப்பாளர் சி.மதியழகன் தனது தனது உரையில், யா/ வட்டு இந்து கல்லூரி பல வரலாற்று சாதனைகளை பதிந்து வருகின்றது எனவும், இம்முறை க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சகல பிரிவுகளிலும் சிறந்த பேறுபேறுகளை பெற்றுள்ளது எனவும் பாராட்டுத் தெரிவித்தார்.*

*பிரதம விருந்தினராக கலந்து கொண்ட அருளம்பலம் ஆனந்தராசா புதிய தொழில்நுட்ப மாற்றத்துக்கேற்ப மாணவர்கள் தொழில்நுட்ப சாதனங்களை கையாண்டு கற்கும் திறனை மேம்படுத்த வேண்டும் எனவும் அதற்கு தங்களது உதவிகள் எப்பொழுதும் இருக்கும் எனவும் குறிப்பிட்டார்.*





# கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் திருமலை எழுத்தாளருக்கான வாண்மை விருத்தி செயலமர்வு



*கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இலக்கியவாதிகள், எழுத்தாளர்கள் மற்றும் பெண் ஆளுமைகளை ஊக்குவிக்கும் முகமாக திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் பலதரப்பட்ட நிகழ்வுகள், ஒன்றுகூடல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி சரண்யா சுதர்சன் தலைமையில் நடைபெற்று வருகின்றன.*

*அந்த வகையில் கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் பிரதேச ரீதியாக கலாசார உத்தியோகத்தர்கள் ஏற்பாட்டில் பெண்கள் ஆளுமை விருத்தி ஒன்றுகூடல், கலை இலக்கிய மன்றங்களுக்கான ஒன்றுகூடல் மற்றும் எழுத்தாளர்களுக்கான பயிற்சிப் பட்டறைகள் நடைபெற்று வருகின்றன.*


*இதற்கமைய கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் திருகோணமலை மாவட்ட எழுத்தாளர்களுக்கான வாண்மை விருத்தி ஒருநாள் செயலமர்வு அண்மையில் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.*

*மாகாணப் பணிப்பாளர் திருமதி சரண்யா சுதர்சன் தலைமையில் இச்செயலமர்வில் நடைபெற்றது. சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர்களான வி.கோணேஸ்வரன், க.அன்பழகன், வி.குனபாலா,*

*மற்றும் திருமதி ம. சத்தியவானி ஆகியோரின் ஒழுங்குபடுத்தலில் இடம் பெற்ற இச்செயலமர்வுக்கு தென்கிழக்கு பல்கலைக்கழக மொழித்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி ஏ.எப்.எம். அஷ்ரப், ஓய்வுநிலை அதிபரும் மூத்த எழுத்தாளருமான திருமலை நவம் மற்றும் திருமதி பானு சுதாகரன், கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் கலை கலாசார சார்ப் புலம் பேராசிரியர் பாலசுகுமார் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.*

*இச்செயலமர்வில் இலக்கியவாதிகள், பெண் ஊடகவியளாலர்கள் மற்றும் எழுத்தாளர்கள் என பல்துறை சார்ந்த எழுத்தாளர்கள் கலந்து கொண்டனர்.*








**பா.விபூஷிதன்...**
*(திருகோணமலை)*

# இந்தியாவில் அடுத்த ஆண்டு ஓகஸ்ட் வரை சுதந்திரதின பவளவிழா கொண்டாட்டங்கள்




**பிரித்தானியரின் ஏகாதிபத்தியத்தில் இருந்து இந்தியா சுதந்திரமடைந்ததன் 75 ஆம் ஆண்டு நிறைவான பவளவிழா கொண்டாட்ட நிகழ்வுகள் தற்போது அனைத்து மாநிலங்களிலும் விமரிசையாக நடைபெற்று வருகின்றன.**



## இலங்கையின்நெருக்கடி வேளைகளிலெல்லாம் விரைந்தோடி வந்து கைகொடுக்கும் தேசம் பாரதம்

இந்தியாவின் 75 ஆவது சுதந்திர தினத்தையொட்டி, 'ஆசாதி கா அம்ரித் மகோத்சவ்' (Azadi ka Amrit Mahotsav) என்ற பெயரில் பெருவிழா கொண்டாட்டங்கள் இந்தியா முழுவதும் கடந்த ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி ஆரம்பமாகின. இக்கொண்டாட்டங்கள் அடுத்தாண்டு ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி வரை கொண்டாடப்படுமென இந்திய அரசு அறிவித்திருந்தது. அதன்படி, இந்தியாவின் 75 வது சுதந்திர தின அம்ரித் மகோத்சவம் ஒரு வருட காலத்துக்கு சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

அதேசமயம் இந்தியப் பிரஜைகள் மற்றும் இந்திய வம்சாவளி மக்கள் வாழ்கின்ற நாடுகளிலும் இவ்விழா தொடர்பான நிகழ்வுகள் தற்போது நடைபெற்று வருகின்றன. அந்நாடுகளில் உள்ள இந்தியத் தூதரகங்களில் இக்கொண்டாட்டங்கள் நடைபெற்று வருகின்றன. மாணவருக்கான நிகழ்வுகளும் பல நாடுகளில் நடைபெறுகின்றன.

சுதந்திர இந்தியாவின் பவளவிழாவை சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென்று இந்திய அரசு ஏற்கனவே மக்களைக் கேட்டுக் கொண்டிருந்தது. அதற்கேற்ப அனைத்து மாநிலங்களிலும் இது தொடர்பான நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. 75 ஆண்டுகால சுதந்திர இந்தியாவை கொண்டாடும் விதமாக, இந்திய அரசு அறிவித்த 'வீடுதோறும் மூவர்ணம்' என்ற திட்டத்துக்குப் பிறகு இன்னும் வேகமாக தேசியக் கொடி குறித்த பதிவுகள் சமூக ஊடகங்களில் காணப்படுகின்றன.

அத்துடன், மூவர்ணக் கொடியை அடையாளப்படுத்தும் வகையில் பல நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. மூவர்ண தேசியக் கொடி மீதான குடிமக்களின் பற்று ஆழமாகும் என்றும் இது குடிமக்கள் மத்தியில் தேசபக்தி உணர்வை மேலும் வலுப்படுத்தும் என்றும் அரசு தெரிவித்திருந்தது.

இந்தியா விடுதலை அடைந்து 75 ஆண்டுகள் நிறைவையொட்டி, கடந்த ஓராண்டாக அம்ரித் மகோத்சவ் என்ற பெயரிலான இந்திய சுதந்திர பெருவிழா நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது. இதனை முன்னிட்டு, தேசியக்கொடி வண்ணத்திலான தலைப்பாகை அணிந்து வந்திருந்த பிரதமர் மோடி, டெல்லி செங்கோட்டையில் தேசியக்கொடி ஏற்றி, வணக்கம் செலுத்தி நாட்டு மக்களுக்கு உரையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

75வது சுதந்திர தின விழாவைக் கொண்டாடும் வகையில் மத்திய நிதியமைச்சகம் சார்பில் சிறப்பு அடையாள வாரம் கொண்டாடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இதை டெல்லியில் பிரதமர் நரேந்திர மோடி அண்மையில் ஆரம்பித்து வைத்திருந்தார். அவ்வேளையில் ரூபா1, ரூ.2, ரூ.5, ரூ.10 மற்றும் ரூ.20 நாணயங்களை பிரதமர் மோடி வெளியிட்டிருந்தார். இந்த நாணயங்களை பார்வையற்றோரும் அடையாளம் தெரிந்து கொள்ள முடியும். சுதந்திரம் அடைந்ததன் 75வது ஆண்டு விழா முத்திரையுடன் இந்த நாணயங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

மேலும், மக்களுக்கு நேரடியாக அவர்களது வங்கிக் கணக்கில் பணம் செலுத்தப்பட்டு வரும் மத்திய அரசின் 12 திட்டங்கள் பற்றிய 'ஜன சமர்த்' என்ற பெயரிலான இணையதளத்தையும் பிரதமர் மோடி ஆரம்பித்து வைத்திருந்தார்.



## இலங்கையுடன் வரலாற்று ரீதியாக நீடித்துவரும் இருதரப்பு நெருக்கமான நட்புறவு

இதுஒருபுறமிருக்க, இந்திய தேசத்தின் மிகவும் நெருங்கிய நட்புநாடான இலங்கையும் ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரம் பெற்ற 75 ஆண்டு நிறைவை அடுத்த வருடம் பெப்ரவரி மாதத்தில் கொண்டாடவிருக்கின்றது. இந்தியாவினதும் இலங்கையினதும் சுதந்திரதின பவளவிழா கொண்டாட்டங்கள் சுமார் ஆறுமாத கால இடைவெளியில் நடைபெறுகின்ற இவ்வேளையில், இவ்விரு நாடுகளுக்குமிடையிலான வரலாற்றுரீதியான நெருங்கிய நட்புறவுகள் தொடர்பாக நோக்க வேண்டியது இவ்வேளையில் அவசியமாகும்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான தொடர்புகள் நீண்டகால வரலாறு கொண்டவையாகும். இந்தியாவின் வடபிரதேசத்திலிருந்து இளவரசன் விஜயனும், அவனது தோழர்களும் இலங்கையை வந்தடைந்ததில் இருந்து இருநாடுகளுக்கும் இடையிலான நட்புறவுத் தொடர்புகள் ஆரம்பமாகிவிட்டதாக வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

கலை, கலாசார பாரம்பரியத் தொடர்புகள் இருநாடுகளுக்குமிடையில் மிகவும் நெருக்கமானவையாகும். அத்தொடர்புகளை கருங்கல் செதுக்கல் கலைகள் பறைசாற்றுகின்றன.

இந்தியாவின் மௌரிய வம்சத்து சக்கரவர்த்தியான அசோக மன்னன் காலத்தில் இந்தியாவிலிருந்து பௌத்த சமயம் இலங்கைக்குப் பரவியதும், எமது நாட்டில் கலைகலாசார நாகரிகமும் மேம்படத் தொடங்கியது. பௌத்த சமயத்தை மாத்திரமன்றி அதனோடு இணைந்த விழுமியப்பண்புகளும் இலங்கையில் வளரத் தொடங்கின. அவ்வாறான பூர்வீகத் தொடர்புகள் இன்றும் இருநாடுகளுக்கும் இடையில் தொடர்ந்து கொண்டே செல்கின்றன.

இலங்கையில் நெருக்கடி ஏற்படுகின்ற வேளைகளிலெல்லாம் ஓடோடி வந்து உதவிக்கரம் நீட்டுகின்ற முதலாவது நாடு இந்தியா ஆகும். கொரோனா பேரிடர் இலங்கையில் தீவிரமடைந்த போது நிவாரணங்களையும், தடுப்பூசிகளையும் இந்தியா வழங்கியிருந்தது.

அது தவிர இலங்கையில் பொருளாதார நெருக்கடி நிலவிய வேளையில் இந்தியா வழங்கிய உதவிகள் என்றுமே மறக்க முடியாதவையாகும். அயல் நாட்டுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் இந்தியாவின் ஆதரவுகள் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன. இந்தியா தனது 75 ஆவது சுதந்திர தின பவளவிழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்ற இவ்வேளையில் இலங்கையுடனான நட்புறவையும் வலுப்படுத்தியபடி வருகின்றது.

**எஸ்.சாரங்கன்...**

# சர்வதேச விளையாட்டு அரங்கில் பிரகாசிக்கும் இலங்கை இராணுவ வீரர்கள், வீராங்கனைகள்

**சர்வதேச விளையாட்டு அரங்கில் பிரகாசித்து, எமது தாய் நாட்டைப் பெருமைப்படுத்திய இராணுவ விளையாட்டு நட்சத்திர வீர, வீராங்கனைகள் ஸ்ரீ ஜயவர்தனபுர இராணுவத் தலைமையகத்தில் இராணுவத் தளபதி லெப்டினன்ற் ஜெனரல் விக்கும் லியனகே அவர்களினால் கடந்த செவ்வாய்க்கிழமை (20) கௌரவிக்கப்பட்டனர்.**

இந்த விளையாட்டு நட்சத்திரங்கள், கிரிக்கெட், வலைப்பந்து மற்றும் உடற்கட்டமைப்பு ஆகிய சர்வதேச விளையாட்டுகளில் எமது தாய்நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தி அளப்பரிய பங்களிப்பை வழங்கியுள்ளனர்.

இராணுவ கிரிக்கெட் அணியில் இருந்து சார்ஜன்ட் மகேஷ் தீக்ஷன இலங்கை கிரிக்கெட் அணியின் சிறந்த வீரராக தனது திறமையினை வெளிப்படுத்தியுள்ளார். இவர் 2022 செப்டம்பர் 07 ஆம் திகதி ஆர். பிரேமதாச விளையாட்டரங்கில் தென்னாபிரிக்காவிற்கு எதிராக நடைபெற்ற சர்வதேச கிரிக்கெட் போட்டியில் 04 விக்கெட்டுகளை கைப்பற்றினார். பின்னர் அவர் சர்வதேச டி 20 மற்றும் டெஸ்ட் கிரிக்கெட்டுகளுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இப்போது இலங்கை கிரிக்கெட் சுழற்பந்து வீச்சாளர்கள் பட்டியலில் அவர் சிறந்த வீரராக உள்ளார். இலங்கைக்கு எதிரான 2022 ஆசிய கோப்பை வெற்றியில் திறமையான வீரராக இருந்த அவர், இப்போது உலக டி20 பந்து வீச்சாளர்கள் தரவரிசையில் 8 ஆவது இடத்தில் உள்ளார். அவரது அர்ப்பணிப்பைப் பாராட்டிய இராணுவம், இராணுவத் தளபதியின் ஆசீர்வாதத்துடன் அவரை சாதாரண சிப்பாயில் இருந்து சார்ஜன்ட் நிலைக்கு உயர்த்தியது.

சில வாரங்களுக்கு முன்னர் ஆசிய வலைப்பந்து சம்பியன்ஷிப் 2022 கிரீடத்தைப் பெறுவதற்கு பங்களித்த வலைப்பந்து வீராங்கனைகளான கோப்ரல் பாஷினி டி சில்வா, கோப்ரல் திசல அல்கம மற்றும் கோப்ரல் இதுஷா ஜனனி ஆகியோருக்கு அவர்களின் தைரியம் மற்றும் அர்ப்பணிப்புக்கு மதிப்பளிக்கும் வகையில் இராணுவத் தளபதியின் வழிகாட்டுதலின் கீழ் அவர்கள் சாதாரண சிப்பாயிலிருந்து கோப்ரல் நிலைக்கு உயர்த்தப்பட்டனர். திசல அல்கம மற்றும் பாஷினி டி சில்வா ஆகியோர் இந்த ஆண்டு போன்றே 2015 ஆம் ஆண்டு ஆசிய கோப்பை வென்ற வலைப்பந்து அணியில் இருந்தனர்.









இதேபோல், இராணுவத் தளபதியுடனான இந்த சிறப்பு சந்திப்பில் செப்டம்பர் 2ஆம், 5ஆம் திகதிகளில் கிர்கிஸ்தானின் பிஷ்கெக்கில் நடைபெற்ற 2022 ஆசிய உடற்கட்டமைப்பு போட்டியில் வெண்கலப் பதக்கம் (65 கிலோ) வென்ற உடற்கட்டமைப்பாளர் கோப்ரல் பிரசன்னவும் இராணுவத் தளபதியை சந்தித்தார். இந்தச் சந்திப்பில், இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் வி க்கும் லியனகே , வீர வீராங்கனைகளின் தேசத்திற்கான விலைமதிப்பற்ற பங்களிப்பைப் பாராட்டியதுடன், அவர்களுக்கு நிதி வெகுமதிகள் மற்றும் பாராட்டுச் சின்னங்களையும் வழங்கி வைத்தார்.

**எம்.எஸ்.எம்.நஜாத்...**

# தெளிவத்தை ஜோசப் எழுதிய சிறுகதைகளின் தொகுப்பு நூல் இம்மாதம் வெளியாகிறது

**மலைநாட்டு எழுத்தாளர் மன்றத் தலைவர் தெளிவத்தை ஜோசப்பின் 54 சிறுகதைகளைக் கொண்ட பெருந்தொகுதியாக 'தெளிவத்தை ஜோசப் கதைகள்' தொகுப்பு நூல் இம்மாத இறுதியில் வெளியாகிறது. மு.நித்தியானந்தன், எச்.எச்.விக்ரமசிங்க ஆகியோரின் பதிப்பில் இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது.**






'நாமிருக்கும் நாடே'(1979), மீன்கள்'(2013), 'தெளிவத்தை ஜோசப் சிறுகதைகள்' (2014) ஆகிய மூன்று சிறுகதைத் தொகுதிகள் ஏற்கனவே வெளிவந்த எழுத்தாளர் ஜோசப்பின் சிறுகதைத் தொகுதிகளாகும். இதுவரை நூல் வடிவம் பெறாத பல சிறுகதைகள் இத்தொகுப்பிற்காக இலங்கை தேசிய சுவடிகள் திணைக்களத்திலிருந்து எச்.எச். விக்ரமசிங்கவினால் தேடிப் பெறப்பட்டுள்ளன. ஆயினும் சில கதைகளை எங்கும் பெற்றுக் கொள்ள முடியாது போய்விட்டது. எனினும் தேடிப் பெறப்பட்ட சிறுகதைகளின் முழுத் தொகுதியாக இந்நூல் வெளியாகிறது.

## இலங்கையிலும், லண்டனிலும் வெளியீட்டு நிகழ்வுகள்

இந்நூலின் அட்டைப் படத்தை ஓவியர் கே.கே. ராஜா வரைந்தளித்துள்ளார். சிறுகதை எழுத்தாளரும் பதிப்பாளருமான கோ.ஒளிவண்ணன் தமிழகத்தில் இந்நூல் பதிப்பை மேற்கொண்டு வருகிறார்.

'நாமிருக்கும் நாடே' என்ற சிறுகதைத் தொகுப்பிற்காக இலங்கை அரசின் சாகித்திய மண்டல விருதைப்பெற்ற முதல் மலையக எழுத்தாளராக தெளிவத்தை ஜோசப் வரலாற்று முக்கியம் பெறுகிறார்.

'தெளிவத்தை ஜோசப் கதைகள்' நூல் வெளியீட்டு நிகழ்வுகள் அக்டோபர் மாதத்தில் லண்டனிலும் இலங்கையிலும் நிகழவிருக்கின்றன.

**எச்.எச்.விக்ரமசிங்க...**

# மாணவ தலைவர்கள் ஒழுக்கத்தின் வழிகாட்டிகளாகத் திகழ வேண்டும்

## அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அறிவுரை

**வாழ்வில் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து வாழ்வதே தலைசிறந்த நெறியாகும். நல்ல பண்புகள் உள்ளவன் நல்ல ஒழுக்கம் உடையவன் என்று குறிப்பிடப்படுகின்றான். நீதிநெறிகளை நமக்கு வலியுறுத்தும் நோக்குடன் நம் முன்னோர் இயற்றிய நீதிநூல்கள் பல நீதிக் கருத்துக்களை நமக்கு எடுத்துரைப்பதாக உள்ளன.**

அந்த வகையில் திருக்குறள் உலக அளவில் தமிழர்களின் ஒழுக்க நெறிகளை பறைசாற்றும் ஒப்பில்லாத நூலாகப் போற்றப்படுகின்றது. ஒருவன் வாழ்க்கையில் மேன்மை அடைய வேண்டுமாயின் ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். இதனை

'நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும்'

எனும் குறள் வெளிப்படுத்துகின்றது.

மாணவர்கள் பாடசாலையில் ஒழுக்கத்துடன் கல்வி பெற்று சமூகத்தில் முன்மாதிரியாக மிளிர வேண்டும். அந்த உயர் பணியை கல்விச் சமூகம் முன்னெடுத்து வருவது கண்கூடு. இச்சந்தர்ப்பத்தினை ஒவ்வொரு மாணவரும் சரியாகப் பயன்படுத்தி வெற்றிகாண வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ், அட்டாளைச்சேனை மத்திய மகா வித்தியாலயத்தில் (தேசிய பாடசாலை) மாணவர் தலைவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மாணவர் தலைவர்களின் சத்தியப் பிரமாணம் மற்றும் பதக்கம் அணிவிக்கும் நிகழ்வு பாடசாலை பிரதான மண்டபத்தில் அண்மையில் விமர்சையாக நடைபெற்றது.

கல்லூரி அதிபர் ஏ.சி.எம்.ஹரீஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ.எம்.எஸ்.டீ.விஜேதுங்க, போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரி கே.டீ.ஏ.திலக்சிறி ஆகியோர் அதிதிகளாகக் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய பிரதம அதிதி அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ.எம்.எஸ்.டீ.விஜேதுங்க பேசுகையில், "மாணவத் தலைவர்கள் கர்வமின்றி, ஒழுக்கத்துடன் நடந்து ஏனைய மாணவர்களுக்கு முன்மாதிரியாக விளங்க வேண்டும்" எனக் குறிப்பிட்டார்.

"இன்று சத்தியப் பிரமாணம் செய்துகொண்ட மாணவத் தலைவர்களை வாழ்த்தி, அவர்களின் எதிர்காலம் சிறக்க பிரார்த்திக்கும் அதேவேளை, மாணவத் தலைவர்களுக்குத் தேவையான தலைமைத்துவப் பயிற்சி மற்றும் இதர உதவிகளை வழங்குவதற்கு அக்கரைப்பற்று பொலிஸ் நிலையம் எப்போதும் தயாராக உள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் ஏ.சி.எம்.ஹரிஸ் பேசுகையில், "சர்தேச ரீதியில் மனிதர்களின் இயல்பு வாழ்க்கையை வெகுவாகப் பாதித்த கொவிட் 19 வைரஸ் தொற்று மற்றும் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி நிலைமைகளினால் மாணவர்கள் அதிகம் சிரமங்களை எதிர்கொண்டனர்.

மாணவர் கல்வி பாதிக்கப்பட்டதுடன், ஒழுக்கம் சீர்குலைந்து காணப்பட்டது. இந்நிலைமைகளை தொடரவிடாது, மீட்டெடுக்க வேண்டிய பாரிய பொறுப்பு கல்வித் துறையினர், அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றார்களுக்குண்டு. பாடசாலையின் பணியை நாம் கல்வி அமைச்சின் வழிகாட்டல், ஆலோசனைக்கமைவாக வெற்றிகரமாக நிறைவேற்றி வருகின்றோம்.மாணவர்கள் தமக்கு

வழங்கப்பட்ட பொறுப்புக்களை சரிவர ஏற்று ஏனைய மாணவர்களை திறமையாக வழிகாட்ட வேண்டும்" என்றார். இந்நிகழ்வில், பிரதி, உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள் கலந்து சிறப்பித்தனர்.





**முகம்மட் றிஸான்...**
*(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)*

## அரச வருமானத்தை... (03ஆம் பக்கத் தொடர்)

சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

எமது நாட்டில் 10 விதமான வரி அறவீட்டு முறைகள் காணப்படுகின்றன. எனினும் அரசாங்கத்திற்கு வரி செலுத்த வேண்டிய பெரும்பாலானோர் வரி செலுத்துவதில்லை. இந்த அனைத்து வரிகளையும் பொதுவான ஒரே வரியாக அனவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

வர்த்தக வரி, போக்குவரத்து வரி, குத்தகை வரி உட்பட50 வருடங்களுக்கு முன்னர் நடைமுறையில் இருந்த வருமான வரியே இன்றும் நடைமுறையில் உள்ளது. அதில் மாற்றம் ஏற்படுவது அவசியம்.

அத்துடன் வரி செலுத்த தவறும் நபர்களுக்காக வெளிநாடுகளில் குற்றவியல் சட்டத்தின் கீழ் தண்டனை வழங்கப்படுகின்றது. அது போன்ற தண்டனையை நமது நாட்டிலும் அறிமுகப்படுத்துவது அவசியம். அவ்வாறான சட்டம் கொண்டுவரப்பட்டு பாராளுமன்றத்தில் அது நிறைவேற்றப்பட வேண்டும்.

அரசாங்க ஊழியர்களின் அடிப்படை சம்பளத்திற்கேற்ப வரி அறவிடப்படுவதை விடுத்து அவர்களது முழுமையான சம்பளத்திற்கான வரி அறவிடப்பட வேண்டும்.

வரிவருமானத்தை முறையாக முகாமைத்துவம் செய்தால் நாட்டின் தற்போதைய 60 வீதமான பிரச்சினைகளுக்கு அது தீர்வாக அமையும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இறுதிச்சடங்கில் கலந்து கொள்கிறார்...

அபிவிருத்தி வங்கி ஆளுநர்கள் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக அங்கு சென்று பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி பொங் பொங் மார்கோஸை சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளதாக உத்தியோகபூர்வமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த சந்திப்பின் பின்னர் ஜனாதிபதி எதிர்வரும் 30ஆம் திகதி நாடு திரும்பவுள்ளார்.

## ரயிலுடன் மோதுண்டு...

தம்பதியினரை ஏற்றிச் சென்ற காரை ரயில் மோதி ஏற்பட்ட இவ் விபத்தில் காரில் பயணித்த பெண் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மிரிஹான தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

பகிரிவத்த ரயில் நிலையத்துக்கு அருகில் வசிக்கும் அந்த தம்பதியினர் நேற்று (21) அதிகாலை திம்புலாகல பகுதிக்கு செல்வதற்காக வீட்டை விட்டு வெளியேறிய போதே இந்த விபத்துக்கு முகம் கொடுத்துள்ளனர்.

அ வி ச ா வ ளை ள யி லி ருந் து கொழும்பு நோக்கி பயணித்த ரயிலே பங்கிரிவத்த ரயில் கடவைக்கு அருகில் காரை மோதியுள்ளது.

## உள்ளூராட்சி தேர்தல் திகதி...

தீர்மானிக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் கட்டளைச்சட்டத்திற்கு அமைவாக, தேர்தலை நடத்துவதற்கு நேற்று (21) முதல் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் காணப்படுவதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன்...

இடையில் (20) சந்திப்பொன்று நடைபெற்றது.

இச் சந்திப்பில் பொதுநலவாய செயலகத்துக்கும் இலங்கைக்கும் இடையிலான பரஸ்பர ஒத்துழைப்பு தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டது. இதேவேளை, பொதுநலவாய நாடுகளின் வெளிவிவகார மற்றும் அபிவிருத்திக்கான இராஜாங்க செயலாளர் ஜேம்ஸ் கிளவெலி (James cleverly) ஏற்பாடு செய்திருந்த வரவேற்பு நிகழ்வு கடந்த 18ஆம் திகதி சார்ளி இல்லத்தில் நடைபெற்றது. இதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கேற்றதோடு,உலக நாட்டு தலைவர்களுடன் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளும் வாய்ப்பும் இதன் போது ஜனாதிபதிக்கு கிடைத்தது.

## விசேட மருத்துவர்கள் ஓய்வு... (03ஆம் பக்கத் தொடர்)

நாட்டில் ஒரே நாளில் 300 விஷேட மருத்துவர்கள் ஓய்வு பெறப் போகின்றனர்.

பலர் நாட்டிலிருந்து வெளியேறியுள்ள நிலையில் கொழும்பு கண்டி அரசாங்க வைத்தியசாலைகள் புற்றுநோய் வைத்தியசாலை மற்றும் சிறுவர் வைத்தியசாலைகளிலிருந்து இவர்கள் ஓய்வு பெறுவதால் விசேட மருத்துவர்களுக்கான பெரும் தட்டுப்பாடு ஏற்படப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

அதற்கு பதில் அளிக்கும் வகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

## நீர்கொழும்பில் விபசார...

ஒருவரும் விபசாரத்தில் ஈடுபடும் நோக்கத்தில் தங்கியிருந்த சந்தேகத்தின் பேரில் மூன்று பெண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் ( 20) இரவு நீர்கொழும்பு , குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளினால் இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 20 மற்றும் 25 வயதுக்கு இடைப்பட்ட பலாங்கொடை, தெஹியத்தகண்டிய மற்றும் தொடுவாவ பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என தெரிவித்த நீர்கொழும்பு பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மண்வெட்டி தாக்குதலில்...

பொலிஸார் கூறினர்.

மண்வெட்டியால் தாக்கப்பட்ட 67 வயதான நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன் 16 வயதான சிறுவன் பலத்த காயமடைந்து கல்கமுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் 42 வயதான ஒருவர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தம்...

நந்தலால் வீரசிங்க, ஒப்பந்தங்களைப் பெற்ற பின்னர், சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு வழங்கும் நிதியுதவி குறித்து இறுதித் தீர்மானம் எட்டப்படும் என்றும் தெரிவித்தார்.

சர்வதேச நிதி நெருக்கடியின் எதிர்கால வேலைகளுக்கு கடன் வழங்குநர்களிடமிருந்து ஒப்பந்தம் ஒரு தீர்க்கமான காரணியாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க கொழும்பில் நடைபெற்ற மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

## இலங்கையர் ஏழு பேரும்...

அதிகாரிகள் நேற்று முன்தினம் கிவ் நகரில் அவர்களைச் சந்தித்து நிலைமைகளை ஆராய்ந்த பின்னரே இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக துருக்கியிலுள்ள இலங்கை தூதரக அதிகாரி ஒருவர் தெரிவிக்கும்போது, இந்த 07 பேரும் சட்டவிரோதமாக குடியேறியவர்கள். அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி, அனைத்து உதவிகளையும் செய்து வருகிறோம். எமது தூதர் நேற்று முன்தினம் அவர்களைச் சென்று பார்வையிட்டு அவர்களின் தேவைகள் அனைத்தையும் வழங்கினார். அவர்கள் நலமாகவும் பாதுகாப்பாகவும் உள்ளதாக தெரிவித்துள்ளாரென்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் வெளிநாடொன்றுக்கு செல்லும் நோக்கில் ஒவ்வொருவரும்

பல மில்லியன் ரூபாய்கள் செலுத்தியே அங்கு சென்றுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்ததாக அந்த உயரதிகாரி மேலும் தெரிவித்தார்.

## இறக்குமதி செய்யப்படும் அரிசி...

உறுப்பினர் மயந்த திஸாநாயக்க விசேட கூற்றொன்றை முன்வைத்து குறிப்பிடுகையில்,

கடந்த ஜனவரி மாதத்தில் இருந்து நாட்டுக்கு சுமார் 15 மெட்ரிக் தொன் அரிசி கொண்டுவரப்பட்டிருக்கின்றது. இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் அரிசி மக்களுக்கு பயன்படுத்த உகந்ததல்ல என சமூக வலைத்தளங்களில் பிரசாரமாகி வருகின்றது. அத்துடன் இந்த அரிசி தற்போது சந்தைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. அதனால் இதன் உண்மைத்தன்மை தொடர்பில் அமைச்சர் தெளிவுபடுத்த வேண்டும் என கேட்டுக்கொணடார்.

இதற்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மஹிந்த அமரவீர இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாட்டில் ஏற்பட்டிருந்த அரிசி தட்டுப்பாடு காரணமாகவே வெளிநாடுகளில் இருந்து அரிசி இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுத்தோம். இறக்குமதி செய்யப்படும் அரிசி அந்த நாடுகளில் பாவிக்கப்படுவதாகும்.

என்றாலும் வெளிநாடுகளில் இருந்து கொண்டுவரப்படும் அரிசியை விட எமது நாட்டில் விவசாயிகளினால் உற்பத்தி செய்யப்படும் அரிசி தரத்தில் உயர்ந்த நிலையில் இருக்கின்றது என்றே நாங்கள் தெரிவிக்கின்றோம். ஏனெனில் விவசாயத்துக்கு பயன்படுத்தும் உரம் தரம் மிக்கதாகும். நாங்கள் மனித உடலுக்கு ஆரோக்கியமற்ற பல கிருமினாசினிகளை தடைசெய்திருக்கின்றோம். எமது வயல் நிலங்களில் அதிகமாக இரசாயன உரத்தைவிட சேதன பசளையே பயன்படுத்தப்படுகின்றது. அதனால் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசியைவிட எமது நாட்டில் உற்பத்தி செய்யப்படும் அரிசி பாவனைக்கு மிகவும் உகந்தது.

அந்த நாடுகளில் மக்கள் இந்த அரிசியை அவர்களின் உணவுக்காக எடுத்துக்கொள்கின்றனர். நாங்கள் தெரிவித்த கருத்தை சரியாக விளங்கிக் கொள்ளாமலேயே ஊடகங்களிலும் சமூக வலைத்தலங்களிலும் இறக்குமதி செய்யப்படும் அரிசி தொடர்பில் திரிபுபடுத்தி பிரசாரம் செய்யப்படுகிறது என்றார்.

## உபயோகத்துக்கு உதவாத...

சர்வதேச நாடுகளுக்கு விற்பனை செய்ய தீர்மானித்துள்ளதாக ஊடகத்துறை மற்றும் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அரசாங்கம் நிதி நெருக்கடிக்கு மத்தியில் அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதில் கூட சவால்களை எதிர்கொண்டு வருவதாக குறிப்பிட்ட அமைச்சர் பயன்படுத்த முடியாத நிலையிலுள்ள ரயில் தண்டவாளங்களை சர்வதேச விலைமனுகோரல் மூலமாக விற்பனை செய்வதற்கு தீர்மானித்துள்ளதாகவும் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம் பெற்ற வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் அசோக அபேசிங்க எம்பி எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்,

ரயில் சேவைகளை சிறந்த முறையில் முன்னெடுத்து செல்வதற்கு தேவையான அடிப்படை உபகரணங்களை கொள்வனவு செய்வதிலும் நிதி நெருக்கடி காணப்படுகிறது.

அதனைக் கருத்திற்கொண்டே பயன்படுத்த முடியாத நிலையிலுள்ள ரயில் தண்டவாளங்களை சர்வதேச விலை மனுக்கோரலுக்கிணங்க விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

## நச்சுத்தன்மை கொண்ட 'திரிபோஷ'...

தெரிவித்தார்.

அதே வேளை போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் தெரிவித்த அமைச்சர், திரிபோஷ விவகாரம் தொடர்பில் அறிவுபூர்வமான அறிக்கையை சபையில் சமர்ப்பிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் மருந்து தட்டுப்பாடு காணப்படுகின்றது என்பதை ஏற்றுக் கொள்வதாகவும் மருந்து தட்டுப்பாடு பாரதூரமான வகையில் அல்ல எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில், கர்ப்பிணித் தாய்மாருக்கும் பிள்ளைகளுக்கும் திரிபோஷ விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் அவற்றை மீளப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் பொதுச் சுகாதார சேவைகள் சங்கத்தின் தலைவர் முன்வைத்துள்ள குற்றச்சாட்டின் உண்மைத் தன்மை என்ன என ஐக்கிய மக்கள் சக்தி எம்பி ரோஹிணி கவிரத்ன எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்:

வெளிநாட்டுக் கையிருப்பு பற்றாக்குறையால் நாட்டில் மருந்து தட்டுப்பாடு காணப்படுகிறது என்பதை நாம் மறுக்கவில்லை. எனினும் உயிர்காக்கும் அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு கிடையாது. மருந்து தட்டுப்பாடு காணப்படும் போதும் அது பாரிய அளவில் கிடையாது.

நாட்டின் ஒரு சில மாவட்டங்களில் மருந்து தட்டுப்பாடு காணப்படுவதாக வைத்தியசாலை தரப்பினர் தெரிவித்து வருவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

அரசியல் நோக்கங்களுக்காக திட்டமிட்ட வகையில் மருந்து தட்டுப்பாடென்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது.

இலங்கையின் போஷாக்கின்மை தொடர்பில் யுனிசெப் வெளியிட்டுள்ள அறிக்கை தொடர்பில் யுனிசெப் நிறுவனத்துடன் பேசசுவார்த்தை மேற்கொண்டேன்.

2016ஆம் ஆண்டு மேற்கொண்ட மதிப்பீடு மற்றும் ஆய்வு அறிக்கையை அடிப்படையாக கொண்டே யுனிசெப் நிறுவனம் 2022ஆம் ஆண்டு அறிக்கையை வெளியிட்டுள்ளது. அவ்வறிக்கையில் இலங்கையின் நிலை தரப்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் யுனிசெப் நிறுவனம் கவலை தெரிவித்துள்ளது.

நச்சுத்தன்மை கொண்ட திரிபோஷ விநியோகிக்கப்பட்டுள்ளதாக வெளியிடப்பட்டுள்ள செய்திகள் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானவை. திரிபோஷ உற்பத்தியின் போது அப்ளொடொக்ஷின் அடங்கிய சோளம் நீக்கப்படும்.பொது சுகாதார சேவைகள் சங்கத்தின் தலைவர் முன்வைத்துள்ள குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

சுகாதாரத்துறை தொடர்பில் உண்மைக்கு புறம்பான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து நாட்டு மக்களை தவறாக வழிநடத்தும் தரப்பினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.அரசியல் நோக்கங்களுக்காக சுகாதாரத் துறையை பயன்படுத்த வேண்டாம் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## ஜனாதிபதியின் திட்டம் யாழ்ப்பாணத்தில்...

புத்துயிரூட்டல் கேந்திர நிலையங்களை வலுவூட்டுவதற்கான பல்வகைத்துறைசார் ஒருங்கிணைந்த பொறிமுறையை உருவாக்குவதற்கான இக் கலந்துரையாடலில்,

நாட்டிலுள்ள அனைத்து பிரஜைகளுக்கும் நாட்டில் நிலவும் எந்தவொரு நிலமையின் கீழும் சுறுசுறுப்பான, ஆரோக்கியமான வாழ்க்கைக்குத் தேவையான போதுமான உணவை நியாயமான விலையில் பெற்றுக் கொள்வதற்கான இயலுமையை உருவாக்குதல் எனும் நோக்கத்துடன், உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு தொடர்பான மாவட்ட ஒருங்கிணைந்த பொறிமுறை, உணவு பாதுகாப்பு மற்றும் போஷாக்கு தொடர்பான பிரதேச ஒருங்கிணைந்த பொறிமுறை மற்றும் கிராமிய பொருளாதார புத்துயிரூட்டல் கேந்திர நிலையம் ஆகிய பொறிமுறைகளை உருவாக்குதல் தொடர்பாக ஆராயப்பட்டது.

மாவட்டத்துக்குள் உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மாவட்டத்தில் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தி போசாக்கின்மையை இல்லாமல் செய்தல், இது தொடர்பாக சரியான திட்டமிடல்களை மேற்கொள்ளுதல் மற்றும் மதிப்பீடுகள் செய்தல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

அடுத்த கட்டமாக யாழ். மாவட்டத்தில் பிரதேச மட்டக்குழுக்களும் கிராம மட்டக்குழுக்களும் நியமிக்கப்படவுள்ளதாக மாவட்டச் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ்.முரளிதரன், மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. செ. நிக்கொலஸ்பிள்ளை ஆகியோர் கலந்துகொண்டனர்.

அத்தோடு இணையவழி நிகழ்நிலை மூலம் ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் கலாநிதி ஜே.ஜி.எல். சுலக்ஷன, ஜனாதிபதியின் ஆலோசகர் கலாநிதி.வட்டகொட ஆகியோரும் கலந்துகொண்டிருந்தார்கள்.

அதேவேளை பிரதேச செயலாளர்கள், மாவட்ட செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர், கமநல சேவைகள் உதவி ஆணையாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், சமுர்த்தி பணிப்பாளர், மாகாண திணைக்கள தலைவர்கள், பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர், வர்த்தக சங்க தலைவர், வலயக் கல்வித் திணைக்கள அதிகாரிகள், மற்றும் பனை, தென்னை வள கூட்டுறவு சங்கம், சிறுவர் உத்தியோகத்தர்கள், மகளிர் உத்தியோகத்தர்கள், விதாதா வளநிலையம் மற்றும் துறைசார் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## 75 ஆவது சுதந்திர தினம்...

முன்னெடுப்பது தொடர்பில் இராஜாங்க அமைச்சர் அசோக்க பிரியந்த தலைமையில் இடம் பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

“ஒன்றாய் எழுவோம்“ என்ற தொனிப்பொருளில் 75 ஆவது சுதந்திர தினம் கொண்டாடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலவசமாக ரொட்டி...

மேற்காசிய நாடான ஐக்கிய அரபு அமீரகத்தின் டுபாயில், வெளிநாடுகளில் இருந்து வந்து பணிபுரிவோர் அதிக எண்ணிக்கையில் வசிக்கின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் கட்டட வேலை, கார் மற்றும் கனரக வாகன ஓட்டுனர்கள், ‘டெலிவரி’ ஊழியர்களாக பணியாற்றுகின்றனர். குடும்பத்தினருக்கு பணத்தை சேமிப்பதற்காக இவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் மூன்று வேளை சாப்பிடாமல் பட்டினியுடன் நாட்களை கழிக்கின்றனர். இந்நிலையை மாற்ற வேண்டும் என ஐக்கிய அரபு அமீரகத்தின் பிரதமர் ஷேக் முகமது பின் ரஷீத் அல் மக்தோம் கடந்த ஆண்டு தெரிவித்தார்.

இதன் ஒருபகுதியாக, டுபாயில் இலவச உணவு அளிக்கும், ‘வெண்டிங் மிஷின்’ எனப்படும், தானியங்கி இயந்திரங்களை நகரின் பல்வேறு பகுதிகளிலும் அவர் நிறுவியுள்ளார். இந்த உணவு இயந்திரங்கள் கடந்த 17ஆம் திகதி முதல் செயல்பாட்டுக்கு வந்தன. டுபாயின், ‘அஸ்வாக்’ மளிகை கடைகளின் வாயிலில் இந்த இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இதில், அரபி ரொட்டி மற்றும், ‘பிங்கர் ரோல்’ ஆகிய இரண்ட வகை உணவுகள், சுடச்சுட தயாரிக்கப்பட்டு ஒரு நிமிடத்தில் அளிக்கப்படுகின்றன. இந்த இலவச உணவு திட்டத்துக்கு தனிநபர்களும் நன்கொடை அளிக்கலாம் என டுபாய் அரசு தெரிவித்துள்ளது.

## மலேசியாவில் பத்தாயிரம்...

அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் மலேசியாவுக்கு விஜயம் செய்தார். அங்கு மலாக்கா மாநில ஆளுநர் உட்பட முக்கிய அரசியல் தலைவர்களைச் சந்தித்து அமைச்சர் கலந்துரையாடினார். இச்சந்திப்புக்களில் மலேசியாவுக்கான இலங்கைத் தூதுவர் எயார் சீப் மார்ஷல் சுமங்கள டயஸும் கலந்துகொண்டார்.

இச்சந்திப்பில் இலங்கையருக்கு தொழில்வாய்ப்புக்களை வழங்கும் அரசாங்கத்தின் வேண்டுகோள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

இதனை ஏற்றுக்கொண்ட அமைச்சர் சரவணன், மலேசியாவிலுள்ள சகல கைத்தொழில் நிறுவனங்கள், மலேஷிய தொழில்வாண்மை யாளர்கள் ஆகியோருக்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

இலங்கையரை, மலேசியாவின் சகல துறைகளிலும் வேலைக்கு அமர்த்தும் திட்டம் குறித்து பகிரங்கமாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இத் தொழில்துறைகளில் நிலவும் வெற்றிடங்கள் தொடர்பில் இணையங்களினூடாக தகவல்களைப் பெறுமாறும் இலங்கையருக்கு மலேசிய அரசாங்கம் அறிவுறுத்தியுள்ளது.

oscksm@mohr.gov.my மற்றும் jtksm@mohr.my ஆகிய இணையங்களுக்குள் பிரவேசித்து மலேசிய தொழில்துறைகளிலுள்ள வெற்றிடங்கள் பற்றி அறிந்துகொள்ளுமாறும் இலங்கையரிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கை அரசின் இந்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்டமைக்காக அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் மலேசிய அரசாங்கத்துக்கு நன்றி தெரிவித்தார்.

## பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக...

அது தொடர்பான நடவடிக்கைகளை ஜனாதிபதி செயலகம் மேற்கொண்டு வருவதாக சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதேவேளை, காணி வழங்கும் முறைமை தொடர்பில் ஆராய்வதற்காக தம்முடன் சுற்றாடல் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர்களென மூவரடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டு செயற்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் ராஜிகா விக்கிரமசிங்க எம்பி எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

ராஜிகா விக்கிரமசிங்க தமது கேள்வியின் போது:

நாட்டில் பெருமளவு காணிகள் வெறுமனே உள்ளதால் இளைஞர்கள் விவசாயத்தில் ஈடுபட ஆர்வம் காட்டும் இக்காலத்தில் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக காணிகளை பகிர்ந்தளிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

இதற்கு பதில் வழங்குகையில் மேலும் தெரிவித்த அமைச்சர்:

இரண்டு இலட்சம் காணி உறுதிப் பத்திரங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை ஜனாதிபதி செயலகம் மேற்கொண்டு வருகிறது.

அதேவேளை சுற்றுலாத் துறையை முன்னேற்றுவதற்கான செயற் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதியால் அமைச்சரவை உபகுழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. சுற்றுலா வலயங்களை இனம் கண்டு அத்துடன் புதிய சுற்றுலா வலயங்களை உருவாக்குவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## குருந்தூர்மலை ஆக்கிரமிப்புக்கு...

எல்லைப்படுத்தப்பட்டு நில ஆக்கிரமிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளமையானது வன்மையாக கண்டிக்கத்தக்கதென இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

குருந்தூர் மலையின் உச்சியில் அமைந்துள்ள ஆதிசிவன் ஐயனார் ஆலயம் தமிழர்களின் பாரம்பரிய ஆலயமாகும்.

இப்பகுதியில் உள்ள 632 ஏக்கர் நிலப்பரப்பில் தமிழர்கள் காலந்தொட்டுவிவசாயம்மேற்கொண்டுவந்தனர்.

2018 இல் ஏற்பட்ட சர்ச்சைகளை அடுத்து முழுக் குருந்தூர் மலையும் தொல்பொருளியல் ஆய்வுப் பகுதியாக பிரகடனப்படுத்தப்பட்டது.

ஆய்வுகளின் பெயரால் மக்களின் பிரசன்னம் தடுக்கப்பட்டது. இராணுவ படைகளைப் பயன்படுத்தி பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. மக்கள் புகாத பகுதியாக மாற்றப்பட்ட குருந்தூர் மலையில் தொல்பொருள் சின்னங்கள் கண்டறியப்பட்டன.

அவை பௌத்த சமயச் சின்னங்கள் என அடையாளப்படுத்தப்பட்டு, பௌத்த முத்திரை குத்தப்பட்ட சின்னங்களை அடிப்படையாக வைத்து ஆக்கிரமிப்பு அரங்கேற்றப்பட்டது.

இந்நிலையில் தமிழர்களின் பூர்வீக இடமாக திகழும் குருந்தூர்மலையை பௌத்த மயமாக்கும் நோக்கில் தொல்பொருள் திணைக்களத்தின் உதவியுடன் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளை வன்மையாக கண்டிக்கிறேன்.

இந்த விடயத்தில் அரசாங்கம் உடனடியாக தீர்மானம் எடுக்க வேண்டும். குருந்தூர்மலை என்பது தமிழ் மக்களின் பாரம்பரிய நிலம் என்பதற்கான அனைத்து சான்றுகளும் உள்ளன.

மதவாத போக்கில் அரங்கேற்றப்படும் இந்த நடவடிக்கை மக்களிடையே விரிசலை ஏற்படுத்தும் காரணியாக உள்ளது'' எனவே இது தொடர்பாக அரசாங்கம் முழுமையாக கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

## நீரிழிவு நோயை கட்டுப்படுத்த...

விசேட ஊடகவியலாளர் சந்திப்பு கராப்பிட்டியவில் உள்ள பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

அங்கு உரையாற்றிய ஆய்வுக் குழுவின் தலைவரும், மருத்துவ பீடத்தின் உயிரியல் துறை பேராசிரியருமான அனோஜா அத்தநாயக்க, கோவக்காய் செடியில் இருந்து இந்த மருந்து தயாரிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

கோவக்காய் இலையில் உள்ள இரசாயன பதார்த்தங்கள் தொடர்பில் நீண்ட கால ஆய்வுக்கு பின்னரே இந்த மருந்தை தயாரிக்க முடிந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஆய்வின் முடிவுகளின்படி, கோவக்காய் செடியின் இலைகளில் உள்ள இரசாயன பதார்த்தங்கள் இரத்தத்தில் உள்ள சீனியை குறைக்க வல்லவை என ஆய்வாளர்கள் உறுதி செய்துள்ளனர். இதனைப் பயன்படுத்தி மருந்து வில்லைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இந்த மருந்து மருத்துவ ஆராய்ச்சிக்கு அனுப்பப்பட்டது. இந்த பரிசோதனை 158 நீரிழிவு நோயாளிகளைப் பயன்படுத்தி நடத்தப்பட்டது. இதில் வெற்றிகிடைத்துள்ளது என தெரிவித்தார்.

இந்த மருந்துக்கான காப்புரிமை பெறப்பட்டுள்ளது என்றும் ஆராய்ச்சியில் இணைந்து கொண்ட ருஹுணு பல்கலைக்கழக மருத்துவ விஞ்ஞானப் பிரிவின் உடலியல் பேராசிரியர் திலக் வீரரத்ன தெரிவித்தார்.

ருஹுணு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் தலைமையில் எதிர்காலத்தில் இந்த மருந்து வணிக ரீதியாக தயாரிக்கப்படும் என ஆராய்ச்சியில் இணைந்த கலாநிதி பட்டத்தை எதிர்பார்த்துள்ள பியுமி வாசனா தெரிவித்தார். எவ்வாறாயினும் கோவக்காய் இலையில் உள்ள இரசாயனங்கள் கண்டறியப்பட்டு, மருத்துவ ஆராய்ச்சி மூலம் மருந்து தயாரிக்கப்பட்டுள்ள போதிலும், கோவக்காய் செடியை வெறுமனே சாப்பிட வேண்டாம் என மக்கள் கேட்டுக் கொள்ளப்படுவதாகவும் ஆய்வுக்குழு தெரிவித்துள்ளது.




# பிரவுன்ஸ்வீக் 07 பிரிவுகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் தொடர் போராட்டத்தில்

## 1000 ரூபாவை உடனடியாக வழங்குமாறு கோருகின்றனர்

**ஹற்றன் சுழற்சி நிருபர்**

மஸ்கெலியா பெருந்தோட்ட கம்பனிக்கு சொந்தமான மஸ்கெலியா பிரவுன்ஸ்வீக் தோட்ட தொழிலாளர்கள் தங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட நாளாந்த சம்பளம் 1000 ரூபாயை உடனடியாக வழங்குமாறு கோரி நேற்று தேயிலை தொழிற்சாலைக்கு முன்பாக எதிர்ப்பு கோசங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பிரவுன்ஸ்வீக் தேயிலைத் தோட்டங்களின் 07 பிரிவுகளைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்கள் கட்சி பேதமின்றி இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

இலங்கையில் 22 தோட்டக் கம்பனிகள் உள்ளதாகவும், அதில் மஸ்கெலியா பெருந்தோட்டக் கம்பனி மாத்திரம் ரூ.1000 கொடுப்பதில்லை எனவும் தெரிவித்தனர். அத்தோடு, நீதிமன்றத்தின் தீர்ப்பையும் மீறி தற்போது பொருளாதார நெருக்கடியால் தவிக்கும் தோட்டத் தொழிலாளர்களை மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனம் பாதாளத்திற்கு தள்ளியுள்ளது.

01 கிலோகிராம் மாவின் தற்போதைய விலை ரூபா 400/ எனவும், மூன்று வேளை மாவு உணவை உண்ணும் தோட்டத் தொழிலாளர்கள் எவ்வாறு 200/ முதல் 300/ வரை சம்பளம் பெற்று வாழ்வார்கள் எனவும் தோட்டத் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

தோட்ட உரிமையாளர்களால் அங்கீகரிக்கப்பட்ட 1000 ரூபாவை மஸ்கெலியா பெருந்தோட்ட கம்பனிக்கு மாத்திரம் வழங்க முடியாவிட்டால் வேறு நிறுவனத்திடம் வழங்குமாறு கோரிக்கை விடுப்பதாகவும் தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை போராட்டத்தை தொடரவுள்ளதாகவும் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

இந்தப் போராட்டத்தில் சுமார் 400ற்கும் மேற்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் கலந்துகொண்டதுடன், போராட்டத்தின் பின்னர் தோட்டத் தொழிலாளர்கள் வழமை போன்று தமது அன்றாட சேவைகளில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கட்டுகஸ்தோட்டை அக்குறணை தாழிறங்கும் இடங்கள்; 14 நாட்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்கவும்

## மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே

**அக்குறணை குறூப் நிருபர்**

கண்டி மாத்தளை பிரதான பாதையில் கட்டுகாஸ்தோட்டை முதல் அக்குறணை வரையிலான பகுதியில் பல இடங்கள் தாழிறங்கி உள்ளதாகவும் இதனால் அடிக்கடி வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு வருவதாகவும் தெரிவிக்கும் விடயம் குறித்து 14 நாட்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்கும் படி மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே உத்தரவிட்டுள்ளார்.

கட்டுகாஸ்தோட்டை முதல் அக்குறணை வரையிலான் ஏ9 பாதையில் பல இடங்கள் தாழ் இறங்கி நீரில் மூழ்குவதாகத் தெரிவிக்கப்பட்ட விடயம் தொடர்பாக மத்திய மாகாண ஆளுநர் அண்மையில் ந விஜயம் செய்து கள விரங்களை அறிந்து கொண்டார்.

இது தொடர்பாக கண்டிலுள்ள அவரது காரியாலயத்தில் இடம் பெற்ற உயர் மட்ட கலந்துரையாடலின் போது அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி பிங்கா ஓயவை அணிமித்த பகுதியில் மணல் அள்ளும் நடவடிக்கைகள் ஏதும் இடம் பெற்றால் அதனையும் உடன் நிறுத்தும் படியும் கூறினார். தொடர்புடைய நிறுவனங்களான மகாவலி அதிகாரசபை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம், புவியியல் மற்றும் சுரங்கப் பணியகம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் இது தொடர்பான தொழில்நுட்ப பகுப்பாய்வு மற்றும் பரிந்துரைகள் உட்பட மேற்படி அறிக்கையை தயாரிப்பதற்கு அதிகாரிகள் முன்னுரிமை அளிக்கவேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இவ்வாறான பிரச்சினைகளைப் புறக்கணிக்காமல், அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைத்து இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் குறிப்பிட்டதுடன் பொதுமக்கள் தேவையான தகவல்களை வழங்கி அந்தப் பணிகளுக்கு பங்களிக்க வேண்டுமெனவும் ஆளுநர் மேலும் கேட்டுக் கொண்டார்.

இஷாலினி மரணம் தொடர்பான வழக்கு

# தொழில்புரிந்த வீட்டில் தங்கைக்கு அநீதிகள் இழைப்பு

## வீட்டுக்கு அழைத்து செல்லுமாறு அம்மாவிம் கூறினார்; சகோதரன் நீதிமன்றில் தெரிவிப்பு

வேலைச் செய்த வீட்டில் தங்கைக்கு அநீதிகள் இழைக்கப்பட்டுள்ளன. வீட்டுக்குச் சென்றால் தனக்கு நேர்ந்த அநீதிகளை சொல்லிவிடுவாள் என்ற அச்சத்தினால், தங்கைக்கு இவ்வாறு செய்திருப்பார்கள் என தான் நம்புவதாக இஷாலினியின் சகோதரன் சாட்சியளித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் வீட்டில் பணிப்பெண்ணாக கடமையாற்றிய போது, உடலில் தீக் காயங்களுடன் மரணமடைந்த தலவாக்கலை டயகம மேற்கு பிரிவு 13 யைச் சேர்ந்த ஜூட்குமார் இஷாலினி மரண சாட்சி விசாரணையின் போதே, அவருடைய சகோதரன் விக்னேஸ்வரன் திருபிரசாத் மேற்கண்டவாறு சாட்சியளித்துள்ளார்.

கொழும்பு மேலதிக நீதவான் ரஜிந்திரா ஜயசூரியவின் முன்னிலையில் நேற்று முன்தினம் (20) வழக்கின் மரண சாட்சி அழைக்கப்பட்டது. அதன்போது சாட்சியாளரான விக்னேஸ்வரன் திருபிரசாத் மேற்கண்டவாறு சாட்சியளித்துள்ளார்.

பௌத்தாலோக்க மாவத்தையில் உள்ள ரிஷாட் பதியுதீனின் வீட்டில் தான் என்னுடைய தங்கை பணியாற்றினார். தனக்கு தொந்தரவு ஏற்பட்டுள்ளதாக அம்மாவுக்கு தொலைபேசி அழைப்பை எடுத்து தெரிவித்திருந்தார்.

2021.07.03 அன்றையதினம், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தங்கை அனுமதிக்கப்பட்டுள்ளார் என பொரளை பொலிஸ் நிலையத்தில் இருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. நான் வந்தேன். எனினும், தங்கையை பார்வையிடுவதற்கு எனக்கு அனுமதி வழங்கவில்லை. அந்த மாதம் 11 ஆம் திகதி தங்கை மரணமடைந்துவிட்டார்.

தனக்கு பிரச்சினை என்றும் தன்னை வீட்டுக்கு அழைத்துச் செல்லுமாறும் அம்மாவிடம் தங்கை கூறியிருந்தார். தனது பிரச்சினைகளை வெளியே கூறிவிடுவாள் என்றுதான் 2021.07.03 அன்றையதினம் தங்கையின் உடலுக்கு தீ வைத்துள்ளனர் என்றார்.

**தாய் சாட்சியம்**

ஜூட்குமார் இஷாலினி தாய், ராசமாணிக்கம் ரஞ்சனி சாட்சியமளிக்கையில்,

எனக்கு தொலைபேசி அழைப்பை எடுத்த மகள், தனக்கு இங்கு பிரச்சினை என்று கூறியிருந்தாள். "நீ இரு நான் வந்து உன்னை கூட்டிக்கொண்டு போகிறேன்" எனக் கூறினேன். உனக்காக நான் வந்து வேலைச் செய்கின்றேன் என்றும் கூறியிருந்தேன்.

மகள் அந்த வீட்டுக்கு வேலைக்குச் சென்றதன் பின்னர் விடுமுறையில் ஒருநாள் கூட வீட்டுக்கு வரவில்லை. நாங்களும் அவளை பார்ப்பதற்காக செல்லவில்லை. அதன் பின்னர் எரிகாயங்களுடன் வைத்தியசாலையில் மகள் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனக் கேள்விப்பட்டோம். அவளை பார்ப்பதற்காக வைத்தியசாலைக்குச் சென்றோம்.

வைத்தியசாலைக்கு நாங்கள் சென்று பார்த்தோம். இயந்திரத்தில் அவள் இருந்தால். 2021.07.15 ஆம் திகதியன்று என்னுடைய மகள் மரணித்துவிட்டாள். மரண விசாரணையில் நான் பங்கேற்கவில்லை.

ஜூட்குமார் இஷாலினி சிறிய தந்தையும் வாக்குமூலம் அளித்திருந்தார். வழக்கின் மேலதிக மரண விசாரணை சாட்சிக்கான அழைப்பு ஒக்டோபர் 4 ஆம் திகதி வரையிலும் ஒத்திவைக்கப்பட்டது.

# அக்கரப்பத்தனை– மோர்சன் தோட்ட பாதையின் அவல நிலை




அக்கரப்பத்தனை மோர்சன் தோட்டத்திற்கு செல்லும் ஆறு கிலோமீட்டர் தூரம் கொண்ட பிரதான பாதை 30 வருடங்களாக புனரமைப்பு செய்யப்படாததால் பெரும் அவல நிலையில் காணப்படுகிறது.

மழைக்காலங்களில் இப்பாதையில் பயணிக்க முடியாத நிலையில் குண்டும் குழியுமாக காணப்படுவதுடன் வெள்ளம் வழிந்துச் செல்லும் நீரோடை போன்று காணப்படுகின்றது.

500க்கும் மேற்பட்ட மக்கள் இபாதையை பயன்படுத்தி வரும் நிலையில், 80க்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள், கர்ப்பிணிகள் வாகன வசதிகள் இல்லாமல் நடந்து செல்லுகின்றனர்.

வீதி புனரமைப்பு செய்யப்படாமையால், எந்தவொரு வாகனமும் இவ்வீதியில் பயணிப்பதில்லை. எனினும் மிகவும் கஷ்டத்தின் மத்தியில் முச்சக்கரவண்டிகளில் அதிக பணத்தை செலவழித்து பயணிக்கின்றன.

வீதியை சீர்திருத்தம் செய்து தருவதாக கூறி அரசியல்வாதிகள், வாக்குகளைப் பெற்றாலும் இன்னும் அரசியல்வாதிகள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை.

# உடப்புசல்லாவை பொலிஸ் நிலையத்தில் Bio Gas தயாரிப்பு

உடப்புஸ்ஸலாவை பொலிஸ் நிலையத்தில் மனித கழிவு ஊடாக இயற்கை எரிவாயு (பயோ கேஸ்) பெற்றுக்கொள்ளும் வகையில் அதற்கான முதற் கட்ட அபிவிருத்தி பணிகள் நேற்றுக் காலை ஆரம்பிக்கப்பட்டது.

உடப்புஸ்ஸலாவை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எ.டி.வசந்த திஸாநாயக்க தலைமையில் இவ் அபிவிருந்தி பணி ஆரம்பிக்கப்பட்டது.

இது தொடர்பாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் வினவிய போது,..

தான் லூனுவத்தை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் போது அங்கு மாட்டு சாணத்தால் இயற்கை எரிவாயு பெற்றுக்கொள்ளும் திட்டம் ஒன்றை மேற்கொண்டேன் அது சாத்தியமானது.



இதனூடாக லூனுவத்தை பொலிஸ் நிலையத்தில் சமையல் அறைக்கு தேவையான இயற்கை எரிவாயு பெற்றுக்கொண்டதுடன் மேலும் இதனூடாக நான்கு வீடுகளுக்கும் இயற்கை எரிவாயு வழங்கப்பட்டது.

தற்போது நான் உடப்புஸ்ஸலாவை பொலிஸ் நிலையத்திற்கு இடம்மாறி நிலைய பொறுப்பதிகாரியாக வந்துள்ளேன். இந்த பொலிஸ் நிலையத்தில் நான்கு கழிவறைகள் உள்ளது. இவை நிரம்பி வெளியேறும் போது மனித உதவியுடன் பணம் செலுத்தி அகற்ற வேண்டியுள்ளது.

இந்த நிலையில் இந்த மனித கழிவு ஊடாக இயற்கை எரிவாயு பெற்றுக் கொள்ள திட்டமிட்டு அதற்கான தொழிநுட்டப ஆலேசனைகளையும் பெற்று பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டம் பூர்த்தியாக சுமார் ஏழு இலட்சம் இன்றைய காலக்கட்டத்தில் தேவைப்படும்.

இதற்காக அரசாங்கத்தின் நிதி உதவிகள் ஏதும் பெற்றுக்கொள்ளவில்லை.

மாறாக எமது பொலிஸ் நிலையத்தில் சேவையாற்றும் பொலிஸ் உத்தியோகஸ்தர்களின் கடமையின் பின் எஞ்சியுள்ள நேரங்களில் சிரமதான பணிகளை மேற்கொண்டு இந்த அபிவிருத்தியை முன்னெடுத்து வருகின்றேன் என்றார்.

அத்துடன் இதற்கு தேவையான சீமெந்து,கம்பி,உள்ளிட்ட பொருட்களை உடப்புஸ்ஸலாவை நகர வர்த்தகர்கள்,நலன் விரும்பிகளிடம் பெற்றுக் கொள்ளப்படுகிறது.

மேலும் அரச செலவினத்தை குறைத்து பொலிஸ் நிலைய சமையல் அறைக்கு தேவையான இயற்கை எரிவாயுவை பெற்றுக்கொள்வும் முடியும் என்றார்.

ஆ.ரமேஸ்

# உள்ளூராட்சி மன்ற செயலாளர்கள், ஊழியர்களுக்கு பயிற்சி

**தலவாக்கலை குறூப் நிருபர்**



மத்திய மாகாணத்தில் கடமையாற்றும் உள்ளூராட்சி மன்ற செயலாளர்கள் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்களுக்கான சுய அபிவிருத்தி மற்றும் சுய முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி பிரிவில் இடம்பெற்றது.

இலங்கை நிர்வாக சேவை நிறுவனத்தின் சிரேஷ்ட ஆலோசகர் சுஜன் நாணயக்கார, அபிவிருத்தி பயிற்சி பிரிவின் பணிப்பாளர் திருமதி திலினி தெஹிகொல்லே, மத்திய மாகாண பிராந்திய சபை செயலாளர்கள் மற்றும் மத்திய மாகாணத்தின் அனைத்து அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நிர்வாக அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# மத்திய மாகாண பிரதம செயலகத்தின் புதிய உதவி செயலாளராக அப்துல் காதர்

**தம்புள்ள தினகரன் நிருபர்**

மத்திய மாகாண பிரதம செயலகத்தின் உதவிச் செயலாளராக (நிதி முகாமைத்துவப் பிரிவு) எம்.எல்.அப்துல் காதர் அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளார். மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே இவருக்கான நியமனக் கடிதத்தை உத்தியோகபூர்வமாக வழங்கியிருந்தார்.



மத்திய மாகாணத் தொழில் திணைக்களம், சுகாதாரத் திணைக்களம் என்பவற்றின் செயலாளர்களும் மத்திய மாகாண காணி ஆணையாளர் மற்றும் கணக்குப் பரிசோதனைத் திணைக்களத்தின் பணிப்பாளர் உள்ளிட்ட அரச உயரதிகாரிகள் பலரும் இதன் போது பிரசன்னமாகியிருந்தனர்.



# போதைப்பொருள் பாவனையாளர்களின் உயிரைக் காப்பாற்ற மில்லியன் ரூபா செலவு

## யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் சத்தியமூர்த்தி கவலை

**கோப்பாய் குறூப் நிருபர்**

ஊசிமூலம் ஹெரோயின் போதைப்பொருளை ஏற்றி வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் நபர்களை காப்பாற்றுவதற்கு மில்லியன் ரூபா செலவு செய்ய வேண்டியுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் தங்கமுத்து சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை (20) யாழ்.போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்துவது தொடர்பான துறைசார்ந்த அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ். மாவட்டத்தில் போதைப்பொருள் பாவனை கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் சடுதியான அதிகரிப்பை காட்டிநிற்கிறது.

ஹெரோயின் போதைப்பொருளை ஏற்றிய மூவர் அண்மையில் பலியாகியுள்ளனர். இன்னுமொருவரை துறை சார்ந்த வைத்தியர்கள் பல நாட்களாக போராடி காப்பாற்றியுள்ளனர்.




ஊசி மூலம் ஹெரோயின் போதைப்பொருளை ஒருவர் பயன்படுத்திய பின்னர் அதே ஊசியை இன்னொருவர் இரத்த நாளத்தினூடாக ஏற்றுவதால் அதிகளவு கிருமி தொற்று ஏற்படுகின்றது.

இவ்வாறு பாதிக்கப்படும் நபர்களை வைத்தியசாலைகளில் அனுமதித்து சிகிச்சையளிக்கும் போது பல மில்லியன் கணக்கில் செலவு செய்ய வேண்டிய தேவை ஏற்படுகிறது.

ஏனெனில் இரத்த நாளத்தின் ஊடாக போதைப்பொருள் உடலினுள் செல்லும்போது இருதயம் மற்றும் நுரையீரல் பகுதிகளின் கிருமித் தொற்றுக்கள் பரவுகின்றன.

இதன்போது உயர் தொழில்நுட்பங்களை பயன்படுத்தி சிகிச்சையளிக்க வேண்டிய தேவை ஏற்படும்.

இவ்வாறு சிகிச்சை பெறுபவர்களில் பெரும்பாலானவர்கள் உயிர் பிழைப்பது அரிதாக காணப்படுகின்றன.

சிலர் காப்பாற்றப்படுபவர்கள் எனினும் மீண்டும் அதே பழக்கத்தில் ஈடுபடுவது மன வருத்தத்தை தருகிறது.

ஆகவே எதிர்கால சமுதாயத்தின் நலம் கருதி போதைப்பொருள் அற்ற சமூகத்தை உருவாக்குவதற்கு அனைவரும் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும் என அவர் தெரிவித்தார்.



கரவெட்டி, துன்னாலை வடக்கு 370 கிராமசேவையாளர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட குடும்பமொன்றுக்கு வீடொன்றை அமைத்துக் கொடுப்பதற்கான அடிக்கல் நாட்டும் விழா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சுபநேரத்தில் இடம்பெற்றது. 55 ஆவது படைப் பிரிவு தளபதி மேஜர் ஜெனரல் குணரத்ன தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ் மாவட்ட பாதுகாப்பு படைகளின் கட்டளை தளபதி சந்தண விஜயசுந்தர, 551 படைப்பிரிவு பிரிகேடியர் சிந்திக்க விக்கிரமசிங்க, 552 வது படை பிரிவு பிரிகேடியர் ஜெயவீர,552 வது படை பிரிவு பிரிகேடியர் ஜெயவீர, 553 வது படைபிரிவு ஜெயக்கொடி, யாழ்ப்பாண அரிமா கழக முன்னாள் ஒருங்கிணைப்பாளர் S.S. தங்கராசா, அரிமா கழக சர்வதேச ஒருங்கிணைப்பாளர் கமல் சில்வா, ஆகியோர் கலந்துகொண்டனர்.

படம்: கரவெட்டி தினகரன் நிருபர்

# மானிப்பாயில் போதைப்பொருள் விற்பனை

## சந்தேகநபர் கைது

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் மானிப்பாய் பகுதியிலுள்ள பிரபல பாடசாலைக்கு அருகில் "சாதா" எனும் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாடசாலைக்கு அருகிலுள்ள கடையொன்றில் போதைப்பொருள் விற்பனை இடம்பெற்று வருவதாக மானிப்பாய் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் பொலிஸார் கடையில் சோதனையிட்ட போது ஒரு தொகை சாதா எனும் போதைப்பொருளை கைப்பற்றினர்.

குருந்தூர் மலை விவகாரம்

# முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் மீது வழக்கு தாக்கல்

**மாங்குளம் குறூப் நிருபர்**

குருந்தூர் மலையில் பௌத்த வழிபாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்தியதாக முன்னாள் வடமாகாண விவசாய அமைச்சர் கந்தையா சிவநேசன், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும், சமூக ஆர்வலர் ஜூட் நிக்சன் ஆகியோருக்கு எதிராக முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த வழக்கு விசாரணைகள் எதிர்வரும் 10.11.2022 திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் மேலும் தெரிய வருகையில், தமிழர்களின் பூர்வீக வழிபாட்டு இடமான முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு, குருந்தூர் மலையில், கடந்த 12.06.2022 அன்றையதினம் முல்லைத்தீவு நீதிமன்றால் வழங்கப்பட்ட கட்டளைகளை மீறி, 'கபோக்' கல்லினாலான புத்தர் சிலை ஒன்றினை நிர்மாணிப்பதற்கும், புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பௌத்த விகாரையின் கலசத்திற்குரிய விசேட பூஜை வழிபாடுகளை மேற்கொள்வதற்குமான முயற்சியில் பௌத்தபிக்குகள் மற்றும், பௌத்தாலோக நற்பணிமன்றம், தென்னிலங்கையைச் சார்ந்த பெரும்பான்மை இனத்தவர்கள், இராணுவத்தினர் ஆகியோர் இணைந்து முன்னெடுத்திருந்தனர்.



இந்நிலையில் முல்லைத்தீவு நீதிமன்றால் வழங்கப்பட்ட கட்டளைகளை மீறி மேற்கொள்ளப்பட்ட இம்முயற்சிக்கு எதிர்ப்புத்தெரிவித்து குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய நிர்வாகத்தினர், பொதுமக்கள் ஜனநாயக ரீதியிலான போராட்டமொன்றை மேற்கொண்டிருந்தனர்.

இதில் முன்னாள் வடமாகாண விவசாய அமைச்சர் கந்தையா சிவநேசன்,முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூக ஆர்வலர் ஜூட்நிக்சன் உள்ளிட்டவர்களும் பங்கேற்றிருந்தனர்.

இந்நிலையில் மணலாறு சப்புமல் தென்ன ஆராண்ய விகாராதிபதி கல்கமுவ சந்திரபோதி தேரர் உள்ளிட்ட ஏழு தேரர்களால் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் இதுதொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய B/688/2022 என்னும் வழக்கிலக்கத்தில் வழக்குத் தாக்கல்செய்யப்பட்டுள்ளதுடன், வழக்கு விசாரணைகள் எதிர்வரும் 10.11.2022 அன்றைய திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை

# குருதி சுத்திகரிப்பு பிரிவில் சிகிச்சைகளை இலகுவாக மக்கள் பெற்றுக்கொள்ள முடியும்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன்

**மன்னார் குறூப் நிருபர்**

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் குருதி சுத்திகரிப்பு பிரிவில் புதிதாக 4.6 ரூபாய் மில்லியன் செலவில் கொள்வனவு செய்யப்பட்ட குருதி சுத்திகரிப்பு இயந்திரங்கள் நிறுவப்பட்டு அதன் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

தற்போது மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையிலுள்ள குருதி சுத்திகரிப்பு பிரிவில் 7 குருதி சுத்திகரிப்பு இயந்திரங்கள் மூலம் சேவைகள் வழங்கப்பட்டு வருகிறன.

புதிய இயந்திரங்களின் வருகையால் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையிலுள்ள குருதி சுத்திகரிப்பு பிரிவில் தமது சிகிச்சைகளை மக்கள் இலகுவாக பெற்றுக்கொள்ள முடியுமென அவர் மேலும் தெரிவித்தார்.



# மன்னாரில் இளைஞர், யுவதிகளுக்கான தொழில் சந்தை

**மன்னார் குறூப் நிருபர்**

மன்னார் மாவட்டத்தில் மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களத்தினால் நேற்று புதன் கிழமை (21) காலை தொழிற்சந்தை நடாத்தப்பட்டது.

தொழில் சந்தையானது நேற்று புதன்கிழமை (21) காலை 10 மணியளவில் மன்னார் நகர மண்டபத்தில் ஆரம்பமானது.

இதன்போது பல தொழில் வழங்கும் நிறுவனங்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டிமெல் கலந்து கொண்டார். மேலும்,பிரதேசசெயலாளர்,திணைக்கள தலைவர்கள், தொழில் வழங்கும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் வேலை வாய்ப்புக்காக காத்தி ருந்த பல நூற்றுக்கணக்கான இளைஞர், யுவதிகள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

# மன்னார் மாவட்ட சட்டத்தரணிகள் பணிபகிஷ்கரிப்பு

**தலைமன்னார் விஷேட நிருபர்**

மன்னார் மாவட்ட சட்டத்தரணிகள் பணிபகிஷ்கரிப்பில் ஈடுபட்டுவருகின்றனர். இருப்பினும் மன்னார் நீதிமன்ற செயற்பாடுகள் வழமை போன்று இயங்கி வருகின்றன.

மன்னார் மாவட்ட சட்டத்தரணிகள் கடந்த திங்கட்கிழமை (19.09.2022) ஒன்றுகூடி மேற்கொண்ட கலந்துரையாடலின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக நேற்று (21.09.2022) முதல் வெள்ளிக்கிழமை (23.09.2022) வரை பணிபகிஷ்கரிப்பில் ஈடுபடுவதாக அறிவித்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் இயங்கி வரும் நீதிமன்றங்களில் வழக்குகளில் ஆஜராகாது பணிபகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இருந்தபோதும் பணிபகிஷ்கரிப்பினால் மன்னார் நீதிமன்ற வழக்கு விசாரணைகளில் பாதிப்புகள் ஏற்படவில்லை.

இத்தினங்களில் வெளிமாவட்டங்களிலிருந்து மன்னார் நீதிமன்றங்களுக்கு வரும் சட்டத்தரணிகள் தங்கள் கட்சிகாரர்களுக்காக வழக்குகளில் ஆஜராகி வருகின்றனர்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மன்னார் நீதிமன்றங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மன்னார் மனித புதைகுழி வழக்கு விசாரணைகள் ஒத்திவைப்பு

**மன்னார் குறூப் நிருபர்**

மன்னார் 'சதோச மனித புதைகுழி' மற்றும் 'திருக்கேதீஸ்வர மனித புதைகுழி' வழக்கு நேற்று புதன்கிழமை(21) நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்நிலையில் குறித்த இரு வழக்குகளும் நேற்று (21) விசாரிக்கப்பட்ட போது பல்வேறு வாதப்பிரதிவாதங்கள் முன்வைக்கப்பட்டதுடன் கட்டளை ஒன்றும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சார்பாக முன்னிலையாகும் சட்டத்தரணி வி.எஸ்.நிரஞ்சன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

நேற்று (21) திருக்கேதீஸ்வர மனித புதைகுழி வழக்கு மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப் பட்டது.

புதைகுழியிலிருந்து ஏற்கனவே எடுத்துச் செல்லப்பட்டு அனுராதபுரம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள மனித எச்சங்கள் மீண்டும் மன்னார் நீதவான் முன்னிலையில் கொண்டு வந்து அமெரிக்கா புளோரிடா நிறுவனத்திற்கு பரிசோதனைக்கு அனுப்புவதற்கான மாதிரிகளை தெரிவு செய்யப்படவுள்ளன.

இந்நிலையில் வழக்கு தொடுனர் தரப்பான அரசு தரப்பு நேற்று (21) நீதிமன்றத்தில் இந்த மாதிரிகளை இங்கு கொண்டு வந்து மீண்டும் கொழும்புக்கு கொண்டு செல்லும் போது அகழ்வு பொருட்கள் சேதமாகும் என்பதால் அதனை அநுராதபுர நீதவான் முன்னிலையில் பிரித்தெடுத்தலை செய்வதற்கான கட்டளை ஒன்றை வழங்குமாறு கேட்டிருந்தனர்.

அதற்கு வழக்கு தொடுனர் தரப்பில் நாங்கள் கடுமையான ஆட்சேபனையும் எதிர்ப்பும் தெரிவித்து இருந்தோம்.

இந்நிலையில் மன்னார் நீதவான் கருத்து தெரிவிக்கையில், அனுராதபுரம் நீதிமன்றத்திற்கு கொண்டு சென்று மனித எச்சங்களை பிரித்து எடுப்பதற்கு தனக்கு நியாயாதிக்கம் இல்லை.

மன்னார் நீதவான் நீதிமன்ற எல்லைக்குள் அது நடைபெற வேண்டும் என்றும் அவ்வாறு செய்வதற்கு வழக்கு தொடுனர் தரப்பு வைத்தியர்களுக்கு அசௌகரியங்கள் இருக்குமானால் அநுராதபுரம் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் பிரித்தெடுத்தல் நடவடிக்கையை மேற்கொள்ளலாம் என தெரிவித்தார்.

இவ்வழக்கானது நவம்பர் மாதம் 24 ஆம் திகதி மீண்டும் மேலதிக நடவடிக்கைகளுக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் மன்னார் சதோச மனித புதைகுழி வழக்கும் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.



யாழ். கொட்டடி நமசிவாயம் வித்தியாலய பாடசாலையில் பரிசளிப்பு விழாவும் கண்காட்சியும் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலய பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணன் பிரதம விருந்தினராகவும் யாழ் மாநகரசபை உறுப்பினர் தேசமான்ய லயன் கலாநிதி நா.தனேந்திரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர். இங்கு மாணவர்களுக்கு ரூபா 35,000 பெறுமதியான அப்பியாசக் கொப்பிகளையும் வழங்கினார். படம்:வேலணை குறூப் நிருபர்

# கள்ளுத் தவறணை அமைக்க மக்கள் கடும் எதிர்ப்பு

**சாவகச்சேரி விஷேட நிருபர்**

தென்மராட்சிப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கொடிகாமம் வடக்கு ஜே/326 கிராம அலுவலர் பிரிவின் வேவில் என்ற இடத்தில் கள்ளுத் தவறணை அமைக்க கிராமமக்கள் எதிர்ப்பினை வெளியிட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் 20/09 செவ்வாய்க் கிழமை கள்ளுத்தவறணை கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட போது கிராமமக்கள் ஒன்றிணைந்து இச்செயற்பாட்டினை தற்காலிகமாக தடுத்து நிறுத்தியிருந்தனர்.

இதுதொடர்பாக அப்பகுதி மக்கள் கருத்துத் தெரிவிக்கையில்;

கொடிகாமம் வடக்கு வேவில் அண்ணமார் ஆலயத்திற்கு அருகாமையிலுள்ள காணியில் கள்ளுத் தவறணை அமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. கள்ளுத் தவறணைக்கு 20 மீற்றர் தூரத்தில் ஆலயம் இருப்பதுடன் 10 மீற்றர் தூரத்தில் குளமொன்று இருக்கின்றது. குளத்தினை இங்குள்ள பெண்கள் குளிப்பதற்காக பயன்படுத்துகின்றனர். அத்துடன் தவறணை அமையவுள்ள இடத்திற்கு அருகாமையில் கிராம மக்கள் விவசாய நடவடிக்கைகள்,கால்நடை வளர்ப்பு மற்றும் விறகு சேகரிப்பு நடவடிக்கைகளில் தினமும் ஈடுபட்டு வருவதனால் குறித்த இடத்தில் தவறணை அமைப்பது பொருத்தமாக அமையாது என தெரிவிக்கின்றனர். எமது நிலை தொடர்பாக சாவகச்சேரி பிரதேசசபை, கிராம அலுவலர், பிரதேச செயலகம் மற்றும் சாவகச்சேரி மதுவரித் திணைக்களம் ஆகியவற்றுக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தியுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# கிழக்கின் குரல்



# மருதமுனை மேட்டுவட்டை பகுதியில் மையவாடி அமைக்க கல்முனை மாநகர சபை தீர்மானம்

(கல்முனை விஷேட நிருபர்)

மருதமுனை மேட்டுவட்டை பகுதியில் வசிக்கும் மக்களின் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்வதற்காக மையவாடி அமைக்கப்படவுள்ளது.

இதற்கான தீர்மானம் கல்முனை மாநகர சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபையின் 54ஆவது மாதாந்த பொதுச் சபை அமர்வு கடந்த செவ்வாய்க்கிழமை (20) பிற்பகல், மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் இடம்பெற்றபோதே இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாநகர சபை உறுப்பினர் எம்.எஸ். உமர் அலி இவ்விடயம் தொடர்பிலான பிரேரணையை சமர்ப்பித்திருந்தார். இதன்போது கருத்துரைக்கையில் அவர் கூறியதாவது;

மருதமுனை பிரதேசத்தில் சுனாமியினால் வீடு, வாசல்களை இழந்த மக்களுக்காக மேட்டு வேட்டை பகுதியில் வீட்டுத்திட்டம் அமைக்கப்பட்டது.

இங்கு அமைக்கப்பட்டுள்ள பிரான்ஸ் சிட்டி வீட்டுத்திட்டம், சுனாமி வீட்டுத்திட்டம், இஸ்லாம் நகர் மற்றும் ஸகாத் நிதிய வீட்டுத் திட்டங்கள் என்பவற்றில் சுமார் 700 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. ஆனால் இப்பகுதியில் இதுவரை மையவாடி ஒன்று இல்லாதுள்ளது. இதனால் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதில் இம்மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். மருதமுனை கடற்கரையை அண்மித்த பகுதியில் அமைந்திருக்கின்ற பாரம்பரிய மையவாடி இங்கிருந்து வெகு தொலைவில் அமைந்திருப்பதால் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்காக நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது. இதனால் அந்த மக்கள் பல வருடங்களாக பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். இவர்களது நீண்ட காலத் தேவையாக இருந்து வருகின்ற மையவாடியை மேட்டுவட்டை பகுதியில் அமைப்பதற்கு பொருத்தமான காணியொன்றை ஒதுக்கீடு செய்து தருவதாக பிரதேச செயலாளர் இணக்கம் தெரிவித்துள்ளார். ஆகையினால் எமது மாநகர சபை இதற்கான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தினார்.

மாநகர சபை உறுப்பினர் ஏ.ஆர். அமீர் பிரேரணையை வழிமொழிந்து உரையாற்றினார். அதையடுத்து மற்றும் சில உறுப்பினர்களின் ஆதரவான கருத்துக்களுடன் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

அத்துடன் சாய்ந்தமருது மற்றும் மருதமுனை ஆகிய இடங்களில் கால்நடைகளை அறுக்கும் இடங்களை அமைப்பதற்கு அடையாளம் காணப்பட்டுள்ள காணிகளை கல்முனை மாநகர சபைக்கு விடுவித்து தருமாறு பிரதேச செயலாளரைக் கோரும் தீர்மானமும் இதன்போது நிறைவேற்றப்பட்டது.

இவை தவிர மற்றும் பல முக்கிய விடயங்கள் குறித்த விவாதங்களும் இடம்பெற்றன. அத்துடன் உறுப்பினர்களின் பல்வேறுபட்ட கேள்விகளுக்கும் முதல்வரினால் பதில்கள் வழங்கப்பட்டன.





பாலமுனை 06ஆம் பிரிவு திராய்க்கேணி சிவமுத்து மாரியம்மன் ஆலயத்தில் வருடாந்த உற்சவ இறுதிநாள் நிகழ்வுகள் இடம்பெற்றன. இதில் கலந்துகொண்ட பக்தர்களில் ஒரு பகுதியினரைப் படங்களில் காணலாம். (படம். பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)

## ஜனாதிபதி ஆணைக்குழு காத்தான்குடிக்கு வருகை

(மட்டக்களப்பு விஷேட நிருபர்)

காணாமலாக்கப்பட்டோர், கடத்தப்பட்டோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள உச்ச நீதிமன்ற நீதிபதிகளை உள்ளடக்கிய ஜனாதிபதி ஆணைக்குழு, காத்தான்குடிக்கு வருகை தரவுள்ளது.

காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான சாட்சியங்களை உறவினர்கள் இந்த ஆணைக்குழுவில் சமர்ப்பிக்க முடியும். இதுதொடர்பில், படுகொலை செய்யப்பட்டோர் தொடர்பான ஏறாவூர் ஞாபகார்த்தப்பேரவை பொதுமக்களுக்கு அறிவித்தலை வழங்கியுமுள்ளது. இதுதொடர்பாக பள்ளிவாசல் ஒலிபெருக்கிகளிலும் பொது அறிவித்தல் விடுக்கப்பட்டது. அந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டதாவது,

கடந்த காலங்களில் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளும் உச்ச நீதிமன்ற நீதிபதிகளை உள்ளடக்கிய ஜனாதிபதி ஆணைக்குழு எதிர்வரும் திங்களன்று (26) காத்தான்குடிக்கு வருகை தரவுள்ளது. இந்த ஆணைக்குழுவில்,காணாமலாக்கப்பட்ட அல்லது கடத்தப்பட்ட தமது உறவினர்கள் தொடர்பில் சாட்சியங்களை சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டிருந்தது.

## வரட்சியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு பவுஸர்கள் மூலம் குடிநீர் விநியோகம்

(ஒலுவில் விஷேட நிருபர்)

வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ள அம்பாறை மாவட்ட மக்களுக்கு அனர்த்த மத்திய முகாமைத்துவ மத்திய நிலையம் குடிநீர் வசதிகளை வழங்கி வருவதாக

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அம்பாறை மாவட்ட உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.சீ.எம். றியாஸ் தெரிவித்தார்.

இம்மாவட்டத்தில் தொடர்ச்சியாக வரட்சி நிலவுவதால், 05 ஆயிரத்து 426 குடும்பங்களைச்சேர்ந்த 18 ஆயிரத்து 635 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இம்மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு மாவட்ட செயலாளர் ஜே.எம்.ஏ. டக்ளஸின் ஆலோசனைக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவிலேயே, கூடுதலான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும், கால்நடைகளும் பாதிக்கப்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கவலை தெரிவிக்கப்படுகிறது. இதனால்,கால்நடைகளுக்கு குடிநீர் வழங்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவில் 2754 குடும்பங்களைச் சேர்ந்த 9201 நபர்களும், ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் 1189 குடும்பங்களைச் சேர்ந்த 3988 நபர்களும், லெளகல பிரதேச செயலாளர் பிரிவில் 26 குடும்பங்களைச் சேர்ந்த 96 நபர்களும், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவில் 1457 குடும்பங்களைச் சேர்ந்த 5350 நபர்களும் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இம்மக்களுக்கு குடிநீர் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு பிரதேச செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களினூடாக பௌஸர் மூலம் தொடர்ச்சியாக குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

## வாழைச்சேனையில் உணவு நிலையங்களில் திடீர் முற்றுகை, பலபேருக்கு எதிராக வழக்கு

(கல்குடா தினகரன் நிருபர்)

வாழைச்சேனை பிரதேசத்தில் உணவகங்கள் மீது மேற்கொண்ட திடீர் பரிசோதனையின்போது நான்கு நபர்களுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளதாக வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி டி.எஸ்.சஞ்ஜீவ் தெரிவித்தார்.மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் அலுவலக உணவு பாதுகாப்பு பரிசோதகர்கள், வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துடன் இணைந்து இந்த திடீர் பரிசோதனைகளை மேற்கொண்டிருந்தனர்.

வாழைச்சேனை பிரதேசத்திலுள்ள பதினொரு உணவகங்கள் பரிசோதனை செய்யப்பட்டதில், நான்கு உணவகங்களுக்கு எதிராக வழக்குகள் தொடரப்பட்டன. இந்நிலையில் ஒவ்வொரு உணவகங்களுக்கும் ஆறாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதாக வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி டி.எஸ்.சஞ்ஜீவ் தெரிவித்தார். குறித்த திடீர் பரிசோதனையின் போது மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் அலுவலக உணவு பாதுகாப்பு பரிசோதகர்கள், வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக மேற்பார்வை பரிசோதகர் இ.நிதிராஜ், பொது சுகாதார பரிசோதகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## வரலாறு கூறும் நற்பிட்டிமுனை நூல் வெளியீட்டு விழா

(காரைதீவு குறூப் நிருபர்)

நற்பிட்டிமுனையைச் சேர்ந்த எழுத்தாளர் எஸ்.சிவகுருநாதன் எழுதிய "வரலாறு கூறும் நற்பிட்டிமுனை" நூல் வெளியீட்டு விழா, கடந்த ஞாயிற்றுக்கிழமை(18) மாலை நற்பிட்டிமுனை சிவசக்தி மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

கல்முனை வலய ஓய்வுநிலை கணிதபாட உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ். இலங்கநாதன் தலைமையில் இடம்பெற்ற விழாவில், பிரதம அதிதியாக கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே. அதிசயராஜ் கலந்து சிறப்பித்தார்.

இவ்விழாவில் , நற்பிட்டிமுனை ஸ்ரீ கணேசராலயம் மற்றும் சேனைக்குடியிருப்பு ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய தலைவர் தம்பிராஜா ரவிராஜ், சிவசக்தி மகா வித்தியாலய அதிபர் திருமதி. யோகேஸ்வரி இராமநாதன், மற்றும் ஸ்ரீ பாத தேசிய கல்வியல் கல்லூரி பீடாதிபதி கே. துரைராஜசிங்கம்,கிராமிய தொழில் துறைத் திணைக்கள மாவட்டப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் ஆகியோர் கெளரவ அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்..

மேலும்,இவ்விழாவில் நற்பிட்டிமுனை ஆலய தலைவர்கள், அதன் உறுப்பினர்கள், பிரதேச பொதுமக்கள், சமூக சேவையாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து சிறப்பித்தனர்.

நூல் தொடர்பான மதிப்பீட்டு உரையினை தென்கிழக்கு பல்கலைக்கழக பிரதி பதிவாளர் சஞ்சீவி சிவகுமார் நிகழ்த்தினார்.

அதனைத்தொடர்ந்து வருகை தந்த அதிதிகளுக்கு நூல் பிரதிகளை நூலாசிரியர் எஸ். சிவகுருநாதன் வழங்கி வைத்தார்.

## இயக்குநர் சபைக்கு உறுப்பினர்கள் தெரிவு

(மூதூர் தினகரன் நிருபர்)

மூதூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநர் சபையின் பதவிக் காலம் முடிவடைந்துள்ளதால்,புதிய இயக்குநர் சபைக்கான தெரிவு இடம்பெறவுள்ளது.

இதனையொட்டிய கிளைக்குழு உறுப்பினர்களுக்கான கூட்டக்கடிதம், மூதூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்க செயலாளரினால் அனுப்பப்பட்டு வருகின்றன.

மேலும் இக்கிளைக்குழு புதிய உறுப்பினர்களுக்கான தெரிவின் கூட்டம் எதிர்வரும் ஒக்டோபர் 01, 02 (சனி, ஞாயிறு) தினங்களில் நடைபெறவுள்ளன. சனிக்கிழமை (01) இல் 15 கிளைக்கான உறுப்பினர்கள் தெரிவும், ஞாயிற்றுக்கிழமை (02) இல் 14 கிளைக்கான உறுப்பினர்கள் தெரிவும் இடம்பெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து கிளைக்குழு உறுப்பினர்கள் தெரிவிலிலிருந்து பொதுச்சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு, இயக்குநர் சபையும் அமைக்கப்படவுள்ளது.



பொத்துவில் "ரைஸ் ஸ்டார்" விளையாட்டுகழகமும் "டில்ஷாத் அகமட் பவுண்டேசன்" அமைப்பினரும் ஒருங்கிங்கிணைந்து "முத்துக்களை பாராட்டுவோம்" நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர். பொத்துவில் ஹிதாயாபுரம் தவிசாளர் பூங்காவில் நடந்த இந்நிகழ்வில்,சிரேஷ்ட சுகாதார ப்பரிசோதகர் எம்.எஸ்.எம். மாலிக்பாராட்டி கெளரவிக்கப்பட்டார். இந்நிகழ்வை ஏற்பாடு செய்த அமைப்புக்களின் தலைவர்கள் மாலிகிற்கு பொன்னாடை போர்த்தி கெளரவித்தனர். ( படம் : அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)

## பொத்துவில் பிரதேச செயலாளர் கடமைகளைப் பொறுப்பேற்பு

(பாலமுனை விஷேட நிருபர்)

பொத்துவில் பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்ட அட்டாளைச்சேனையைச்சேர்ந்த பிர்னாஸ் இஸ்மாயில் செவ்வாய்க்கிழமை (20) பொத்துவில் பிரதேச செயலகத்தில் தனது கடமை மற்றும் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டார்.

உதவிப் பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய நிலையிலேயே, இலங்கை பொதுச்சேவை ஆணைக்குழுவின் அனுமதியுடன் அம்பாறை மாவட்ட செயலாளரினால் இந்நியமனம் இவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலாளருக்கான வரவேற்பு நிகழ்வு பொத்துவில் பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில், பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதேச செயலாளர்கள், பிரதேச சபை தவிசாளர், திணைக்களத்தின் உயர் அதிகாரிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொன்டனர்.



கடந்த 2012 ஆம் ஆண்டு இலங்கை நிருவாக சேவையில் இணைந்துகொண்ட பிர்னாஸ் இஸ்மாயில், கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் முன்னாள் உதவி செயலாளர், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் முன்னாள் உதவி செயலாளர், கிழக்கு மாகாண சுகாதார திணைக்களத்தின் முன்னாள் பிரதி மாகாணப் பணிப்பாளர் (நிருவாகம்), ஏறாவூர் நகர சபையின் முன்னாள் செயலாளர், கல்முனை மாநகர சபையின் பிரதி ஆணையாளர் போன்ற பதவிகளை வகித்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவர், மர்ஹூம் அஹமட் லெவ்வை முஹம்மட் இஸ்மாயில் மற்றும் ஆதம் பாவா பரீதா தம்பதிகளின் கடைசிப் புதல்வராவார்.

## பரீட்சை கொடுப்பனவுகளை மூன்று மடங்காக அதிகரிக்குமாறு கோரிக்கை

(வெல்லாவெளி தினகரன் நிருபர்)

பரீட்சை கொடுப்பனவுகளை மூன்று மடங்காக அதிகரித்து தருமாறு பரீட்சை கடமையில் ஈடுபடும் பரீட்சை மேற்பார்வையாளர்கள், உதவி பரீட்சை மேற்பார்வையாளர்கள், இணைப்பு நிலைய பொறுப்பதிகாரிகள், நோக்குநர்கள்,உத்தியோகஸ்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்

இலங்கை பரீட்சை திணைக்களத்தினால் நடாத்தப்படும் பாடசாலை மட்ட பரீட்சைகள், பொதுப்பரீட்சைகள்,நிறுவனம் சார்ந்த பரீட்சைக் கடமைகளில் ஈடுபடும் அனைத்து உத்தியோகஸ்தர்களின் கொடுப்பனவுகளையும் மூன்று மடங்காக அதிகரிக்குமாறே இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம் நடாத்தும் புலமைப்பரிசில் பரீட்சை,க.பொ.சாதாரண பரீட்சை,க.பொ.உயர்தரப்பரீட்சை,சட்ட நுழைவுப்பரீட்சை,அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை,போட்டிப்பரீட்சை போன்றவற்றில் கடைமையில் ஈடுபடுவதற்காக

அதிக விலைக்கு எரிபொருளை கொள்வனவு செய்து வாகனங்களில் செல்கின்றனர்.

இன்னும் சில உத்தியோகஸ்தர்கள் 60 கிலோமீற்றர் அப்பால் தொலைவிலுள்ள பரீட்சை நிலையத்திற்கு செல்ல நேரிடுகிறது. மிக நீண்டகாலமாகவும், பரீட்சைகளை நேர்த்தியாகவும்,எந்த வித குளறுபடியும் இல்லாமல் சிறப்பாக பரீட்சைகளை நடாத்தி பரீட்சை மேற்பார்வையாளரால் பாராட்டைப் பெற்ற உதவி பரீட்சை மேற்பார்வையாளர்,நோக்குநர்கள்,மண்டப ஊழியர்கள் எதிர்வரும் காலங்களில் பரீட்சை கொடுப்பனவை அதிகரிக்காவிட்டால் பரீட்சை கடமைகளுக்கு அழைக்க வேண்டாமெனவும் இவர்கள் தெரிவித்துள்ளனர்.

## ஹெரோயினுடன் இருவர் கைது

(பாலமுனை தினகரன் நிருபர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒலுவிலில் ஹெரோயினுடன் இருவர் கைது செய்யப்பட்டனர். அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின்படி உப பொலிஸ் பரிசோதகர் நூர்தீன் தலைமையிலான பொலிஸ் குழுவினர்,இவர்களை கைது செய்தனர்.இவர்களில் ஒருவரிடமிருந்து 90 மில்லி கிராம் ஹெரோயினும் மற்றையவரிடமிருந்து 45 மில்லி கிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நேற்று (21) புதன்கிழமை ஆஜர்படுத்தியபோது எதிர்வரும் (04) வரை விளக்க மரியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

## அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்

அக்கரைப்பற்று மத்திய நிருபர்

நிந்தவூர் 02 முத்தகீன் பள்ளி வீதியைச்சேர்ந்த, அப்துல் கரீம் முஹம்மது முபாரக், அகில இலங்கை சமாதான நீதவானாக அம்பாரை மாவட்ட மற்றும் நீதிவான் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் அண்மையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். நிந்தவூர் அல்அஷ்ரக் தேசிய பாடசாலையின் பழைய மாணவரும், சாய்ந்தமருது தஃவா இஸ்லாமிய கலாபீடத்தின் முதல் ஹாபிளும், கல்வி சமூக கலாசார அமைப்பின் நிர்வாக சபை உறுப்பினராகவும் செயற்பட்டு வருவதுடன், பல்வேறு சமூகப் பணிகளிலும் இவர் ஈடுபட்டுவருகிறார். தற்போது இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் நூலக உத்தியோகத்தராகவும் கடமையாற்றிவரும் இவர் மர்ஹூம் அப்துல் கரீம், கலிமத்துமா ஆகியோரின் புதல்வருமாவார்.



# நகர்வலம்



அநுராதபுரம் மாவட்டத்தில்;

## சோளம் உற்பத்தி செய்யும் விவசாயிகள் அதிகரிப்பு



**திறப்பனை தினகரன் நிருபர்**

அநுராதபுரம் மாவட்டத்தில் இம்முறை சோளம் உற்பத்தியில் ஈடுபடவுள்ள விவசாயிகளின் எண்ணிக்கை சுமார் 36,980 ஆக அதிகரித்துள்ளது. கடந்த சில வாரங்களுக்கு முன்பிருந்து இணையத்தளம் ஊடாக தம்மை இவர்கள் பதிவு செய்து வருவதாக அநுராதபுர விவசாய சேவைகள் அபிவிருத்தி பிரதி ஆணையாளர் திரு.சமிந்த ஏக்கநாயக்க தெரிவித்தார். இது இம்முறை சுமார் 48,058 ஹெக்டேயர் காணிகளில் பயிரிடப்படவுள்ளன. இவ்வாறு சோள உற்பத்திக்காக பதிவு செய்வதைக் கொண்டு, சோள உற்பத்திக்கு தேவையான பசளை மற்றும் பிற தேவைகளை வழங்க இப் பதிவு பயன்படுகிறது.

இது வரை தம்மை பதிவு செய்யாத சோள உற்பத்தியில் ஈடுபட எண்ணியுள்ள விவசாயிகள் இருப்பின், அண்மையில் உள்ள விவசாய சேவைகள் அபிவிருத்தி நிலையத்திற்கு சென்று தகவல்களை வழங்க முடியும் என திரு. சமிந்த ஏக்கநாயக்க மேலும் தெரிவித்தார்.

கலென்பிந்துனுவெவ அரச தானிய வளாகத்துக்கு;

## நெல் உலரவைக்கும் இயந்திரம் விவசாய அமைச்சரினால் கையளிப்பு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**



அநுராதபுரம் கலென்பிந்துனுவெவ உபுல்தெனிய அரச தானிய சேமிப்பு வளாகத்திற்கு நெல் உலரவைக்கும் இயந்திரம் ஒன்றை விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர அண்மையில் வழங்கி வைத்தார்.

உபுல்தெனிய நெல் களஞ்சிய சாலைக்கு கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த அமைச்சர், அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்கவின் வேண்டுகோளின் பேரில் தானிய களஞ்சிய சாலையில் நெல் உலரவைக்கும் விவசாயிகளின் தேவைக்காக நெல் உலரவைக்கும் இயந்திரத்தை வழங்கியுள்ளார்.

மேற்படி மாவட்டத்தில் ஏராளமான விவசாயிகள் நெல் அறுவடை செய்த பின்னர் உபுல்தெனிய தானிய நிலையத்தில் நெல் சேமிப்பு செய்யும் போது சரியான தரத்திற்கு நெல்லை உலரவைப்பதற்கு இயந்திரம் ஒன்றின் தேவை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க விவசாய அமைச்சரிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைய குறித்த இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

தென் மாகாணத்தில் உ/த வகுப்பில்;

## ஒரேயொரு மாணவருடன் இயங்கும் ஐம்பத்தேழு பாடசாலைகள்

### முன்னணி பாடசாலைகளில் மாணவரை இணைக்க ஆளுநர் ஆலோசனை

**வெலிகம தினகரன் நிருபர்**




தென் மாகாணத்தில் கா.பொ.த உயர் தர வகுப்புக்களில் ஒரு மாணவன் மாத்திரம் கற்கும் பாடசாலைகள் சுமார் 57 காணப்படுவதாக தென் மாகாண ஆளுநர் கலாநிதி விலிகமகே தெரிவித்தார்.

இந்த ஒரு மாணவனுக்காக உயர்தர வகுப்பு பாடநெறிகளை கற்பிக்க ஆறு, ஏழு ஆசிரியர்களை அமர்த்த வேண்டியுள்ளது. இப்படியான பாடசாலைகளில் கற்கும் உயர் தர மாணவர்களுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு அண்மையிலுள்ள பிரபல பாடசாலைகளில் கல்வியைத் தொடர நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென ஆளுநர் மேலும் தெரிவித்துள்ளார்.

கல்விக்காக பௌதீக மற்றும் மனித வளங்களைப் பயனுள்ள விதத்திலும் ஆசிரியர்களை சமநிலைப்படுத்தலும் அவசியம் என அவர் குறிப்பிட்டார்.

மேலும் 20 – 30 மாணவர்கள் உயர்தரம் கற்கும் பாடசாலைகள் சுமார் 300 அளவில் உள்ளன. இப் பாடசாலைகளையும் அபிவிருத்தி செய்ய வேண்டியுள்ளதெனவும் ஆளுநர் மேலும் தெரிவித்தார்.

## அமரத்துவமடைந்த இரண்டாவது எலிசபெத் மகாராணிக்கு கொழும்பில் ஆராதனை







அமரத்துவமடைந்த இரண்டாவது எலிசபெத் மகாராணிக்கான இறுதி அஞ்சலி ஆராதனை நேற்று முன்தினம் கொழும்பு சிலோன் மறை மாவட்ட தேவாலயத்தில் பேராயர் Dushantha Lakshman Rodrigo அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இரண்டாவது எலிசபெத் மகாராணியின் மரணத்தை நினைவு கூரும் வகையில் இலங்கை வாழ் கிறிஸ்தவ மக்களின் சார்பில் இறுதி அஞ்சலி ஆராதனை ஒழுங்கு செய்யப்பட்டது.

கர்த்தருக்குள் நித்திரையடைந்த இங்கிலாந்தின் அரச குடும்பத்தின் இரண்டாம் எலிசபெத் மகாராணியின் மறைவு சர்வதேச கிறிஸ்தவ மக்களுக்கு பாரிய இழப்பாகும் என்று சர்வதேச இசை கல்விக்கான பயிற்சி நிலையத்தின் இலங்கையின் தூதுவரும் அகில இலங்கை கிறிஸ்தவ அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவருமான அதி வணக்கத்திற்குறிய பிதா அருட்கலாநிதி எஸ்.சந்துரு பெர்னாண்டோ அவர்கள் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் சாரா ஹல்டனின் அழைப்பின் பேரில் அருட்தந்தை சந்துரு பெர்னாண்டோ கலந்துகொண்டதுடன் அவர் தனது இரங்கல் செய்தியையும் தெரிவித்து கொண்டார்.

எலிசபெத் மகாராணியின் இந்த மறைவு இலங்கை வாழ் கிறிஸ்தவ மக்களுக்கு மாபெரும் இழப்பு என்றும் அருட்கலாநிதி எஸ்.சந்துரு பெர்னாண்டோ அவர்கள் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த இறுதி அஞ்சலி ஆராதனையில் இரண்டாவது எலிசபெத் மகாராணியை கௌரவிக்கும் வகையில் இலங்கையில் உள்ள அனைத்து தூதரகங்களின் தூதுவர்களும் கலந்து கொண்டமை விசேட அம்சமாகும்.

## தேசிய சாரணர் இயக்கத்தின் 13ஆவது கபோரி நிகழ்வு



இலங்கை சாரணர் இயக்கத்தால் 13ஆவது தடவையாகவும் ஏற்பாடு செய்யப்பட்ட "தேசிய கபோரி" இலங்கைக்கான தென்கொரிய தூதுவர் சதூஷ் யுன்கின் (sathush yungin) தலைமையில் கல்கிசை சென் தோமஸ் கல்லூரி வளாகத்தில் கடந்த 16ஆம் திகதி வெகு விமர்சையாக ஆரம்பிக்கப்பட்டது. தேசிய கபோரியில் Cub Scouts சாரண சிறுவர் சிறுமியர்கள் மூன்று நாட்கள் முகாம் அமைப்பதோடு இம்முறை 26 மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் 12,000 க்கும் அதிகமான Cub Scouts சாரணர்கள் தங்களது மாவட்டத்தை மையப்படுத்தி கலந்து கொள்ளவுள்ளனர். தலைமை ஆணையாளர் சட்டத்தரணி ஜனபிரித் பெர்னாண்டோவின் வழிகாட்டலிலும் ஆலோசனையின் கீழும் செயல்படுத்தப்படும் இந்த நிகழ்ச்சி திட்டத்தை, தேசிய கபோரி அமைப்பு, உதவி தலைமை ஆணையாளர் (Cub Scouts) வத்சலா விஜேவிக்கிரம நெறிப்படுத்தினார். இந்நிகழ்வில் சாரணர் இயக்கத்தை பிரதிநிதித்துவம் செய்யும் பல தலைவர்களும் தலைவிகளும் கலந்து கொண்டனர். இதில் பிரதி தலைமை ஆணையாளர் எம்.எப்.எஸ்.முஹீட் கலந்துகொண்டனர்.



தேசிய பொலிஸ் வாரத்தை முன்னிட்டு நாச்சியாதீவு கிராமிய வைத்தியசாலையில் அண்மையில் இடம்பெற்ற சிரமதான நிகழ்வில் பொலிஸார், சமய தலைவர்கள், நலன் விரும்பிகள், பொது மக்கள் என பலர் கலந்து கொண்டு சிரமதான பணியில் ஈடுபட்டபோது எடுத்த படம். படம்: திறப்பனை தினகரன் நிருபர்

ரூ. 1 கோடி 58 இலட்சம் செலவில்

## பேருவளை ஆதார வைத்தியசாலை வார்ட் தொகுதிகள் புனரமைப்பு

### சீனன்கோட்டை அவசரகால நிவாரண அமைப்பினருக்கு வைத்தியசாலை பிரதம வைத்தியதிகாரி பாராட்டு

**பேருவளை விசேட நிருபர்**



சீனன்கோட்டை அவசரகால நிவாரண அமைப்பின் ஊடாக பேருவளை ஆதார வைத்தியசாலையின் 2ம் வார்ட், 4ம் வார்ட், சிறுவர் வார்ட் மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு ஒரு கோடியே ஐம்பத்தெட்டு இலட்சம் (1,58,00,000.00) ரூபா செலவில் புனரமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. சீனன்கோட்டை இரத்தினக்கல் வர்த்தகர்கள், பரோபகாரிகளின் உதவியுடன் இப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் தேவையான வைத்திய உபகரணங்களும் கையளிக்கும் நிகழ்வும் மேற்படி புனரமைக்கப்பட்ட வார்ட் தொகுதிகள் வைபவ ரீதியாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வும் நேற்று (21) வைபவரீதியாக நடைபெற்றது.

வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி டொக்டர் அவன்தி ரூபசிங்ஹ தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் மேற்படி அமைப்பின் போஷகரும் பாராளுமன்ற உறுப்பினருமான மர்ஜான் பளீல் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

பேருவளை நகரபிதா மஸாஹிம் முஹம்மத், அமைப்பின் தலைவர் ஏ.டப்ளியு.எம். நவ்பர் ஹாஜியார், இணைச் செயலாளர்களான சியாம் மிஹ்லார், இர்ஷாத் மன்ஸூர், சீனன் கோட்டை பள்ளிச் சங்கத் தலைவர் ஏ.எச்.எம். முக்தார் ஹாஜியார் , பள்ளிச்சங்க உறுப்பினர்கள், முஷான் இன்டர்நெஷனல் நிறுவனத் தலைவர் தொழிலதிபர் முஸ்லிம் ஸலாஹுதீன், ஆப்தீன் ஜுவலர்ஸ் அதிபதி இஸ்ஸதீன் உட்பட முக்கிய பிரமுகர்கள் மற்றும் மதாரிஸ் பணிப்பாளர் மௌலவி எம்.டப்ளியு.எம். பஹ்ரி (மிஸ்பாஹி), பேருவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லலித் பத்ம குமார உட்பட அமைப்பின் உறுப்பினர்கள், வைத்தியசாலை வைத்தியர்கள், அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.



பிரதம வைத்திய அதிகாரிக்கு நிதியுதவி கையளிப்பு



சீனன்கோட்டை அவசரகால நிவாரண அமைப்பு கொவிட் 19 ஆரம்பகட்டத்தில் உருவாக்கப்பட்டு அன்று முதல் இப்பிரதேசத்தின் பல தரப்பட்ட நிவாரண மற்றும் பொதுச் சேவைகளை முன்னெடுத்து வருகிறது. விஷேடமாக ஜனாஸாக்களை எடுத்துச் செல்ல 'அம்பியுலென்ஸ்' வாகனமொன்றும் வாங்கி இலவச சேவையில் ஈடுபடுத்தி வருகிறது. அதன் மற்றுமொரு பணியாகவே பேருவளை ஆதார வைத்தியசாலையின் குறைபாடுகளை பூர்த்தி செய்து கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் உரை நிகழ்த்திய தொழிலதிபர் முஸ்லிம் ஸலாஹுத்தீன், எனக்கு பத்து வயதாயிருக்கும் போது இந்த ஆஸ்பத்திரிக்கு வந்துள்ளேன். மிகவும் சிறிய அளவிலான வைத்திய சிகிச்சை நிலையம் ஒன்றுதான் அப்போது இங்கு இருந்தது. இந்த ஆஸ்பத்திரியில் ஒக்ஸிஜன் உள்ளிட்ட உபகரணங்களுக்கு பாரிய தட்டுப்பாடு நிலவியது. இதனால் களுத்துறை, கொழும்பு வைத்திய சாலைகளுக்கே செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

கொவிட் 19 தொற்று ஆரம்பமான போது இங்குள்ள தேவைகள் மிகவும் அதிகரித்தன. இப் பகுதி பரோபகாரிகளின் உதவி ஒத்துழைப்புடன் இந்த வைத்தியசாலையின் பல தேவைகள் நிறைவேற்றிக் கொடுக்கப்பட்டன. இன்று புனர்நிர்மாணம் செய்யப்பட்ட நிலையிலும் மேலும் தேவைகள் இருந்து கொண்டிருப்பதை அறிகிறோம். எனவே, இந்த வைத்தியசாலையின் மேலதிக அபிவிருத்திக்காக கொரோனாவினால் மரணமான எனது தாயாரின் பெயரில் ஐம்பது இலட்சம் ரூபா செலவில் அபிவிருத்திப் பணியை மேற்கொள்ள நிதி உதவி வழங்குவேன் என்றார்.

# இல்மனைட் அகழ்வால் பாதிப்புகளுக்குள்ளாகும் மன்னார்






மன்னார் பெரு நிலப்பிரதேசம் பாரிய பிச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதாக சுற்றாடல் நீதிக்கான நிலைத்தின் பணிப்பாளர் எமந்த வித்தானகே தெரிவித்துள்ளார்.

மன்னாரில் கனிய மண் அகழவுக்கான பூர்வாங்க வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் இதனால் மன்னார் பெரு நிலப்பரப்புக்கு ஏற்படும் பாதிப்புகள் தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் மாநாடு கொழும்பு நிப்போன் ஹொட்டலில் நேற்று நடைபெற்றது.இம் மாநாட்டுக்கு மன்னார் பிரஜைகள் முன்னணி உறுப்பினர்கள் பலரும் வந்து விளக்கமளித்தனர்.

இதில் சுற்றாடல் நீதிக்கான நிலையத்தின் பணிப்பாளர் ஏமந்த வித்தானகே மேலும் கூறியதாவது,

மன்னாரில் அவுஸ்திரேலிய டைடேனியம் நிறுவனமே இந்த இல்மனைட்டு அகழ்வு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. அங்கு 204 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு அகழ்வு பணிக்காக உட்படுத்தப் படவுள்ளது.ஆனால் மன்னாரின் மொத்த நிலப்பரப்பு 140 சதுர கிலோ மீட்டராகும்,ஆகையால் கடல் பகுதியையும் உள்ளடக்கியே இந்த இல்மனைட் அகழ்வுகள் நடைபெறவுள்ளன. 2015 தொடக்கம் 2019 வரை குழிகள் தோண்டி மண் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

அகழ்தெடுக்கப்பட்டுள்ள மண் மாதிரிகள் தென்னாபிரிக்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்டு பாரிசோதனைக்குட்படுத்தப்பட்டு ஆய்வு தகவல் பெறப்பட்டுள்ளன. இந்த ஆய்வு தகல்களை அவுஸ்திரேலிய டைடேனியம் நிறுவன 2015 ஆம் ஆண்டு மொரிசியஸ் நாட்டுக்கு விற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந் நடவடிக்கைகளில் மன்னார் மக்களுக்கு சுத்தமான குடி நீர் கூட அற்றுப்போகலாம். புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம் இதற்கான அனுமதியை வழங்கியுள்ளதாக நிறுவனம் தெரிவிக்கிறது.

இல்மனைட் அகழ்வால் அம் மக்களுக்கு நன்மை ஏற்படபோவதில்லை. இந்த கனிய மண் மூலப் பொருளாகவே வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதால் அவற்றால் பெற்றுக் கொள்ளப்படும் நன்மை அதை ஏற்றுமதி செய்யும் நாடே பெற்றுக் கொள்கிறது.இந்த மண் அகழ்வால் மன்னார் மக்களுக்கு மற்றும் அதன் சூலழுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பில் சுற்றாடல் நீதிக்கான நிலையம் தொடர்ந்தும் போராடும் என்றார்.

மன்னார் பிரஜைகள் முன்னணி உறுப்பினர்கள் பலர் தெரிவித்த கருத்துக்கள்,

மன்னாரில் காணி செந்தக்காரர்களுக்கு அறிவிக்காமல் ஏதேச்சதிகாரத்தில் அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு மண் எடுக்கப்பட்டதோடு அக் குழிகள் இது வரை மூடப்படவும் இல்லை. தண்ணீர் எடுப்பதற்காக குழிகள் தோண்டப்படுவதாகவும் காணி உரிமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அங்கு வந்திருந்த காணி உரிமையாளர் ஒருவர் தெரிவித்தார்.

அத்தோடு கொரோனா முடக்கத்திலேயே இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டதாகவும் இது வரை 4200 குழிகள் தோண்டப்பட்டுள்ளன. மன்னாரில் பல தசாப்த காலங்களுக்கு பின்னர் தாழ்வுப்பாடு முதல் தலைமன்னார் வரை 06 அடிக்கு மேல் வெள்ளம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. மன்னார் பிரதேசம் கொடிய யுத்தத்தால் பாதிக்கப்பட்டு அதன் சுவடுகள் இன்றும் காணப்படும் நிலையில் இவ்வாறான செயற்பாடுகளால் மன்னார் பகுதி மக்கள் வாழ முடியாத பிரதேசமாக மாற்றப்படும் அபாயம் தோன்றியுள்ளது.

ஸ்ரீ



மதுசங்க ரத்னாயக்கவின் வயலின் இசை நிகழ்ச்சி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆனந்த சமரகோன் கலையரங்கத்தில் செவ்வாய்க்கிழமை (20) மாலை நடைபெற்றது. பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன வயலின் கலைஞருக்கு வானொலி பெட்டி அன்பளிப்பு செய்வதையும் அருகில் நிலையத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்க, பணிப்பாளர் நாயகம் நளின் குமார் நிஸ்ஸங்க, டவர் நிதியத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் புரவலர் ஹாசிம் உமர் ஆகியோர் உடனிருப்பதையும் படத்தில் காணலாம்.

2023ஆம் ஆண்டு முதலாம் தர

# மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் அன்பளிப்பு



அநுராதபுரம் மாவட்ட ஆரம்பக் குழந்தைப் பருவ ஒருங்கிணைப்பு அதிகாரி பி.என்.எச். திருமதி தென்னகோன் மூலம், 2023ஆம் ஆண்டு முதலாம் தரத்திற்குச் சேர்த்துக் கொள்ளவுள்ள பொருளாதாரச் சிரமங்களுக்கு உள்ளான சிறார்களுக்காக பாடசாலைத் தவணைக்குத் தேவையான சகல பாடசாலை உபகரணங்கள், புத்தகங்கள் போன்றவை இங்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. இதன்படி, 3000 ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியான உபகரணங்கள் இங்கு அன்பளிப்பாக வழங்கிவைக்கப்பட்டன.

பிரதேச செயலக பிரிவு மட்டத்தில் இந்த உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

சீனன்கோட்டை மக்களின் உதவியுடன்

# கொரோனா மரணங்களை தடுக்க முடிந்தமையை பாராட்டுகிறேன்

வைத்தியசாலை வார்ட் திறப்பு விழாவில் பிரதம வைத்தியதிகாரி

பேருவளை விசேட நிருபர்



கொவிட் 19 கால கட்டத்திலும் அதற்குப் பின்னரும் சீனன்கோட்டை அவசரகால நிவாரண அமைப்பு நல்லஹேன ஆதார வைத்தியசாலைக்கு அன்பளிப்பாக வழங்கிய பல இலட்சம் பெறுமதியான வைத்திய உபகரணங்களினால் இப்பகுதியில் சுமார் 350 க்கும் மேற்பட்ட கொரோனா தொற்றாளர்களின் உயிரைக் காப்பாற்ற முடிந்ததாகவும் கொரோனா மரணங்கள் அதிகளவில் சம்பவிக்காது காப்பாற்ற முடிந்தமை குறித்து மகிழ்ச்சியடைகிறேன் என வைத்தியசாலையின் பிரதம வைத்தியதிகாரி டொக்டர் அவன்தி ரூபசிங்க தெரிவித்தார்.

பேருவளை ஆதார வைத்தியசாலையின் வார்ட் தொகுதிகள் மற்றும் அவசர சிகிச்சைப்பிரிவுகள் சீனன் கோட்டை அவசரகால நிவாரண அமைப்பின் ஊடாக புனரமைப்பு செய்யப்பட்டு நேற்று வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது. சுமார் ஒரு கோடியே ஐம்பத்தெட்டு இலட்சம் (1,58,00,000.00) ரூபா செலவில் சீனன்கோட்டை இரத்தினக்கல் வர்த்தகர்கள் மற்றும் பரோபகாரிகளின் உதவியுடன் இவ்வார்ட் தொகுதிகள் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளன.

மேற்படி அமைப்பின் போஷகர் பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் பிரதம அதிதியாக கலந்து கொண்ட இந்நிகழ்வில் தலைமையுரை நிகழ்த்திய வைத்தியசாலையின் பிரதம வைத்தியதிகாரி டொக்டர் அவன்தி ரூபசிங்க மேலும் தெரிவித்ததாவது,

சீனன் கோட்டை பகுதி தனவந்தர்கள் மற்றும் தொழிலதிபர்கள், பரோபகாரிகள் மற்றும் பல நிறுவனங்களின் ஒத்துழைப்போடும் சீனன்கோட்டை அவசர நிவாரண அமைப்பு இந்த ஆஸ்பத்திரியை கட்டியெழுப்ப மேற்கொண்ட முயற்சிகளை நான் பாராட்டுகிறேன். இந்த வைத்தியசாலையை புனரமைப்பு செய்ததன் மூலம் சீனன் கோட்டை அவசரகால நிவாரண அமைப்பு முழு நாட்டிற்கும் முன்மாதிரி காட்டியுள்ளது.

இந்த அமைப்பின் தலைவர் உட்பட அனைத்து உறுப்பினர்களும் எமது ஆஸ்பத்திரியோடு நெருங்கிய தொடர்பு வைத்து சுமார் இரண்டு கோடி ரூபா வரையிலான அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டதையிட்டு நன்றி தெரிவிக்கிறேன். எதிர்காலத்திலும் இந்த ஆஸ்பத்திரியின் தேவைகளைப் பூர்த்தி செய்ய உங்கள் அனைவரினதும் பூரண ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறேன் என்றார்.

# கலாசாரம், மதம் என்ற வட்டத்துக்குள் செயற்பட்டு நாட்டை முன்னேற்ற முடியாது

## கஞ்சா பயிர்ச்செய்கை சட்டபூர்வமாக்கப்பட வேண்டும்; இராஜாங்க அமைச்சர் டயனா கமகே சபையில் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



கலாசாரம், மதமென ஒரு வட்டத்துக்குள் செயற்பட்டு ஒரு போதும் நாட்டை முன்னேற்ற முடியாதென இராஜாங்க அமைச்சர் டயனா கமகே பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

கஞ்சா பயிர்ச்செய்கையை சட்டபூர்வமாக்க வேண்டுமென சபையில் தெரிவித்த அவர், திருட்டுத்தனமாக செய்வதை ஏன் சட்டபூர்வமாக செய்யக் கூடாதென்றும் கேள்வி எழுப்பினார்.

அதை வேளை அரச வரி வருமானத்தை அதிகரிப்பதற்காக காலை 10 மணிமுதல் இரவு 10 மணிவரை மதுபானசாலைகளை திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென குறிப்பிட்ட அவர் தம் மீதான சேறுபூசல்களுக்கு ஒரு போதும் அஞ்சபோவதில்லை என்றும் தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று நடைபெற்ற அரச வருமானம் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

நாடு வங்குரோத்தடைந்து விட்டது, பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுவிட்டதென தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தால் மாத்திரம் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்காது.

வெளிநாட்டுக் கையிருப்பை ஈட்டிக் கொள்ள நான் முன்வைத்த சில யோசனைகள் தொடர்பில் ஒரு தரப்பினர் குறிப்பாக மத குருமார்கள் வெறுக்கத் தக்க பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றமை கவலைக்குரியது.

சேறு பூசல்கள் மற்றும் விஷம பிரசாரங்களுக்கு நான் ஒருபோதும் அஞ்சப் போவதில்லை.

அதேவேளை எனது திட்டங்களை தவிர்த்துக்கொள்ள போவதுமில்லை. எம்மை விட கலாசாரத்தை முன்னிலைப்படுத்திய நாடுகள் கலாசாரத்துக்கு அப்பாற்பட்டு செயற்பட்டதால் முன்னேற்றமடைந்துள்ளன என்பதை விமர்சனங்களை முன்வைப்பவர்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

இன்னுமின்னும் 2500 வருட கால பழைமை தொடர்பில் பேசிக் கொண்டிருந்தால் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண முடியாது.சிறந்த திட்டங்களை முன்வைக்கும் போது கலாசாரம், மதம் என பேசி ஒரு தரப்பினர் அத்திட்டங்களுக்கு தடையேற்படுத்துகின்றார்கள்.

குறுகிய வரைபுக்குள் இருந்து கொண்டு எதனையும் வெற்றிக்கொள்ள முடியாது.

கலாசாரம் தொடர்பில் கருத்துரைப்பவர்கள் எமது பெண்கள் வெளிநாடுகளுக்கு பணிப் பெண்களாக செல்வது குறித்து ஏன் கவனம் செலுத்தவில்லை. இலங்கை பெண்கள் வெளிநாடுகளில் மிக மோசமான துயரங்களை எதிர்க்கொள்கின்றார்கள். அதற்கு ஆட்சியில் இருந்த அனைத்து அரச தலைவர்களும்,அரசாங்கங்களும் பொறுப்புக் கூற வேண்டும் அத்துடன் வெட்கப்பட வேண்டும்.

கஞ்சாவை ஏற்றுமதி செய்ய வேண்டும் என நான் குறிப்பிட்டதை வைத்துக் கொண்டு ஒருசில பௌத்த தேரர்கள் தவறான கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்பி வருகின்றனர்.

# வரி அதிகரிப்பு சாதாரண மக்களை பாதிக்கக் கூடாது

லோரன்ஸ் செல்வநாயகம்

அரசாங்கத்தின் வரி அதிகரிப்பு நடவடிக்கைகள் சாதாரண மக்களைப்பாதித்து விடக்கூடாது என வேலுசாமி ராதாகிருஷ்ணன் எம்பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

தோட்டத் தொழிலாளர்களின் ஒரு நாள் சம்பளம் ஆயிரம் ரூபாவாக உள்ள நிலையில் கோதுமை மா ஒரு கிலோ 400 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது. இதுபோன்ற நடவடிக்கைகளில் சமூக நீதி கடைப்பிடிக்கப்படுவது அவசியம் என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

வரி அறவீடு தொடர்பில் தெரிவித்த அவர், கோடிக்கணக்கில் வருமானம் பெறுபவர்களுக்கும் சாதாரண மக்களுக்கும் ஒரே விதத்தில் வரி அறவிடப்படுவது எவ்வாறு நீதியானதாகும் என்றும் கேள்வியெழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அரச வருமானம் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

வரி அதிகரிப்பு காரணமாக நாட்டில் 80 வீதமான மக்கள் பாதிக்கப்படுகின்றனர். நாட்டில் அத்தியாவசிய சேவைகளை முன்னெடுப்பதற்கும் வறுமை ஒழிப்பு போன்ற நடவடிக்கைகளுக்கும் வரி அதிகரிப்பு மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும்.

வரவு செலவுத் திட்டத்தில் குறைநிரப்பு பெருமளவில் இடம்பெறுவது நாம் வெளிநாடுகளில் கடன் பெற வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்துகிறது. அதுவே இந்த நாட்டின் துரதிஷ்டமான நிலை. உலகில் நான்காவது வறுமை நாடாக இலங்கை கணிக்கப்பட்டுள்ளது. நாம் இதனை ஒருபோதும் எதிர்பார்த்திருக்கவில்லை.

இந்த நிலையில் வரி அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டால் சாதாரண மக்களே பெரிதும் பாதிக்கப்படுவார்கள்.


நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

கட்டிடங்கள் திணைக்களம்

**கேள்விகளுக்கான அழைப்பு**

**நாராஹேன்பிட்ட, மெஹவரபியசவில் லெவல் - 15 வேலையாள் நஷ்டஈட்டிற்கான ஆணையாளர் அலுவலகத்தின் உத்தேச உள்ளக பார்டிசன் வேலைகள்**

(ஒப்பந்த இலக்கம்: RPC/CE(W/S)-10/22)

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டதும் மற்றும் 5.4 மில்லியன் ரூபா மதிப்பீட்டுச் செலவைக் கொண்டதுமான நாராஹேன்பிட்ட, மெஹவரபியசவில் லெவல் - 15 வேலையாள் நஷ்டஈட்டிற்கான ஆணையாளர் அலுவலகத்தின் உத்தேச உள்ளக பார்டிசன் வேலைகளுக்காக தகைமையும் தகுதியும் கொண்ட கேள்விதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகளை கட்டிடத் திணைக்களத்தின் சார்பில் பிராந்திய பெறுகைக் குழு (மேற்கு/தெற்கு) பெறுகைக் குழுத் தலைவர் கோருகிறார்.

   நிர்மாணக் காலம் 91 நாட்கள்.

2. கேள்விகள் தேசிய போட்டி கேள்வி கோரல் முறையின் கீழ் இடம்பெறும். இப்பெறுகையின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் 50 மில்லியன் ரூபாவிற்கு குறைவாக இருப்பதனால் 04/2016 (iii) ஆம் இலக்கம் மற்றும் 03/2020ஆம் திகதிய அரச நிதி சுற்றறிக்கையில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளதற்கமைய பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை என்பன பிரயோகிக்கப்படும்.

3. ஒப்பந்தத்தை வழங்கப் பெறுவதற்குத் தகைமை கொண்ட வெற்றிகரமான கேள்விதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றிருத்தல் கூடாது என்பதுடன் கேள்விகள் மூடப்படும் திகதி வரை செல்லுபடியாகக் கூடிய நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) கட்டிட நிர்மாண ஒப்பந்தக்காரர்களுக்கான C5, C6 அல்லது C7 தரம் அல்லது அதற்கு மேற்பட்ட பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும். குறித்த பதிவானது ஒப்பந்தம் வழங்கும் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.

   பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் கேள்விதாரர்கள் 1987இன் 3ம் இலக்க ஒப்பந்த விதிகள் பற்றிய ஒப்பந்தச் சட்டத்தின் பெறுகை விதிகளின் பிரகாரம் தம்மைப் பதிவு செய்து கொள்ளல் வேண்டும். பதிவுச் சான்றிதழின் மூலப் பிரதியை (Original Certificate of PCA 03) கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும். PCA 03 பதிவுச் சான்றிதழை சமர்ப்பிக்கத் தவறும் எந்தவொரு விலைமனுதாரருக்கும் இந்தப் பெறுகை கையளிக்கப்படமாட்டாது.

4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கொழும்பு - 07, டொரிங்டன் அவென்யூ. இல. 213 கட்டிடங்கள் திணைக்களம் (மேற்கு, தெற்கு), பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் அதே முகவரியில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம். தொடர்பு இலக்கங்கள்: தொலைபேசி: 011 2554691, தொலைமடல்: 011 2554690

5. மீளளிக்கப்படாத கட்டணமாக இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவை (ரூபா 2,500.00) 2022.09.21ஆம் திகதி முதல் 2022.10.03ஆம் திகதி வரையான காலத்தில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் கொழும்பு - 07, டெரிங்டன் அவென்யூ. இல. 213 கட்டிடங்கள் திணைக்களம் (மேற்கு, தெற்கு), பிரதம பொறியியலாளர் அலுவலகத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

6. கேள்விகளை 2022.10.05ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு (தெற்கு, மேற்கு), கொழும்பு - 07, டொரிங்டன் அவென்யூ. இல. 213 முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கொழும்பு - 07, டொரிங்டன் அவென்யூ. இல. 213 கட்டிடங்கள் திணைக்களம் (தெற்கு, மேற்கு), பிரதம பொறியியலாளர் மேற்கு தெற்கு அலுவலகத்தில் வருகை தந்துள்ள கேள்விதாரர்களின் கேள்வியில் பங்குபற்ற தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் மூடப்பட்டு உடன் திறக்கப்படும்.

7. கேள்விகள் பெற்றுக்கொள்ளும் இறுதி நாள் அல்லது நீடிக்கப்பட்ட காலத்திலிருந்து 77 நாட்களுக்கு கேள்விகள் செல்லுபடியாதல் வேண்டும்.

8. அனைத்துக் கேள்விகளுடனும்
   * கேள்வி ஆவணத்தின் 09ம் பிரிவில் உள்ளடங்கும் படிவத்தின்படி
   * கட்டிடப் பணிப்பாளர் நாயகத்திற்கு எழுதப்பட்ட
   * 80,000.00 ரூபா தொகைக்கு
   * 2023 ஜனவரி 17ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும்
   * கேள்வித் தரவின் 16.0ஆம் வாசகத்தில் குறித்துரைக்கப்பட்ட முகவரகம் ஒன்றினால் வழங்கப்பட்ட கேள்விப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பொறி. G.R.S.B. கம்லத்,**
**கட்டிடங்கள் பணிப்பாளர் (பிராந்தியம் 2),**
**கட்டிடங்கள் திணைக்களம்,**
**2ம் மாடி, ''செத்சிறிபாய'', பத்தரமுல்லை.**

www.buildings.gov.lk

## களுத்துறை நகர சபை

### இறைச்சிக்கடைகள் மற்றும் விளைச்சல்களைக் குத்தகைக்கு விடுதல் – 2023

கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இறைச்சிக் கடைகள் மற்றும் விளைச்சல்களைக் குத்தகைக்கு விடுவதற்காக என்னால் கேள்விகள் கோரப்படுகின்றன.

i. பெறுகை விண்ணப்பப்படிவங்களை வழங்கல் : 2022.10.05 அன்று பி.ப. 3.00 வரை

ii. பெறுகைக்கான விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளல் : 2022.10.06 அன்று மு.ப. 10.00 வரை

iii. பெறுகை விண்ணப்பங்களை திறத்தல் : 2022.10.06 அன்று மு.ப. 10.01 இற்கு

**அட்டவணை 01 - இறைச்சிக்கடைகளைக் குத்தகைக்கு விடுதல்**

| தொடர் இலக்கம் | கடை இலக்கம் | அமைவிடம் | இறைச்சி வகை | ஆகக்குறைந்த கேள்வி ரூபா |
|---|---|---|---|---|
| 1 | இல. 01 | கட்டுகுருந்த புதிய சந்தை | கோழி இறைச்சி | 436,800.00 |
| 2 | இல. 10 | கட்டுகுருந்த புதிய சந்தை | மாட்டிறைச்சி | 997,500.00 |
| 3 | இல. 11 | கட்டுகுருந்த புதிய சந்தை | மாட்டிறைச்சி | 1,145,163.00 |
| 4 | இல. 02 | வெள்ளி சந்தை | மாட்டிறைச்சி | 543,518.00 |
| 5 | இல. 114 | ஹில் வீதி | மாட்டிறைச்சி | 683,615.00 |

- பெறுகைக்கான படிவக்கட்டணம் ரூபா 1500.00 மற்றும் மீளளிக்கப்படும் வைப்புத் தொகை ரூபா 25000.00 ஆகும்.

6. சபைக்கு உரித்தான விளைச்சல்களிற்காக பெறுகை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆகக்குறைந்த கேள்வி ரூபா 44100.00 என்பதுடன், படிவக்கட்டணம் ரூபா 600.00 உம், மீளளிக்கப்படும் வைப்புத் தொகையானது, ரூபா 3000.00 உம் ஆகும்.

ஏனைய அனைத்து விபரங்களும் பெறுகைப்படிவங்களுடன் வழங்கப்படும்.

விசாரணைகள்: 034-2222273, 034-2222275

**2022.09.16ஆம் திகதி**
**நகர சபை அலுவலகத்தில்**

**சாமஸ்ரீ தேச சக்தி**
**எம் ஆமீர் நஸீர்**
**தலைவர்**
**நகர சபை களுத்துறை**


# பாடசாலைக்கு செல்வதாக கூறி பதின்மூன்று வயது மாணவி மாணவனுடன் தப்பியோட்டம்

## மகாவிலச்சிய பகுதியில் சம்பவம்

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

பதின்மூன்று வயது பள்ளி மாண வியை துஷ்பிரயோகம் செய்ததாக கூறப்படும் 17 வயது பள்ளி மாணவனை கைது செய்துள்ள தாக மகாவிலச்சிய பொலிசார் தெரிவித்தனர். பாதிக்கப்பட்ட சிறுமி கடந்த 13 ம் திகதி பாட சாலைக்கு செல்வதாக அவரது தாயாரிடம் கூறிவிட்டு வீட்டில் இருந்து சென்றுள்ளார். இருந்த போதும் சிறுமி பாடசாலைக்கு சமுக மளிக்காமையினால் பாடசாலை அதிபர் சிறு மியின் தாயாருக்கு தொலைபேசி அழைப்பு விடுத்ததன் மூலம் குறித்த சம்பவம் தெரிய வந்துள்ளது.

வீட்டில் இருந்து பாடசாலைக்கு செல்வதாக வெளியான சிறுமி தனது பாடசாலை காதல னுடன் மோட்டார் சைக்கிளில் கைவிடப்பட் டிருந்த வீடொன்றுக்குச் சென்று பாடசாலை சீருடையை மாற்றிக்கொண்டுள்ளார். பின்பு காதலனுடன் கணவன் மனைவி போன்று நடந்து கொண்டதாக மாணவியிடம் மேற் கொண்ட விசாரணைகளின் மூலம் தெரிய வந் துள்ளது. பாடசாலை முடியும் நேரம் மீண்டும் சீருடையுடன் பாடசாலைக்கு அருகில் வந்து நிற்கும் போது உறவினர் ஒருவரை சந்தித்ததா கவும் தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபரான மாணவனை நீதிமன்றில் ஆஜர்படுத்தியுள்ள துடன் பாதிக்கப்பட்ட சிறுமி மருத்துவ பரி சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மகாவிலச்சிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# கொழும்பு பிரதேச செயலகத்திற்குட்பட்ட வலைப்பந்து போட்டித் தொடர்



படம்: எம். நசார்

கொழும்பு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட HS இளைஞர் கழகம் மற்றும் HS விளையாட்டு கழகம் இணைந்து நடாத்திய HS MIXED NETBALL CHAMPION LEGUE 2022 போட்டித்தொடர் அண்மையில் ஜிந்துப்பிட்டி நகர சபை மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் கொழும்பு பிரதேச செயலகத்திற்கு கீழ் பதிவு செய்யப்பட்ட எட்டு இளைஞர் மற்றும் விளையாட்டு கழகங்கள் கலந்து கொண்டன. அத்துடன் 100இற்கு மேற்பட்ட இளைஞர் யுவதிகளும் கலந்துகொண்டனர்.

இப்போட்டியின் இறுதியில், HS இளைஞர் கழகத்திற்கும் STRONG விளையாட்டு கழகத்திற்கும் இடையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் 13:12 என்ற நிலையில் 1 புள்ளி வித்தியாசத்தில் HS இளைஞர் கழகமானது வீர முதன்மை கிண் ணத்தை பெற்றுக்கொண்டதுடன் STRONG விளையாட்டு கழகமானது துணை வீரமுதன்மை கிண்ணத்தினை பெற்றுக்கொண்டது.

தொடரின் சிறந்த விளையாட்டு (ஆண்) வீரராக (BEST DEFENDER MEN) ஆக HS இளைஞர் கழகத்தின் K.SHAM மும் சிறந்த விளையாட்டு (பெண்) வீராங்கனையாக (BEST DEFENDER WOMEN) ஆக HS இளைஞர் கழகத்தின் அணித்தலைவி P.UMASHINI அவர்களும் தெரிவாகி னர்.


## மனிதநேயம் மற்றும் சமூக விஞ்ஞானம் பற்றிய உயர் கல்வி தொடர்பான தேசிய நிலையம் (NCAS)

NCAS

### விண்ணப்பங்களுக்கான அழைப்பு

### பணிப்பாளர் பதவி

23 மே 2022 திகதியிட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 10/2022 இன் படி மனிதநேயம் மற்றும் சமூக விஞ்ஞானம் பற்றிய உயர் கல்வி தொடர்பான தேசிய நிலையத்தின் (NCAS) பணிப்பாளர் பதவிக்கு இலங்கை குடிமக்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மனிதநேயம் மற்றும் சமூக விஞ்ஞானம் பற்றிய உயர் கல்வி தொடர்பான தேசிய நிலையம், கலை, மனிதநேயம் மற்றும் சமூக விஞ்ஞான உயர் கல்வியை வழங்குதல், ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றின் நோக்கத்திற்காக உயர் கல்விக்கான மையமாக 2005 ஆம் ஆண்டின் 02ம் இலக்க NCAS கட்டளை மூலம் நிறுவப்பட்டது.

பணிப்பாளர் ஒரு முழு நேர அதிகாரி, முதன்மை நிறைவேற்றதிகாரி, முதன்மை கல்வி அதிகாரி மற்றும் மையத்தின் கணக்கியல் அதிகாரி. பணிப்பாளர் நிர்வாகக் குழுவின் தலைவராகவும், நிலையத்தின் கல்விக் குழுக்களின் முன்னாள் அதிகாரியாகவும் இருப்பார். பணிப்பாளர் குழு முடிவுகளை செயல்படுத்துவதற்கும், நிலையத்திற்கு கல்வி மற்றும் நிர்வாகத் தலைமையை வழங்குவதற்கும் பொறுப்பாவார். நிலையத்தின் விவகாரங்களை நிர்வகிப்பதில் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் நல்ல நிர்வாகத்தைப் பேணுவதற்கும் பணிப்பாளர் பொறுப்பாவார். கலை, மனிதநேயம் மற்றும் சமூக விஞ்ஞான துறையில் கல்விப் பணியாளர்கள் தங்கள் அறிவை மேம்படுத்த புதுமையான ஆராய்ச்சிகளை ஊக்குவிப்பதன் மூலமும், கல்விப் பணியாளர்களுக்கு உதவுவதன் மூலமும் நிலையத்தின் நோக்கை நோக்கி இயக்குநர் வழிகாட்டுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. மற்ற பல்கலைக்கழகங்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, சம்பந்தப்பட்ட துறை அமைச்சகங்கள் மற்றும் பிற தொடர்புடைய நிறுவனங்களின் கல்வியாளர்கள் மற்றும் அதிகாரிகளுடன் தொடர்புகொள்வதற்கும் இயக்குநர் திறன் பெற்றிருக்க வேண்டும்.

பணிப்பாளர் ரூ.108,490- 13 x 2520 - 141,250/- என்ற அளவில் மாதச் சம்பளம் பெறுவார். (U – AC 5 (II) தற்போது பொதுச் சேவையில் இருப்பவர்கள் பொதுச் சேவையில் தற்போதைய சம்பளப் புள்ளிக்குக் குறையாத சம்பளப் புள்ளியில் அமர்த்தப்படுவார்கள். அரசாங்க விதிமுறைகளின்படி உத்தியோகபூர்வ போக்குவரத்துக்கு பணிப்பாளருக்கு உரிமை உண்டு. பணியமர்த்தப்படும் அவரோ/அவளோ பணியமர்த்தப்பட்ட நாளிலிருந்து மூன்று (3) ஆண்டுகள் அல்லது 65வது பிறந்தநாளை அடையும் நாள் வரை, எந்த நிகழ்வு முன்னதாக நிகழ்கின்றதோ அது வரை பதவியில் இருப்பார். பணியமர்த்தப்பட்டவர் தனது வருவாயில் 10% ஐ பல்கலைக்கழக ஊழியர் சேமலாப நிதிக்கு வழங்குவார். மற்றும் நிறுவனம் அவரது சம்பாத்தியத்தில் 15%க்கு சமமான தொகையை இந்த நிதிக்கு அளிக்கும்.

நியமனத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் 1978இன் 16ம் இலக்க (திருத்தப்பட்ட) மற்றும் பல்கலைக்கழகங்கள் கட்டளை விதிகளின் படியும் 2005 அக்டோபர் 19 அன்றைய விசேட வர்த்தமானி இல. 1415/17 இல் வெளியிடப்பட்ட 2005ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க NCAS கட்டளை மற்றும் 2008 செப்டம்பர் 15 இல் வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி இல. 1567/6 யில் வெளியிடப்பட்ட 2008 இன் NCAS (திருத்தம்) கட்டளை இல. 03 இன் படியும் நிர்ணயிக்கப்படும்.
விண்ணப்பதாரர் பின்வரும் ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்:

(i) 23 மே 2022 திகதியிட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 10/2022 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள்.

(ii) பிறந்த திகதி உட்பட விண்ணப்பதாரரின் முழுமையான சுயவிபரக்கோவை

(iii) நிறுவனத்தின் வளர்ச்சிக்கான அவரது/அவளுடைய நோக்கு பற்றிய அறிக்கை மற்றும் விண்ணப்பதாரர் பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டால் என்ன சாதிக்கப் போகிறார் என்பது பற்றிய சுருக்கமான விளக்கம்

(iv) விண்ணப்பதாரர் பணிப்பாளர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டால் அவர் விடுவிக்கப்பட முடியுமா என்பதைக் குறிக்கும் தற்போதைய தொழில் தருனரிடமிருந்து ஒரு கடிதம்.

விண்ணப்பத்தின் இறுதி திகதியில் விண்ணப்பதாரர் 63 வயதுக்கு குறைவாக இருக்க வேண்டும்

பொதுச் சேவை, அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சட்டப்பூர்வ அமைப்புகளைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள் தங்களின் விண்ணப்பங்களை அந்தந்த நிறுவனத் தலைவர்கள் மூலம் சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய விண்ணப்பதாரர்கள் இறுதி திகதி அல்லது அதற்கு முன் விண்ணப்பங்களை அனுப்ப அறிவுறுத்தப்படுகிறார்கள். விண்ணப்பதாரிக்கு உறவினரல்லாத இரண்டு சிபாரிசுதாரர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி எண்கள் கொடுக்கப்பட வேண்டும்.

பணிப்பாளர் பதவிக்கு தகுதியான அனைத்து விண்ணப்பதாரர்களும் குறைந்தபட்சம் பத்து (10) நிமிடங்களுக்கு, பதினைந்து (15) நிமிடங்களுக்கு மேற்படாமல் சுருக்கமான விளக்கத்தை மேலாண்மை சபைக்கு வழங்க அழைக்கப்படுவார்கள்.

விண்ணப்பங்கள் பதில் பணிப்பாளர், மனிதநேயம் மற்றும் சமூகவிஞ்ஞானம் பற்றிய உயர் கல்வி தொடர்பான தேசிய நிலையம், 6A, சுகஸ்தான் கார்டன்ஸ், வோர்ட் பிளேஸ், கொழும்பு-07 என்ற முகவரிக்கு 21.10.2022 அன்று பிற்பகல் 3.30 மணிக்கு முன்னர் மேற்படி அலுவலகத்தில் கையளிக்க வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். பெப்ரவரி 25, 2021 அன்று வெளியிடப்பட்ட விளம்பரத்தின் அடிப்படையில் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரர்களும், இந்தப் புதிய விளம்பரத்தின் கீழ் மீண்டும் புதிய விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

உறையின் இடதுபுற மேல் மூலையில் "பணிப்பாளர் பதவி" என்ற வார்த்தைகள் குறிக்கப்பட வேண்டும். முழுமையடையாத அல்லது தகுதிகளை பூர்த்தி செய்யாத அல்லது இறுதித் திகதிக்குப் பிறகு பெறப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/NCAS
நிர்வாகக் குழுவின் செயலாளர்
**மனிதநேயம் மற்றும் சமூகவிஞ்ஞானம் பற்றிய உயர் கல்வி தொடர்பான தேசிய நிலையம்** (NCAS)
6A, சுகஸ்தான் கார்டன்ஸ், வோர்ட் பிளேஸ், கொழும்பு - 07.
22.09.2022


கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்ட

# முன்னாள் இராணுவ சிப்பாய்கள் மூன்று பேர் பொலிஸாரால் கைது

அநுராதபுரம் தினகரன் நிருபர்

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்கள் மற்றும் வீடு உடைத்தல் உள்ளிட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புடைய முன்னாள் இராணுவ சிப்பாய்கள் மூவரை அநுராதபுரம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கொள்ளைச் சம்பவங்கள் தொடர் பில் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸா ருக்கு கிடைத்த தகவலுக்கமைய கடந்த 19 ஆம் திகதி அநுராதபுரம் மற்றும் கஹட்டகஸ்திகிலிய பகுதி களில் நடத்திய தேடுதலின் போது சந்தேக நபர்கள் மூவரை கைது செய்துள்ளதுடன் ஒரு தொகை தங்க நகை மற்றும் இரண்டு மோட்டார் சைக்கிள்கள், கைக்குண்டு ஒன் றையும் சந்தேக நபர்களிடமிருந்து பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 21,24,35 வயதுடைய மன்னம்பிட் டிய மற்றும் கஹட்டகஸ்திகிலிய பகுதிகளை வசிப்பிடமாக கொண்ட இராணுவத்திலிருந்து தப்பிச் சென்ற மூவர் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.


### சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளரின் அலுவலகம், மட்டக்களப்பு கிழக்கு மாகாணம்

### விலைமனுக்களுக்கான அழைப்பு

மட்டக்களப்பு சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளரின் அலுவலகத்திற்கு கொள்வனவு செய்யப்படவுள்ள வைத்தியசாலை உபகரணங்கள் மற்றும் தளபாடங்களுக்காக, மட்டக்களப்பு சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளரின் அலுவலகத்தின் பெறுகைக் குழு முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றது.

| இல. | குறிப்பீட்டிலக்கம் | தேவையான அம்சங்கள் | எண்ணிக்கை | மீளளிக்கப்படாத விலைமனுக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | BT/RDHS/PO/PSSP/HEQ/01 | Stethoscope | 05 | 1,000.00 |
| | | Length Measuring Board | 15 | |
| | | Weighing Scale for Infants | 09 | |
| | | Height Measuring Rod | 06 | |
| | | Ophthalmoscope | 09 | |
| | | Glucometer | 03 | |
| | | Cholesterol Meter | 03 | |
| | | Knee Hammer | 25 | |
| | | Tuning Folk | 08 | |
| | | Thermometer Digital | 25 | |
| | | BP Apparatus – Android | 20 | |
| | | Single Channel Pipette | 04 | |
| | | Ultra Sonic Scaler | 04 | |
| | | Diagnostic Set | 04 | |
| | | Patients Trolley | 06 | |
| | | Dressing Trolley | 04 | |
| | | Wheel Chair | 04 | |

**விலைமனு நிபந்தனைகள் :**

பின்வருவனவற்றைச் சமர்ப்பித்து ஆர்வமுள்ள தகுதியுள்ள எந்தவொரு விலைமனுதாரர், முகவர் அல்லது பெயர் குறிப்பிடப்பட்டவர் ஆகியோர் 2022.09.22ஆம் திகதியிலிருந்து 2022.10.13ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்குமிடையில் இவ்வலுவலகத்தின் கணக்கிடல் கிளையிலிருந்து விலைமனு விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ளலாம்.

- மட்டக்களப்பு சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளருக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்று.
- மட்டக்களப்பு சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளரின் அலுவலகத்தின் பெயரில் மட்டக்களப்பு சுப்பர் தரக் கிளை இல. 012 இலங்கை வங்கி 0002699216 என்ற கணக்கிலக்கத்திற்கு ரொக்கப் பணத்தில் மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்துதல்.
- வியாபார பதிவுச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி.
- முதன்மையாளர்களினால் உங்கள் கம்பனியை அவர்தம் உற்பத்திப் பொருட்களுக்கு உள்நாட்டு முகவர்களாக நியமித்தல் தொடர்பாக வழங்கப்பட்ட சான்றிதழ்/கடிதம்.

1. முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை 2022.10.14ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளரின் அலுவலகம், மட்டக்களப்பு என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது மட்டக்களப்பு சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். முடிவுறுத்தப்படும் நேரம் முடிந்தவுடன் உடனடியாகவே விலைமனுக்கள் திறக்கப்படும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் 2 பிரதிகளில் தயாரிக்கப்பட்டு இரண்டு தனித்தனியான உறைகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என உள்ளிட்டு முத்திரைக் குறியிடப்பட்டு உறைகளின் இடது பக்க மேல் மூலையில் "குறிப்பீட்டிலக்கம்" குறிப்பிடப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
2. விலைமனுப் பெறுமதியின் 2% விலைமனுப்பிணைத் தொகையாக அனைத்து விலைமனுக்களுடன் இணைக்கப்படல் வேண்டும். முடிவுறுத்தப்படும் திகதியிலிருந்து 91 நாட்களுக்கு விலைமனுப்பிணைத் தொகை செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
3. பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.
4. 065-2222997 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக கணக்காளரிடமிருந்து தெளிவுறுத்தல்கள் ஏதுமிருப்பின் அவற்றை பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்,**
**மட்டக்களப்பு.**

## ஸ்ட்ரீட் சைல்ட் ஸ்ரீலங்கா அலுவலகத்தின் முகவரியை மாற்றுதல்

ஸ்ட்ரீட் சைல்ட் ஸ்ரீலங்கா அலுவலகம் திருகோணமலை, ஏகம்பரம் வீதி, 727/5, 1/1 இல் இருந்து இலங்கை, திருகோணமலை, நிலாவலி, உப்புவெலி St. Joseph's Pastoral Centre இற்கு மாற்றப்படுகிறது.

## விசேட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்.

கொழும்பு - 06, கஜபா இடத்தைச் சேர்ந்த பிறையன் பிறின்சோ வால்டர் (தேசிய அடையாள அட்டை இல.742890104V) ஆகிய நான் திருமதி சிபானி பாதிமா மஹ்றூப் (தேசிய அடையாள அட்டை இல.867453296V) என்பவருக்கு தத்துவமளித்து கொழும்பு சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமான மீராசாகிபு மஹ்றூப் அவர்களினால் 17 ஆம் திகதி ஜுன் மாதம் 2019 இல் அத்தாட்சிப்படுத்திய 72ம் இல. விசேட அற்றோணி தத்துவப்பத்திரம் என்னால் இரத்துச் செய்யப்பட்டு செல்லுபடியற்றதாக்கப் பட்டுள்ளது என்பதையும் எனது பெயரில் அவர் மேற்கொள்ளும் எந்த நடவடிக்கைகளுக்கும் நான் பொறுப்பாளியாக மாட்டேன் என்பதையும் சகலருக்கும் அறியத்தருகிறேன்.

**பிறையன் பிறின்சோ வால்டர்**

## வாகனங்கள் & இயந்திரங்கள் விலை மனு கோரல்

| Vehicle No | Make/Model | Yard |
|---|---|---|
| **மோட்டார் சைக்கிள்** | | |
| NW BHF-0624 | TVS SCOOTY PEP | குருநாகலை |
| NW BHK-4128 | TVS NTORQ | குருநாகலை |
| NW BHP-5294 | TVS NTORQ | குருநாகலை |
| WP BCF-5303 | HERO PLEASURE | களுத்துறை |
| WP BHO-1815 | YAMAHA RAY ZR | மாதிவெல |
| NP BHO4987 | TVS XL SUPER HD | கிளிநொச்சி |
| UP BFG-5135 | TVS NTORQ | மொணராகலை |
| NP BHV-6203 | HERO MAESTRO EDGE | சாவகச்சேரி |
| SP BIB-8866 | HONDA NAVI | காலி |
| SP BIQ-0087 | BAJAJ PLATINA ES UG | காலி |
| **முச்சக்கரவண்டிகள்** | | |
| NW QQ-9476 | BAJAJ AUTO AR4S | குருநாகலை |
| WP GY-3935 | BAJAJ AUTO AR5S | மாதிவெல |
| WP YI-1711 | TVS KING | மாதிவெல |
| **பஸ்** | | |
| 63-0312 | TOYOTA COASTER | மாதிவெல |
| **இயந்திரம்** | | |
| PRINTING MACHINE | HEIDELBERG MO-S | குருநாகலை |

மேலதிக விபரங்களுக்கு கீழுள்ள இலக்கத்திற்கு எம்மை தொடர்புகொள்ளவும்

| | | |
|---|---|---|
| தினேஷ் | மாதிவெலி சாலை | 071-0110160 |
| நிபுன ஆகாஷ் | குருநாகலை சாலை | 0772943514 |
| உதயா | காலி சாலை | 0776663389 |
| நிலட்சன் | சாவகச்சேரி சாலை | 0775968321 |
| ஜனகன் | கிளிநொச்சி சாலை | 076-7625149 |

மோட்டார் சைக்கிள், முச்சக்கரவண்டி, பஸ் மற்றும் இயந்திரங்களை 2022 செப்டெம்பர் 23ம், 24ம் மற்றும் 26 ஆம் திகதிகளில் காலை 8.30 மணியிலிருந்து 5.00 மணிவரை பார்வையிடலாம்.

2022 செப்டெம்பர் 26ம் திகதி மாலை 5 மணிக்கு பார்வையிடும் நேரம் முடிவடையும்

2022 செப்டெம்பர் 23ம் திகதி வரை மீளப்பெறமுடியாத ரூ. 300 ஐ செலுத்தி டெண்டர் படிவங்களை வாகன சாலை அல்லது கிளையிலிருந்து கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம். மாதிவெல சாலை டெண்டர் படிவங்கள் ஏசிய எசெட் தலைமை அலுவலகத்தில் கிடைக்கும் என்பதை நினைவில் கொள்ளவும்.
தாமதமாக சமர்பிக்கப்படுபவை ஏற்றுக்கொள்ள படமாட்டாது.

முன்னறிவித்தலின்றி எந்த வாகனம் / வாகனங்களையும் மீளப்பெற நிறுவனத்திற்கு உரிமையுண்டு.

ASIA ASSET FINANCE PLC

இல. 76, பார்க் வீதி, கொழும்பு 02. தொடர்பு.: 011-7-699000


SUNDAY OBSERVER adZ — தினகரன் வாரமஞ்சரி

Promotional Rates for Classified Advertisements (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| රු. 500/- (Except Thinakaran Varamanjari) | රු. 700/- (Except Thinakaran Varamanjari) | රු. 950/- |

- ISLANDWIDE -

SABARAGAMUWA PROVINCE

KEGALLE. 035-5677210, 035-2222427
M.M. Salgado & Sons, Salgado Bakery & Hotel

KEGALLE. 035-4926489, 035-2231716
Red Rose Book Shop, Royal Shopping Complex, Main St,

RATNAPURA. 045-2223883, 0777-221939
Lake House Advertising Centre, No. 88, Main Street,

RATNAPURA. 045-2230730
G.G. Karunaratne, No. 16, Church Road

SOUTHERN PROVINCE

AMBALANGODA. 091-2255744 / 4382034
H.D. Mendis, 96 B 1/1, Galle Road.

AMBALANGODA. 091-2258483, 0779639214
"Royal Book Shop", No. 152, Main Street,

BADDEGAMA. 091 2292263, 091 3926084
Gamage Book Shop,

BENTOTA 034-2270090, 034 2270572
Sumudu News Papers, No. 117, Galle Rd,

ELPITIYA. 091-2290746, 077-2609456
Chandima Groceries,

GALLE. 091-2232733, 091-5627646
New Aradhana Traders, 81, Maha Veediya,

GALLE. 0914-385548/0914-924261
Paranagama Traders, No. 28, P & J City, Gamini Mw,

HAMBANTOTA. 047-2220808, 0716-370337
Misiriya Stores, No. 37, Mahajana Pola,

HIKKADUWA. 091-2277792, 091-2277285
Gallage News Agencies, No. 270A, Galle Rd,

MATARA. 041-2222185, 0414921530
Nimini Stores, 69, Dharmapala Mawatha,

classified@lakehouse.lk
011 2 429 342 | 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380


# விலைமனுக்களுக்கான அழைப்பு

## CRP reagents, Plain Gel Tubes & Glucose Tubes கொள்வனவு செய்தல்

### கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை – களுபோவில தெஹிவளை

கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் பெறுகைக் குழுத் தலைவரினால் இந்த வைத்தியசாலையின் பிரதான ஆய்வுகூடத்திற்கு CRP reagents, Plain Gel Tubes & Glucose Tubes என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 01. | Plain Gel Tubes with clot Activator | - | 200,000nos |
| 02. | Glucose Tube | - | 37,000 nos |
| 03. | CRP reagents | - | 5,000 ml |
| 04. | CRP QC Level 2 | - | 10 ml |
| 05. | CRP QC Level 3 | - | 10 ml |
| 06. | CRP Calibrator (5 level) | - | 01 Kit |

(1) இது தொடர்பில் ஆர்வம் காட்டுவோர் விலைமனு ஆவணக் கட்டணமாக 2,000.00 ரூபாவை மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளருக்குச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் தமது தேசிய அடையாள அட்டையும் சமர்ப்பிப்பதன் பேரில் 2022-09-22ஆம் திகதி முதல் 2022-10-03ஆம் திகதி வரையான பொதுவான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை இந்த வைத்தியசாலையின் நிதிப் பிரிவில் விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

(02) விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலைக்கு **CRP reagents, Plain Gel Tubes & Glucose Tubes** என்பவற்றைக் கொள்வனவு செய்தல் - 2022-10-03'' எனக் குறிப்பிட்டு 2022-10-03ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, களுபோவில, தெஹிவளை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். 2022-10-03ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கணக்காளர் அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

(3) விலைமனுக்களை இரு பிரதிகளில் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு வெவ்வேறான உறைகளில் இட்டு பின் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டுச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(4) விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து அவ்விடத்திலேயே விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் அவ்வேளையில் கலந்து கொள்வதற்கு அனுமதி வழங்கப்படும்.

(5) விலைமனு ஆவணங்களை இலவசமாக கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை கணக்காளரின் அலுவலகத்தில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

(6) அரசாங்க ஒப்பந்தங்கள், நிபந்தனைகளை மீறி அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்ள நபர்களுக்கு விலைமனு விண்ணப்பங்கள் வழங்கப்படமாட்டாது.

(7) குறித்த விலைமனுவை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை பிராந்திய பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

(8) மேலதிக விபரங்களுக்கு கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை கணக்காளரைத் தொடர்பு கொள்ளவும். (தொலைபேசி: 0112763038)

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை,**
**களுபோவில, தெஹிவளை.**

# ஊவா மாகாண வருமானவரி ஆணையாளர் பதவிக்கு சேர்த்துக் கொள்வதற்காக விண்ணப்பம் கோரல் – 2022

ஊவா மாகாண வருமானவரித்திணைக்களத்தில் வெற்றிடமாகவுள்ள ஊவா மாகாண வருமானவரி ஆணையாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்காகப் பின்வரும் தகைமைகளையுடைய விண்ணப்பதாரர்களிடமிருந்து 2022.10.20 வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**02. ஆட்சேர்ப்புக்கான தகைமைகள்:-**

(அ) மாகாண வருமான வரித்திணைக்களத்தில் நிறைவேற்று அலுவலர் சேவை வகுதியின் Iஆம் தரத்தின் பிரதி ஆணையாளர் பதவியில் ஒரு வருடத்திற்கு (01) மேற்பட்ட சேவைக்காலத்தைக் கொண்டுள்ள அலுவலரொருவராக இருத்தல்

அல்லது

(ஆ) மேற்படி (அ) இன் கீழ் குறிப்பிடப்படும் அலுவலரொருவராக அல்லாத பட்சத்தில், www.psc.up.gov.lk இணையத்தளத்தில் 'ஊவா மாகாண வருமான வரி ஆணையாளர் பதவிக்கு ஆட்சேர்த்தல் -2022' இன் கீழுள்ள அட்டவணை இலக்கம் 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூரணப்படுத்தும் ஊவாமாகாண வருமான வரித் திணைக்களத்தின் நிறைவேற்று அலுவலர் சேவை வகுதி II தரத்தின் சிரேஷ்ட அலுவலரொருவராக இருத்தல்

அல்லது

(இ) மேற்படி (அ) அல்லது (ஆ) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலரொருவர் இல்லாத பட்சத்தில், வேறு மாகாண சபையொன்றின் வருமானவரி சேவையின் Iஆம் தரத்தின் பிரதி ஆணையாளர் பதவியில் (05) ஐந்தாண்டுக்கு மேற்பட்ட சேவைக்காலம் மற்றும் வருமானவரிச் சேவையில் பதினெட்டு (18) ஆண்டுகளிற்கு மேற்பட்ட முழுமையான சேவைக்காலத்தைக் கொண்டுள்ள தரம் I இன் அலுவலரொருவராக இருத்தல் அல்லது இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையிலிருந்து முழுமையாக விடுதலை பெற்றுக்கொள்ளக்கூடிய தரம் I பதவியொன்றில் ஐந்தாண்டுகளிற்கு (05) மேற்பட்ட சேவைக்காலத்தை கொண்டுள்ள அலுவலரொருவராக இருத்தல்

**குறிப்பு:** தகைமைகளை உறுதிப்படுத்தக்கூடிய அனைத்து சான்றிதழ்களினதும் நிழற்படப் பிரதிகள், தேசிய அடையாள அட்டை, மற்றும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் நிழற்படப் பிரதிகள் விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

**03. சம்பள அளவுத்திட்டம்:**

அரச நிருவாக சுற்றறிக்கை 03/2016 இன் SL-1-2016 இன் பிரகாரம்

ரூபா 47,615/- 10x1335 - 8x1,630 - 17x2,170 - ரூபா 110,895/- இற்கான சம்பளம் உரித்தாகும்.

**04. ஆட்சேர்ப்பு முறை:-**

சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களின் பிரகாரம் அடிப்படைத் தகைமைகளைப் பூரணப்படுத்தியுள்ள அலுவலர்கள் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வொன்றிற்கு உட்படுத்தப்படுவர். நேர்முகத் தேர்வில் ஆகக்கூடிய தகவுத்திறன்களை வெளிப்படுத்தும் நபர்கள் இதற்காக சேர்த்துக்கொள்ளப்படுவர். துறைக்குப் பொருத்தமான பட்டப்பின் பட்டமொன்று அல்லது அதற்கு மேற்பட்ட தகைமைகளைப் பெற்றிருத்தல், சேவைக்காலம். துறைசார் அறிவு நிருவாக இயலுமை மற்றும் வருமானவரி முகாமைத்துவம் தொடர்பாக, கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின்போது பரிசீலிக்கப்படும்.

05. பதவிக்கான ஆட்சேர்ப்புக்கான வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு. www.psc.up.gov.lk என்ற இணையத்தில் ஊவா மாகாண வருமானவரி ஆணையாளர் பதவிக்கு ஆட்சேர்த்தல் -2022 இன் கீழ், அட்டவணை இலக்கம் 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகவுத்திறன்களின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் போது புள்ளிகள் வழங்கப்படும்.

06. விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்:-

www.psc.up.gov.lk இணையத்தில் ஊவா மாகாண வருமான வரி ஆணையாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு 2022 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சுய தரவுத் தகவல்களை பிழைகளின்றிப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பமானது. திணைக்களத்தலைவர்/ அமைச்சின் செயலாளரினால், இப்பதவிக்காக தேர்ந்தெடுக்கப்படின் தற்போதைய பதவியிலிருந்து விடுவிக்கப்படலாமென்ற பரிந்துரையுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2022.10.20 அன்று அல்லது அதற்கு முன்னர் செயலாளர், ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு, இலக்கம் 14/4 பீலிபொத்தகம வீதி, பதுளை என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்களை அடக்கும் உறைகளின் இடது பக்க மேல் மூலையில், 'ஊவா மாகாண வருமான வரி ஆணையாளர் பதவிக்கு ஆட்சேர்த்தல் -2022' எனக் குறிப்பிடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் முழுமையாகப் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள், மற்றும் விண்ணப்பங்கோரப்படும் இறுதித் தினத்தன்று உரிய தகைமைகளைக் கொண்டிராத விண்ணப்பங்கள், எந்தவிதமான முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் தாமதமாகுதல் அல்லது காணாமலாகுதல் தொடர்பான முறைப்பாடுகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

07. இப்பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்தல் அல்லது ஆட்சேர்ப்புச் செய்யாமலிருத்தல் அல்லது இவ் ஆட்சேர்ப்பு தொடர்பாக இங்கு விதிமுறைகள் ஏற்பாடுசெய்யப்பட்டிராத விடயங்கள் தொடர்பாகத் தீர்மானம் மேற்கொள்ளும் உரிமை ஊவா மாகாண கௌரவ ஆளுநருக்கு உரித்தாகும்.

08. இது தொடர்பான மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அலுவலக தொலைபேசி இலக்கம் 055-2231460ஐ அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**காமினி மஹிந்தபால ஜோபியஸ்**
**செயலாளர்,**
**ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு**

**2022.09.20ஆம் திகதி**
**பதுளை**
**ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகத்தில்.**

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசாங்கம்

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

பெருந்தோட்ட அமைச்சு

### சிறு ஏற்றுமதி பயிர்த் தோட்ட அபிவிருத்திப் பிரிவு

## வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்

## மண் போக்குவரத்துக்காக 03 டிப்பர் வண்டிகளை வாடகைக்கு பெறுவதற்கான தேசிய போட்டி ரீதியான விலைமனு (S-118)

செவனகல பிரிவுக்கு 02 மாத காலத்திற்காக மண் போக்குவரத்துக்கு 03 டிப்பர் வண்டிகளை வாடகைக்கு வழங்க ஆர்வமுடைய தரப்புகளிடம் இருந்து வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்தின் திணைக்கள பெறுகைக் குழு (DPC), தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இத்தால் கோரப்படுகின்றன.

1. மீளளிக்கப்படாத கட்டணமாக 12,500.00 இலங்கை ரூபாவை செலுத்தி 2022 ஒக்டோபர் 10 ஆம் திகதி வரை வேலை நாட்களில் 9.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல. 27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு - 04 என்ற முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை விலைமனுதாரர்களால் கொள்வனவு செய்ய முடியும். ரொக்கப்பணம் மூலம் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும்.
2. விலைமனுதாரர் விலைமனு ஆவணங்களுடன் மீளளிக்கப்படாத வைப்பு ரசீதை இணைத்தல் வேண்டும். அவ்வாறு இணைக்கத் தவறினால் விலைமனு நிராகரிக்கப்படும்.
3. விலைமனுக்களை 2022 ஒக்டோபர் 11 ஆம் திகதி 14.00 மணி தாமதிக்காது தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல. 27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு - 04 என்ற முகவரிக்கு கிடைப்பதற்கு முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறையில் கைகளால் கொண்டுவந்து சேர்ப்பது, விரைதூதர் மூலம் அனுப்ப வேண்டும் என்பதோடு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "02 மாத காலத்திற்காக மண் போக்குவரத்துக்கு 03 டிப்பர் வண்டிகளை வாடகைக்கு பெறுவதற்கான கேள்விமனு" என்று தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அதன் பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் நிகழ்வில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்கலாம். தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. கேள்விமனுக் குழுவின் முடிவு இறுதியானதாகும்.
4. அனைத்து விலைமனுக்களும் கேள்விமனு திறக்கப்படும் திகதியில் இருந்து 119 நாட்கள் வரை செல்லுபடியானதாக 720,000.00 இலங்கை ரூபாவின் (எழுநூற்று இருபதாயிரம் மாத்திரம்) "விலைமனு பிணையை" கொண்டிருத்தல் வேண்டும் என்பதோடு மதிப்பிடப்படும் செலவு தோராயமாக 48 மில்லியன் இலங்கை ரூபாவாக அமையும்.
5. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவன - பெறுகை முகாமையாளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் (தொ. +94 11 2505558, கைபேசி +94 077 010 3359, தொலைநகல் +94 11 2500674, (மின்னஞ்சல்: sapumal@lscl.lk).

**தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு**
**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்**
**இல. 27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு - 04.**

# விளம்பரம்

## GSMB ஊழியர்களுக்கு ISO 9001:2015 தரநிலை தேவைப்பாடுகள் மற்றும் கணக்காய்வு முகாமைத்துவ முறைமைக்கான பயிற்சி சேவைகளை வழங்குவதற்காக விண்ணப்பங்களை அழைத்தல்

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகம் (GSMB) என்பது இலங்கையின் முதன்மையான அமைப்பு என்பதுடன் இது நாட்டின் கனித வளங்களின் முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளது. முறையான புவிச்சரிதவயில் வரைப்படமிடல் மற்றும் நாட்டின் கனிய வளங்களை மதிப்பிடுதல் மற்றும் கனிய ஆய்வு, அகழ்தல், செயலாக்கம், கனியங்களின் விற்பனை மற்றும் ஏற்றுமதி என்பன GSMBயின் பிரதான பொறுப்புகளாகும்.

அதனால், GSMBஇற்கு அதன் செயற்பாடுகளை நெறிப்படுத்துவதற்கும், அதன் வாடிக்கையாளர்களுக்கு அதிகபட்ச வாடிக்கையாளர் திருப்தியுடன் உயர்ந்த சேவையை வழங்குவதற்கும் அதிகாரபூர்வ அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வது இன்றியமையாத தேவையாக உள்ளது.

எனவே, GSMB யின் நிர்வாகம் அதன் பிரதான ஊழியர்களுக்கு ISO 9001:2015 தரநிலை தேவைப்பாடுகள் மற்றும் கணக்காய்வு முகாமைத்துவ முறைமைகளின் கணக்காய்பு குறித்து ISO 9001:2015 தரநிலைத் தேவைப்பாடுகளை நன்கு அறிந்த ஒரு பயிற்சியாளரிடமிருந்து பயிற்சியைப் பெற்றுக்கொள்ள முடிவு செய்துள்ளது மற்றும் பயிற்ச்சி சேவைகளை வழங்க விண்ணப்பங்களை அழைக்கின்றது.

**பயிற்சியாளர் பின்வரும் தகைமைகள் மற்றும் அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

- பொதுவான தொழில்சார் அனுபவம்: F ISO 9001:2015 தரநிலை தேவைப்பாடுகள் மற்றும் கணக்காய்வு முகாமைத்துவ முறைமைகளில் பயிற்சியளித்தலில் 5 வருட கால அனுபவம் மற்றும் பல்வேறு துறைகளில் முகாமைத்துவ முறைமைகளை நிறுவுவதில் ஈடுபாடு. (ஆவணச் சாட்சிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்)
- குறிப்பிடத்தக்க தொழில்சார் அனுபவம்: ISO 9001:2015 தரநிலை தேவைப்பாடுகளின் பிரகாரம் நிறுவுவதற்கான ஆலோசனை மற்றும் / அல்லது முகாமைத்துவ முறைமையை அமுலாக்குவதற்கான ஒத்துழைப்பில் 5 வருட கால அனுபவம். (ஆவணச் சாட்சிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்)

தகுதியுடைய நபர்கள் தங்களின் பூர்த்தி செய்யப்பட்ட முழுமையான விண்ணப்பங்களை ஒரு பயிற்சித் திட்டத்திற்கான விரிவான நிதி முன்மொழிவுடன் (பயிற்சிகளின் எண்ணிக்கை GSMBயால் தீர்மானிக்கப்படும்) மற்றும் பயிற்சி அட்டவணையை 2022-10-05ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகம், இல. 569, எப்பிட்டமுல்ல வீதி, பிட்டகோட்டே என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகம்,**
**இல. 569, எப்பிட்டமுல்ல வீதி, பிட்டகோட்டே.**

### பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு

## ஜனதா தோட்ட அபிவிருத்தி சபை

## ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான அழைப்பு

ஜனதா தோட்ட அபிவிருத்தி சபையின் கீழ் நிர்வகிக்கப்படும் கீழ்க்காணும் தேயிலைத் தொழிற்சாலைகள், அலுவலக வளாகம் மற்றும் பெருந்தோட்டத்தை நீண்டகால குத்தகையின் கீழ் விடுவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

| |
|---|
| போபிட்டிய தேயிலைத் தொழிற்சாலை - தெல்தோட்ட |
| கலஹா அலுவலக கட்டிடம் - கலஹா |
| துரேகந்தவத்த - இரத்தினபுரி |

விண்ணப்பங்கள் மற்றும் விபரங்களை 55/75 வொக்ஷோல் லேன், கொழும்பு - 02 இல் அமைந்துள்ள ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்தி சபையின் காணிப் பிரிவில் அல்லது கண்டி ஹந்தான வத்த, ஜனவசம பிரதேச அலுவலகத்தில் 2022.09.22ம் திகதி முதல் 2022.10.10 வரை ரூ. 5,000/- மீளளிக்கப்படாத கட்டணத்திற்கு உட்பட்டு விநியோகிக்கப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தலைவர், ஜனவசம 55/75, வொக்ஷோல் லேன், கொழும்பு - 02 என்ற முகவரிக்கு 2022.10.11ம் திகதிக்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அல்லது அம் முகவரியில் அமைந்துள்ள ஜனவசம தலைமையகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் உள்ளிடலாம்.

**தலைவர்,**
**ஜனதா தோட்ட அபிவிருத்தி சபை**
**இல. 55/75, வொக்ஷோல் லேன்,**
**கொழும்பு - 02**
**தொ.பே. 0115733112**

# விலைக்கோரல் அறிவித்தல்

## பெல்மடுல்ல பிரதேச சபை

## 2023ஆம் வருடத்தில் சபை வசமுள்ள பொதுச் சந்தையின் 14ஆம் இலக்க மீன் கடையை குத்தகைக்கு வழங்குவதற்கான விலைக்கோரல்

பெல்மடுல்ல பிரதேச சபையின் வசமுள்ள பொதுச் சந்தையின் மீன் கடையை 2023-01-01ஆம் திகதி முதல் 2022-12-31ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்காக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விப் படிவங்கள் 2022-09-22ஆம் திகதி மு.ப.10.00 மணி முதல் 2022-10-13ஆம் திகதி பி.ப. 1.00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

02. 2022-09-22ஆம் திகதி மு.ப.10.00 மணி முதல் 2022-10-13ஆம் திகதி ந.ப. 12.00 மணி வரையான வாரத்தின் வேலை நாட்களில் அலுவலக நேரத்தினுள் பெல்மடுல்ல பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் பொதுச் சந்தை மீன் கடைக்கான கேள்விப் படிவங்கள் வழங்கப்படும்.

- கேள்விப் படிவங்கள் இரு பிரதிகளில் வழங்கப்படும் என்பதுடன் அந்தக் கேள்விப் படிவங்களைப் பூர்த்தி செய்து இரண்டு உறைகளில் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் ''முதலாம் பிரதி'' மற்றும் ''இரண்டாம் பிரதி'' என வெவ்வேறாகக் குறிப்பிட்டு அந்த இரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரைக் குறிப்பிட்டு ''செயலாளர், பெல்மடுல்ல பிரதேச சபை, வில்ஹேன, பெல்மடுல்ல'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் 2022-10-13ஆம் திகதி பி.ப. 1.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் அனுப்புதல் வேண்டும்.
- கேள்விகளை நேரில் கொண்டுவந்து ஒப்படைக்க விரும்புபவர்கள் அந்த இரு பிரதிகளையும் மேற்குறிப்பிடப்பட்ட வகையில் தயாரித்து தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

03. கேள்விகள் திறக்கப்படுதல்.

2022-10-13ஆம் திகதி பி.ப. 1.00 மணிக்கு கேள்விப்பெட்டிக்கு முத்திரையிடப்படும் என்பதுடன் நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குப் பின் சமர்ப்பிக்கப்படும் அல்லது முழுமையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். 2022-10-13ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பெல்மடுல்ல பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கேள்விச் சபையின் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும். அந்த நேரத்தில் கேள்விகளைச் சமர்ப்பித்துள்ளவர்கள் அல்லது அவர்களால் அதிகாரம் வழங்கப்பட்ட அவர்களின் பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம். மேலும் ஒரு கேள்வியை அல்லது அனைத்துக் கேள்விகளையும் நிராகரிக்கும் அதிகாரத்தை பெல்மடுல்ல பிரதேச சபை தன்னத்தே கொண்டுள்ளது.

04. மேலதிக தகவல்களை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.30 மணி வரை 045-2274375 எனும் தொலைபேசி இலக்கத்தைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**அட்டவணை இல. 01**

| தொ. இல. | இடம் | விற்பனையின் தன்மை | படிவக் கட்டணம் | கேள்விப் பிணைத் தொகை | ஆகக் குறைந்த வருடாந்த கேள்வி |
|---|---|---|---|---|---|
| 01 | பெல்மடுல்ல பொதுச் சந்தை | மீன் கடை | ரூபா 3,000.00 | ரூபா 100,000.00 | ரூபா 300,000.00 |

**எச். ஏ. லக்ஷ்மன் பிரேமரத்ன,**
**தலைவர்,**
**பிரதேச சபை, பெல்படுல்ல.**

# அறிவித்தல்

2021 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட கடன் தரப்படுத்தல் முகவர் சட்டவிதிகளின் 88(இ) சட்டவிதியின் அடிப்படையில் ("கடன் மதிப்பீட்டு முகவர் சட்டவிதிகள்")

**இக்ரா லங்கா லிமிடெட் - வர்த்தக நடவடிக்கைகளை நிறுத்துதல் மற்றும் உரிமத்தை ஒப்படைத்தல்**

கடன் தரப்படுத்தல் முகவர் ஒன்றாக இக்ரா லங்கா லிமிடெட் ("இக்ரா லங்கா") நிறுவனத்தின் வர்த்தக நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு மற்றும் 2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் சட்டத்தின் கீழ் கடன் தரப்படுத்தல் நிறுவனமாக வியாபாரத்தை நடாத்துவதற்கு பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் ("SEC") இக்ரா லங்கா நிறவனத்திற்கு வழங்கப்பட்ட உரிமத்தை ஒப்படைக்கவும் இக்ரா லங்கா நிறுவனத்தின் பணிப்பாளர்கள் சபை முடிவு செய்துள்ளது.

கடன் தரப்படுத்தல் விதிகளின் 88(ஆ) சட்டவிதியின் படி, இக்ரா லங்காவின் நிலுவையாக உள்ள தரப்படுத்தல் கடப்பாடுகளைக் கொண்டவர்கள் தொடர்பிலான அதன் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் அதன் வியாபார நடவடிக்கையை நிறுவத்துவதற்கான மேற்சொல்லப்பட்ட தீர்மானத்தை அறிவித்தும் மற்றும் அத்தகைய நிலுவையில் உள்ள தரமதிப்பீட்டுக் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவிலிருந்து உரிமம் பெற்ற மற்றொரு கடன் தரப்படுத்தல் முகவரின் சேவைகளில் ஈடுபடுவதற்கு அவர்களைக் கோரியும் அதன் சகல வாடிக்கையாளர்களுக்கும் எழுத்து மூல தொடர்பாடலை மேற்கொண்டுள்ளது.

14 ஒக்டோபர் 2022 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர், தரமதிப்படுத்தல் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு உரிமம் பெற்ற மற்றொரு கடன் தரமதிப்பீட்டு நிறுவனத்தின் சேவைகளில் ஈடுபடுமாறு வாடிக்கையாளர்களுக்கு விடுக்கப்பட்ட கோரிக்கை தொடர்பாக அனைத்து வாடிக்கையாளர்களும் இக்ரா லங்கா நிறுவனத்திற்கு பதிலளிக்க வேண்டும். மேலும், இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக தனக்கு ஏதேனும் முறைப்பாடு இருக்கக்கூடிய எந்தவொரு வாடிக்கையாளரும், மேற்கூறிய திகதியில் அல்லது அதற்கு முன்னதாக இக்ரா லங்காவிற்கு அத்தகைய முறைப்பாட்டை தெரிவிக்க வேண்டும்.

**பணிப்பாளர்கள் சபையின் உத்தரவின்படி**
**பணிப்பாளர்**
**இக்ரா லங்கா லிமிடெட்**

# 1964 இல. 28 காணி சுவீகரிப்பு (திருத்தப்பட்ட) சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறு காணி சுவீகரிப்புச் சட்டத்தின் (460ஆம் அத்தியாயம்) 7(1)ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல்

**எனது இலக்கம் :-** KEG/LAN/AQU/A3/01/119
**காணி அமைச்சின் குறிப்பு இல.:** 4-3/10/2013/VE/375

கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணித் துண்டுகளை கேகாலை பிரதேச செயலகப் பிரிவில் 2016 மண் சரிவின் மூலம் அகதிகலானவர்களை மீளக் குடியேற்றுவதற்காக யட்டிதேரிய தோட்டம் - உந்துகொட பிரிவு அரசாங்கத்திற்கு சுவீகரிக்கப்படவுள்ளது. மேலதிக விபரங்களுக்காக 2022ஆம் வருடம் 08 மாதம் 20 திகதிய இலக்கம் 2293/77 இலங்கை சனநாயக ஷோசலிசக் குடியரசின் அதி விஷேட வர்த்தமானிப்பத்திரத்தைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாவட்டம் | : கேகாலை |
| பிரதேச செயலாளர் பிரிவு | : கேகாலை |
| கிராம அலுவலர் பிரிவு | : 56 பி உந்துகொட |
| கிராமத்தின் பெயர் | : பஹல யட்டிதேரிய தோட்டம் |
| காணிகளின் பெயர் | : யட்டிதேரிய தோட்டம் |
| வரைபட இலக்கம் மற்றும் காணித்துண்டு இலக்கம் | : கே 3853 இல் காணித் துண்டு இலக்கம் 01 |

**கே.ஜீ.எஸ். நிஷாந்த**
**பிரதேச செயலாளர்,**
**கேகாலை.**

**2022.09 மாதம் 14ஆந் திகதி**
**கேகாலை பிரதேச செயலகத்தில்**

## பெயர் மாற்றம்

சம்மாந்துறை 95/A மல் 15ம் வீதி புளக் 'J' மேற்கு 01ல் வதியும் முகம்மது ஜுஹார் ஸோபாபேகம் (தே.அ.அ.இல. 997772768V) ஆகிய நான் எனது பெயரை சுயவிருப்பத்துடன் முகம்மது ஜுஹார் சமீஹா பேகம் என மாற்றியுள்ளதாக இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

**- முகம்மது ஜுஹார் சமீஹா பேகம்**

## பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியின் பெயர் மாற்றம் பற்றிய பொது அறிவித்தல்

2007 ஆண்டின் 07ஆம் இலக்க நிறுவனச் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் நிறுவனத்தின் பெயர் மாற்றப் பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

நிறுவனத்தின் முன்னைய பெயர்: **லங்கா இன்ஸ்டிடியூட் ஒ.ஃப் ஃபெஷன் டெக்னொலொஜி (பிரைவட்) லிமிட்டட்**
பதிவிலக்கம்: PV 3725
பதிவு அலுவலகம்: பீட்டர்சன் டவர், #324/2, லெவல் 3/6, ஹெவலொக் சிட்டி, ஹெவலொக் வீதி, கொழும்பு-6.
நிறுவனத்தின் புதிய பெயர்: **இன்டர்நெஷனல் அக்கடமி ஒ.ஃப் ஃபெஷன் (பீவீஎ) எல்டீடி**
பெயர் மாற்றப்பட்ட திகதி: 2022 செப்டெம்பர் 30
**கம்பனிச் செயலாளர்**

# விலைமனுக் கோரல்

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| பிராந்தியம் | கேள்வி இல. பொருட்களது விபரம் - தொகை | விலைமனு கோரல் முடிவுத் திகதி | விலைமனு ஆவணம் பெறும் இடமும் தொ.பே. இலக்கமும் | விலைமனு ஆவண விலை (ரூபா) | கேள்வி விபரம் ICB/NCB |
| | | | **சேவைகள்** | | |
| பிராந்தியம்-02 கிழக்கு | **DGM(E)/QPPC/22/121**<br>வாடகைக்கு மோட்டார் கார் பிரதம மின் பொறியியலாளர் (வர்த்தகம்) – கிழக்கு திருகோணமலை<br>(இரண்டு வருட காலம்) | 05-10-2022 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666, 026-2221030 | 1,000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | **DGM(E)/QPPC/22/122**<br>வாடகைக்கு மோட்டார் கார் - பிரதேச பிரதம மின் பொறியியலாளர் -அம்பாறை<br>(இரண்டு வருட காலம்) | 05-10-2022 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம்,அம்பாறை<br>063-2222387, 063-2222078<br>அல்லது<br>பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666, 026-2221030 | 1,000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | **DGM(E)/QPPC/22/123**<br>வாடகைக்கு வான் - மின் அத்தியட்சகர் (அக்கரைப்பற்று மின் பாவனையாளர் சேவை நிலையம்)–அம்பாறை<br>(இரண்டு வருட காலம்) | 05-10-2022 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம்,அம்பாறை<br>063-2222387, 063-2222078<br>அல்லது<br>பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666, 026-2221030 | 1,000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | **DGM(E)/QPPC/22/124**<br>வாடகைக்கு வான் /டபிள்கப் - மின் அத்தியட்சகர் (கிங்குராண மின் பாவனையாளர் சேவை நிலையம்) – அம்பாறை | 05-10-2022 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம்,அம்பாறை<br>063-2222387, 063-2222078<br>அல்லது<br>பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666, 026-2221030 | 1,000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | **DGM(E)/QPPC/22/125**<br>வாடகைக்கு வான் -<br>மின் அத்தியட்சகர் (இங்கினியாகலை மின் பாவனையாளர் சேவை நிலையம்) - அம்பாறை<br>(இரண்டு வருட காலம்) | 05-10-2022 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம்,அம்பாறை<br>063-2222387, 063-2222078<br>அல்லது<br>பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666, 026-2221030 | 1,000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | **DGM(E)/QPPC/22/126**<br>வாடகைக்கு கார் மின் பொறியியலாளர் (விநியோகபராமரிப்பு பிரிவு) திருகோணமலை | 05-10-2022 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666, 026-2221030 | 1,000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | **DGM(E)/QPPC/22/127**<br>வாடகைக்கு வான்<br>தகவல் தொழில்நுட்ப அதிகாரி (கிழக்கு) - திருகோணமலை<br>(இரண்டு வருட காலம்) | 05-10-2022 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666<br>026-2221030 | 1,000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | **DGM(E)/QPPC/22/128**<br>வாடகைக்கு கார் (பிரதேச பிரதம மின் பொறியியலாளர்)- மட்டக்களப்பு<br>(இரண்டு வருட காலம்) | 05-10-2022 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம்,( மட்டக்களப்பு)<br>065-2222639<br>அல்லது<br>பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666, 026-2221030 | 1,000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | **DGM(E)/QPPC/22/129**<br>வாடகைக்கு வான்<br>பொறியியல் உதவியாளர் – கல்முனை<br>(இரண்டு வருட காலம்) | 05-10-2022 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம்,கல்முனை<br>067-2229276<br>அல்லது<br>பிரதிப் பொது பொறியியலாளர்(கிழக்கு) அலுவலகம்,திருகோணமலை<br>026-2222666, 026-2221030 | 1,000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/22/130;<br>வாடகைக்கு வான் -<br>மின் அத்தியட்சகர் (விநியோக பராமரிப்பு பிரிவு)- மட்டக்களப்பு<br>(இரண்டுவருடகாலம்) | 05-10-2022 ம் திகதி பி.ப.2.00 மணி | விநியோக பராமரிப்பு பிரிவு அலுவலகம்,(மட்டக்களப்பு)<br>065-2227761<br>அல்லது<br>பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666, 026-2221030 | 1,000.00 | NCB |

மேற்குறித்த பொருட்கள் வழங்கப்படல் தொடர்பாக வழங்குதாரர்களிடமிருந்து இலங்கை பிராந்தியம்-02 மின்சார சபை சார்பாக கொள்வனவுக்குழுவின் தலைவர் சர்வதேச/ தேசிய போட்டித்தன்மையுடன் கூடியதான விலைமனுக்களைக் கோருகின்றார். இலங்கை மின்சார சபையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆவணங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற முகவர்களுக்கு மாத்திரமே விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும். தேவைக்கேற்ப அவர்கள் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்திற்கேற்ப பதிவு செய்து கொள்ளல் வேண்டும்.

விலைமனுக்கோரல் முடிவுத்திகதிக்கு இரண்டு தினங்கள் இருக்கும் வரை விலைமனு ஆவணங்கள் விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர்கள் அல்லது அவர்களது முகவர்கள் மூலம் உரித்தான முறையில் இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளருக்கு/ பிரதம பொறியியலாளருக்கு எழுத்துமூலமாக விண்ணப்பித்து 5ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை வழங்குவதன் மூலம் கடமை நாட்களில் 09.00 மணி முதல் 15.00 மணி வரையிலான காலப்பகுதிக்குள் ஆவணங்கள் பெற்றுக்கொள்ளலாம். பணமாகவோ இலங்கை மின்சார சபை பொது முகாமையாளர் சார்பாக வரையப்பட்ட வங்கி வரைவுப் பத்திரம் ஒன்றின் மூலமாகவோ கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படலாம்.

எழுத்துமூலமான விண்ணப்பமொன்றின் அடிப்படையில் வெளிநாட்டுத் தூதரகங்கள்/வர்த்தக ஆணைக்குழுக்கள் என்பன இலவசமான முறையில் விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இ.மி. சபையின் உரித்தான பி.பொ.மு/ பிரதம பொறியியலாளர்களது அலுவலகங்களில் வைத்து உத்தேச விலைமனுதாரர்களினாலும் அவர்களது முகவர்களினாலும் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாகப் பரிசீலிக்கப்படலாம்.

4ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் வைத்து விலைமனுதாரர்கள் மற்றும் அவர்களது முகவர்கள் முன்பாக விலைமனுக்கோரல் நேரம் முடிந்தவுடனேயே விலைமனுக்கள் திறக்கப்படும். காலம் பிந்தி வரும் மனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனு ஆவணங்கள் விநியோகிப்பவர்களான இ.மி.சபை, பொ.மு/ பிரதம பொறியியலாளர் ஆகியோர்களிடமிருந்து விலைமனுக்கோரல் முடிவுத் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்பாக அனைத்து விளக்கங்களும் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

**பொது முகாமையாளர்**

**வளமான வாழ்விற்கு மின்சாரம்**

**விலைமனு ஆவணத்தின் தகவல் பிரதியானது www.ceb.lk என்ற இ.மி.ச. கூட்டுரு இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்படலாம்.**

OBSERVER JOBS

BREAKING BOUNDARIES

THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE

FOR JOBSEEKERS

www. observerjobs. lk

## பெறுகை அறிவித்தல்

### இலங்கை தேசிய வைத்தியசாலை – கொழும்பு – 10

**இலங்கை தேசிய வைத்தியசாலைக்கு மடிக் கணனிகளை (Laptop Computers) மற்றும் துணை உருப்புக்களை வழங்கல்**

இலங்கை தேசிய வைத்தியசாலையின் தேவைக்காக பின்வரும் உருப்படிகளைக் கொள்வனவு செய்து கொள்வதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.

| | விபரம் | எண்ணிக்கை | குறியீட்டு இலக்கம் |
|---|---|---|---|
| 1 | Laptop Computers | 30 | SH/11/PACS/2022 |
| 2 | Wi-Fi Access Points | 26 | |

இதற்காகத் தகைமையுள்ள நிறுவனங்கள் மற்றும் நபர்கள் விண்ணப்பிக்கலாமென்பதுடன் Laptop Computers 30 மற்றும் WiFI Access Points 26 இற்காக மீளளிக்கப்படாத ரூபா 1,000.00 இற்கான வைப்பு ஒன்றை இலங்கை தேசிய வைத்தியசாலையின் சிறாப்பரிடம் செலுத்திய பின்னர். 2022.09.23 முதல் 2022.10.13 வரை வார வேலை நாட்களில் மு.ப. 09.00 முதல் பி.ப. 02.00 வரையான காலப்பிரிவில் இவ்வைத்தியாசலையின் வழங்கல் பிரிவில் இதற்கான கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

2022.10.14 அன்று மு.ப. 10.00 இற்கு இலங்கை தேசிய வைத்தியாசலையின் பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படும்.

**டாக்டர் டப்ளியு. கே. விக்ரமசிங்ஹ**
**தலைவர்,**
**பிராந்தியப் பெறுகைக்குழு,**
**இலங்கை தேசிய வைத்தியசாலை.**

## இலங்கை முதலீட்டுச் சபை

### பெறுகை அறிவித்தல்

பின்வரும் பெறுகைக்கான விலைக்கோரல் விளம்பரம் 2022 செப்டெம்பர் 22ஆம் திகதிய ''டெய்லி நியூஸ்'' பத்திரிகையிலும் இலங்கை முதலீட்டுச் சபையின் உத்தியோகபூர்வ இணையதளத்திலும் பிரசுரிக்கப்பட்டுள்ளன. (www.investsrilanka.com)

**ADVERTISEMENT ON INVITATION TO SUBMIT PROPOSALS FOR SELECTION OF A SERVICE PROVIDER FOR DESIGN, DEVELOPMENT IMPLEMENTATION, COMMISSIONING AND MAINTENANCE OF WEB BASED INVESTMENT APPROVAL WORKFLOW MANAGEMENT SYSTEM (lAWMS) AND CENTRAL DOCUMENT MANAGEMENT SYSTEM (CDMS)**

**CONTRACT NO: BOI/S&S/Q/064/2022**

மேற்படி பெறுகைக்கு இயைபான கேள்விப் படிவங்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதுடன் விலைமனுக்களைச் சமர்ப்பிக்க ஆர்வம் காட்டும் ஒப்பந்தக்காரர்கள் ''டெய்லி நியூஸ்'' பத்திரிகையிலும் இலங்கை முதலீட்டுச் சபையின் உத்தியோகபூர்வ இணையதளத்திலும் பிரசுரிக்கப்பட்டுள்ள விளம்பரத்தின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது. (www.investsrilanka.com)

விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை 0112-2543041/074-1531432 எனும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாக பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**இலங்கை முதலீட்டுச் சபை.**

## சுகாதார அமைச்சு

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### இலங்கை திரிபோஷ லிமிடெட்டிற்கு 1500 மெ.தொன் சோளம் (விலைக்கோரல் இல. MH/PB/02/08/2022) மற்றும் 500 மெ.தொன் சோயா அவரைக்கான (விலைக்கோரல் இல. MH/PB/02/09/2022) பெறுகை

1. இலங்கை திரிபோஷ லிமிடெட்டிற்கு 1500 மெ.தொன் சோளம் மற்றும் 500 மெ.தொன் சோயா அவரையை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை சுகாதார அமைச்சின் சார்பில் அமைச்சுப் பெறுகைக் குழு “A” தலைவர் அழைக்கின்றார்.
2. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் இடம்பெறும்.
3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதியைப் பெறுவதற்கு, விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் விலைமனுதாரர் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
4. விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 91 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும். 2022-10-13ஆம் திகதி முதல் 2023-01-12ஆம் திகதி வரை
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 01ஆம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தியதன் பின் 2022-09-22ஆம் திகதி முதல் 2022-10-12ஆம் திகதி வரையான காலத்தில் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை பின்வரும் முகவரியில் அமைந்துள்ள மேலதிகச் செயலாளர் (பெறுகைகள்) அவர்களிடமிருந்து ஆங்கில மொழியிலான விலைக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். மீளளிக்கப்படாத கட்டணத்தை இலங்கை வங்கி - தப்ரபேன் கிளையில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் பேணப்படும் 7040244 எனும் கணக்கிலத்திற்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் எழுத்துமூலமான வேண்டுகோள் கடிதத்தை பின்வரும் முகவரிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. விலைமனுக்களை 2022-10-13ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் மேற்குறிப்பிடப்பட்ட நேரத்தில் முடிவுறுத்தப்பட்டு அதன்பின் உடன் திறக்கப்படும்.
7. சகல விலைமனுக்களுடனும் 01ஆம் இலக்க அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| பெறுகையின் பெயர் | மீளளிக்கப்படாத கட்டணம் (இல. ரூபா) | விலைக்கோரல் பிணை முறித் தொகை (இல. ரூபா) | விலைக்கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|
| 1500 மெ.தொன் சோளத்திற்கான பெறுகை (விலைக்கோரல் இல. MH/PB/02/08/2022) | 50,000.00 | 3,900,000.00 | 2023-02-09 |
| 500 மெ.தொன் சோயா அவரைக்கான பெறுகை (விலைக்கோரல் இல. MH/PB/02/09/2022) | 46,500.00 | 3,380.000.00 | 2023-02-09 |

8. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை சுகாதார அமைச்சு, சிரேஷ்ட உதவிச் செயலாளர் (பெறுகை - 11) அல்லது மேலதிகச் செயலாளர் (பெறுகை) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைக்கோரல் ஆவணங்களை பின்வரும் முகவரியில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரையில் பரீட்சித்துப் பார்க்கலாம். தொலைபேசி இல. 0112112713/0112112717, மின்னஞ்சல்: addlseepb@health.gov.lk
9. மேற்குறிப்பிடப்பட்ட முகவரியானது
மேலதிகச் செயலாளர் (பெறுகை),
பெறுகைப் பிரிவு,
சுகாதார அமைச்சு (புதிய கட்டிடம்),
பெறுகைப் பிரிவு, 2ஆம் மாடி,
இல. 26, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு-10.

**தலைவர்,**
**அமைச்சுப் பெறுகைக் குழு “A”**
**பெறுகைப் பிரிவு,**
**சுகாதார அமைச்சு (புதிய கட்டிடம்),**
**பெறுகைப் பிரிவு, 2ஆம் மாடி,**
**இல. 26, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு-10.**

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB 2022)

### யாழ்ப்பாண மாநகர சபை

### UNDP- CDLG இன் கீழ் பசுமையான இடங்களை நிறுவுதல்

### இலந்தைக்குளத்தில் இன்டர்லொக் பதித்தலை மேம்படுத்துதல், வண்ணக்குளத்தில் இன்டர்லொக் பதித்தலை மேம்படுத்துதல் மற்றும் பண்ணை கடற்கரை பூங்காவில் சூரிய சக்தி வீதி விளக்குகளை பொருத்துதல் மற்றும் வழங்குதல்

**(JMC/WD/CDLG/4Mn/2022/01, JMC/WD/CDLG/4Mn/2022/02 மற்றும் JMC/WD/CDLG/4Mn/2022/03)**

1. இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு UNDP நிதியத்திலிருந்து பசுமை இடங்களை நிறுவதற்காக கடன் வசதியொன்றைப் பெற்றுள்ளதுடன் அதன் ஒரு பகுதியை இலந்தைக்குளத்தில் இன்டர்லொக் பதித்தலை மேம்படுத்துதல், வண்ணக்குளத்தில் இன்டர்லொக் பதித்தலை மேம்படுத்துதல் மற்றும் பண்ணை கடற்கரை பூங்காவில் சூரிய சக்தி வீதி விளக்குகளை பொருத்துதல் மற்றும் வழங்குதல் எனும் ஒப்பந்தத்தின் கீழான கொடுப்பனவுகளுக்கு பயன்படுத்த உத்தேசித்துள்ளது.
2. பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை வட மாகாணம், யாழ்ப்பாண மாநகர சபையின் சார்பில் உள்ளூராட்சி நிறுவன பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.
3. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.
4. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை யாழ்ப்பாண மாநகர சபை நகர பிதா / ஆணையாளரிமபிருந்து 2022 செப்டெம்பர் 22ஆம் திகதி முதல் 2022 ஒக்டோபர் 13ஆம் திகதி வரையான எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரையில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: **021-221 6468** தொலைநகல்: **021-222 2334**)
5. தகுதித் தேவைப்பாடுகள் விலைமனு ஆவணத்தின் அட்டவணையில் 4ஆம் பிரிவில் குறித்துக் காட்டப்பட்டுள்ளன. மேலதிக தகவல்கள் விலைமனு ஆவணத்தின் 5ஆம் பிரிவில் (அட்டவணை) வழங்கப்பட்டுள்ளன.
6. ஒப்பந்தத்தைக் கையளிக்க தகுதி பெறுவதற்கு வெற்றிகரமான விலைமனுதாரர் நிதி அமைச்சு அல்லது உலக வங்கி அல்லது வேறு ஏதாவது ஏற்றுக்கொள்ளக்கூடிய நிறுவனங்களினால் அபகீர்த்தியாளர் பட்டியிலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் உள்நாட்டு ஒப்பந்தக்காரர்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள தரத்திற்கு கட்டிட நிர்மாணத் துறையில் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
7. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2022 செப்டெம்பர் 22ஆம் திகதி முதல் 2022 ஒக்டோபர் 12ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் 1000.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியும் பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் கடிதமொன்றையும் சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கட்டணங்களை ரொக்கப் பணமாகவே செலுத்துதல் வேண்டும்.
8. நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை பின்வரும் முகவரிக்கு 2022 ஒக்டோபர் 13ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன்பதாக ஒப்படைத்தல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம்தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். விலைமனுக்களுடன் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் விலைக்கோரல் பிணை முறியொன்று கட்டாயம் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
9. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2022 செப்டெம்பர் 30ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு யாழப்பாண மாநகர சபையில் இடம்பெறும். ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் தங்கள் சொந்த செலவில் இதில் கலந்துகொள்ளலாம்.

| இல. | ஒப்பந்த இல. | வேலை விபரங்கள் | மதிப்பீட்டுக் கிரயச் செலவு ரூபா (மில்லியன்) | ஒப்பந்தக் காலம் | தேவையான தரம் | விலை மனுக்கள் சமர்ப்பிக்கும் நாள் முதல் விலை மனுக்களின் செல்லுபடிக் காலம் | தேவையான விலைக்கோரல் பிணை முறி | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | பிணை முறித் தொகை (ரூபா) | செல்லு படிக் காலம் |
| 1 | JMC/WD/CDLG/4Mn/2022/01 | இலந்தைக்குளத்தில் இன்டர்லொக் பதித்தலை மேம்படுத்துதல் | 1.58 | 90 நாட்கள் | C9 அல்லது அதற்கு மேல் (கட்டிடங்கள்) | 49 நாட்கள் | 16,000.00 | 29.12.2022 |
| 2 | JMC/WD/CDLG/4Mn/2022/02 | வண்ணக்குளத்தில் இன்டர்லொக் பதித்தலை மேம்படுத்துதல் | 0.96 | 90 நாட்கள் | C9 அல்லது அதற்கு மேல் (கட்டிடங்கள்) | 49 நாட்கள் | 10,000.00 | 29.12.2022 |
| 3 | JMC/WD/CDLG/4Mn/2022/03 | பண்ணை கடற்கரை பூங்காவில் சூரிய சக்தி வீதி விளக்குகளை பொருத்துதல் மற்றும் வழங்குதல் | 0.94 | 90 நாட்கள் | C9 அல்லது அதற்கு மேல் (கட்டிடங்கள்) | 49 நாட்கள் | 9,500.00 | 29.12.2022 |

**தலைவர்,**
**உள்ளூராட்சி நிறுவன பெறுகைக் குழு,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம், வட மாகாணம்.**
22-09-2022

## பெறுகை அறிவித்தல்

## களனி பிரதேச சபை

களனி பிரதேச சபை அதிகாரப் பிரிவிலுள்ள பின்வரும் இலக்கம் 01 முதல் 08 வரையான ஆதனங்களை 2023.01.01 முதல் 2023.12.31 வரை மற்றும் இலக்கம் 09 இன் கீழுள்ள ஆதனங்களை 2023.01.01 முதல் 03 வருட காலத்திற்குக் குத்தகைக்கு விடுவதற்காக கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை 2022.10.10 அன்று பி.ப. 03.00 வரை களனி பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாமென்பதுடன் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 2022.10.11 அன்று மு.ப. 10.00 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

எழுத்துருவ மூல விண்ணப்பமொன்றுடன் மீளளிக்கப்படாத ரூபா 3,000.00 இற்கான படிவக் கட்டணத்தையும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, ஆதனத்திற்கான மீளளிக்கப்படும் கேள்விப் பிணைத் தொகையையும் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டுக்களைச் சமர்ப்பிப்பதன் பேரில் மாத்திரம் இதற்கான மாதிரிப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விக்கான விண்ணப்பப்படிவங்கள் இரண்டு பிரதிகளாக வழங்கப்படுவதுடன் , அவற்றை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு தனித்தனியாக முத்திரையிட்டு மீண்டும் அவற்றை ஒருறையில் உள்ளிட்டு முத்திரையிட்டு “செயலாளர், களனி பிரதேச சபை” என்ற முகவரிக்கு 2022.10.11 அன்று மு.ப. 10.00 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது குறித்த நேரத்திற்கு முன்னர் களனிப்பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிற் சேர்த்தல் முடியும். கேள்விகளை உள்ளடக்கும் உறைகளின் இடது பக்க மேல் மூலையில் கேள்விப்பரப்பு குறிப்பிடப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்படாத கேள்விகளிற்கான வைப்புத் தொகை மற்றும் ஆகக் குறைந்த கேள்விக்கும் குறைவாக சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் நிராகரிக்கப்பட்டு பிணைத்தொகை சபைக்கு உரித்தாக்கப்படும்.

2022.10.11 அன்று மு.ப. 10.00 வரை கேள்விகள் மூடப்பட்டதும் உடனடியாக கேள்விகளைத் திறத்தல் இவ் அலுவலகத்தில் மேற்கொள்ளப்படும் அவ்வேளையில் கேள்விதாரர்கள் அல்லது கேள்விதாரர்களின் எழுத்துருவ அதிகாரமளிக்கப் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

சித்திகரமான கேள்விதாரர்களிற்கு, கேள்விகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டதன் பின்னர், கேள்விதாரர்கள், ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வித் தொகையின் 3 மாத வாடகைத் தொகையை இவ் அலுவலகத்தில் வைப்புச் செய்து ஒப்பந்தமொன்று கைச்சாத்திடுதல் வேண்டும். மேலும் அரச வரிகளும் செலுத்துதல் வேண்டும்.

மேலும் கேள்விதாரர்கள், களனி பிரதேச சபையினால் விதிக்கப்பட்டுள்ள மற்றும் பின்னர் விதிக்கப்படும் இடை ஒழுங்கு விதிகள் மற்றும் நிபந்தனைகளிற்கு உட்படுத்தல் வேண்டும். கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் தொடர்பான இறுதித் தீர்மானம் களனிப் பிரதேச சபையின் கேள்விச் சபைக்கு உரித்தாகும். தொலைபேசி இலக்கம் : 011-2914110.

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | வர்த்தக அமைவிடம் | ஆகக் குறைந்த கேள்வி ரூபா | கேள்வி வைப்பு ரூபா | படிவக் கட்டணம் ரூபா | குத்தகைக் காலம் |
|---|---|---|---|---|---|
| 01 | கிரிபத்கொட மத்திய சந்தை ஆடு, கோழி இறைச்சிக் கடை | 1,050,000.00 | 10,500.00 | 3,000.00 | 2023.01.01 2023.12.31 |
| 02 | கிரிபத்கொட மத்திய சந்தை பன்றி இறைச்சிக் கடை | 748,125.00 | 7,500.00 | 3,000.00 | 2023.01.01 2023.12.31 |
| 03 | கிரிபத்கொட மத்திய சந்தை மீன் கடை | 136,500.00 | 5,000.00 | 3,000.00 | 2023.01.01 2023.12.31 |
| 04 | ஹுணுப்பிட்டி வார சந்தை, ஆடு, கோழி இறைச்சிக் கடை | 525,000.00 | 5,250.00 | 3,000.00 | 2023.01.01 2023.12.31 |
| 05 | ஹுணுப்பிட்டி வாரசந்தை பன்றி இறைச்சிக் கடை | 698,250.00 | 7,000.00 | 3,000.00 | 2023.01.01 2023.12.31 |
| 06 | தொரண சந்தி ஆடு, கோழி இறைச்சிக் கடை | 304,500.00 | 5,000.00 | 3,000.00 | 2023.01.01 2023.12.31 |
| 07 | கிரிபத்கொட கழிவறைத் தொகுதி | 105,000.00 | 5,000.00 | 3,000.00 | 2023.01.01 2023.12.31 |
| 08 | தொரணசந்தி பொதுச் சந்தையின் முன்னாலுள்ள வர்த்தக நிலையம் | 277,200.00 | 5,000.00 | 3,000.00 | 2023.01.01 2023.12.31 |
| 09 | கிரிபத்கொட வடக்கு எல்லையிலுள்ள கடை அறை இலக்கம் 17 | 324,000.00 | 5,000.00 | 3,000.00 | 2023.01.01 2023.12.31 |

**டப்ளியு.டீ. சான்தி குமுதினி,**
**தலைவர்,**
**களனி பிரதேச சபை.**
2022.09.22

# ஆசிய கிண்ணத்துக்கான இலங்கை குழாம் அறிவிப்பு

எதிர்வரும் பெண்கள் ஆசிய டி20 போட்டிக்கான 15 பேர் கொண்ட இலங்கைக் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

சாமரி அதபத்து தொடர்ந்து இலங்கை அணித் தலைவியாக தேர்வு செய்யப்பட்டிருப்பதோடு, அவருடன் ஹாசினி பெரேரா, ஹர்ஷிதா மாதவ, நிலக்ஷி டி சில்வா மற்றும் கவீஷா டில்ஹாரி ஆகியோர் துடுப்பாட்ட வரிசையை பலப்படுத்துகின்றனர்.

அனுபவமிக்க இடது கை சுழற்பந்து வீச்சாளர் இனோகா ரணவீரவும் இலங்கை அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.



பெண்கள் ஆசிய கிண்ண டி20 போட்டி பங்களாதேஷில் வரும் ஒக்டோபர் 1ஆம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இம்முறை ஆசியக்கிண்ணத் தொடரில் பங்களாதேஷ், இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், தாய்லாந்து, மலேசியா மற்றும் ஐக்கிய அரபு இராச்சிய அணிகள் பங்கேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை குழாம்: சாமரி அதபத்து (தலைவர்), ஹாசினி பெரேரா, ஹர்ஷிதா மாதவி, கவீஷா டில்ஹாரி, நிலக்ஷி டி சில்வா, அனுஷா சஞ்சீவனி, ககூனி நுத்யங்கா, ஓசதி ரணசிங்க, மல்ஷா ஷெஹானி, மதுசிகா மெத்தானந்த, இனோகா ரணவீர, ரஷ்மி சில்வா, சுகந்திகா குமாரி, அச்சினி குலசூரிய, தாரிகா செவ்வந்தி.

# அக்கரைப்பற்று பிரிமியர் லீக் தொடரின் சீருடை அறிமுகம்



**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவில் அக்கரைப்பற்றில் எதிர்வரும் மாதம் நடைபெறவுள்ள 'அக்கரைப்பற்று உதைபந்தாட்ட பிரிமியர் லீக் சுற்றுப்போட்டியில் கலந்து கொள்ளும் அணிகளுக்கான சீருடைகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் ஐய்னா வீச் காடர்னில் உதைபந்தாட்ட லீக்கின் தலைவரும், மாநகர சபை உறுப்பினருமான ஏ.ஜீ. அஸ்மி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அக்கரைப்பற்றின் உதைப்பாந்தாட்ட வீரர்கள் மற்றும் சீருடைக்கு அனுசரணை வழங்கிய அனுசரணையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



வட மத்திய மாகாண, மாகாண கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட மாகாண மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் வெற்றிபெற்று அகில இலங்கை மட்டப் போட்டிக்குத் தெரிவான அநுராதபுரம் சாஹிரா கல்லூரி அணியை காணலாம்.
*(படம்: திறப்பனை தினகரன் நிருபர்)*

# இரத்தினபுரி மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு சதுரங்க பயிற்சி



**மாளிகைக்காடு குறூப் நிருபர்**


இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள ஜெய்லாணி தேசிய பாடசாலை மற்றும் கனகநாயகம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த தரம் 6, 7 மாணவர்களுக்கான சதுரங்க பயிற்சி மற்றும் அறிமுக நிகழ்ச்சித் திட்டத்தின் 2ஆவது கட்டம் கடந்த 17, 18, 19 ஆகிய தினங்களில் ஜெய்லானி தேசிய பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

இப்பயிற்சிக்கு வளவாளராக அம்பாறை மாவட்ட சதுரங்க விளையாட்டு அமைப்பாளர் ஏ.எம். ஸாகிர் அஹமட், கனகநாயகம் மகா வித்தியாலய உடற்கல்வி ஆசிரியர் இன்ஸாப் ஷா முஹம்மட் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதில் இரண்டு நாள் சதுரங்க போட்டிகள் நடாத்தப்பட்டு முதல் 5 இடங்களை பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியா, பாக். அணிகள் சொந்த மண்ணில் தோல்வி

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டி20 தொடரின் முதல் போட்டியில் இந்திய அணி தனது சொந்த மண்ணில் தோல்வியை சந்தித்ததோடு பாகிஸ்தான் அணியும் தனது சொந்த மண்ணில் இங்கிலாந்துக்கு எதிரான முதல் டி20 போட்டியில் தோல்வியை எதிர்கொண்டுள்ளது.





மொஹாலியில் கடந்த செவ்வாயன்று நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட இந்திய அணி 20 ஓவர்களுக்கும் 6 விக்கெட்டுகளை இழந்து 208 ஓட்டங்களை பெற்றபோதும் ஆஸி. அணி 19.2 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து அந்த இலக்கை எட்டியது.

இந்திய அணிக்காக ஹார்திக் பான்ட்யா 30 பந்துகளில் ஆட்டமிழக்காது 71 ஓட்டங்களை பெற்றார். பதிலெடுத்தாடிய ஆஸி. அணிக்காக கமரோன் கிரில் 30 பந்துகளில் 61 ஓட்டங்களை விளாசினார்.

இந்நிலையில் 17 ஆண்டுகளின் பின் பாகிஸ்தான் திரும்பிய இங்கிலாந்து அணி ஆடிய முதல் போட்டியில் பாக். அணியை 6 விக்கெட்டுகளால் வீழ்த்தியது. முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 20 ஓவர்களுக்கும் 7 விக்கெட்டுகளை இழந்து 158 ஓட்டங்களை பெற்ற நிலையில் பதிலெடுத்தாடிய இங்கிலாந்து 19.2 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து இலக்கை எட்டியது.

# சம்மாந்துறை: 5 போட்டிகளில் தேசிய மட்டத்திற்கு தெரிவு

**காரைதீவு குறூப் நிருபர்**

கிழக்கு மாகாண மட்டத்தில் நடைபெற்று முடிந்த பெரு விளையாட்டுக்களில் சம்மாந்துறை வலயம் ஐந்து பெரு விளையாட்டுக்களில் தேசிய மட்டத்திற்கு தெரிவாகி உள்ளதாக சம்மாந்துறை வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ. முஸ்ரக் அலி தெரிவித்தார்.

நாவிதன்வெளி கோட்டத்தில் உள்ள றாணமடு இந்துக் கல்லூரி கபடி மற்றும் எல்லே போட்டிகளில் முதலிடம் பெற்றதோடு, சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம் உதைப்பந்தாட்டம், மேசைப் பந்து போட்டிகளில் 2ஆம் இடம் பெற்றது.

இறக்காமம் அல் அஷ்ரப் மத்திய கல்லூரி கரப்பந்தாட்டத்தில் இரண்டாம் இடத்தை பிடித்தது.

# ஜப்பான் பிரதமர் அலுவலகம் அருகே முதியவர் தீக்குளிப்பு

கடந்த ஜீலை மாதம் படுகொலை செய்யப்பட்ட ஜப்பான் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேவுக்கு அரச இறுதிச் சடங்கு நடத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து முதியவர் ஒருவர் தீக்குளித்துள்ளார்.



வரும் செப்டெம்பர் 27ஆம் திகதி நடைபெறவுள்ள இறுதிச் சடங்கில் நூற்றுக்கணக்கான வெளிநாட்டு பிரதிநிதிகள் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் டோக்கியோவில் உள்ள பிரதமர் அலுவலகத்திற்கு அருகில் நேற்று (21) 70 வயதுகளில் இருக்கும் முதியவர் ஒருவர் தீக்குளித்துக் கொண்டதை அடுத்து பொலிஸார் அழைக்கப்பட்டனர். அங்கு விரைந்த பொலிஸார் தீயை அணைத்து அந்த நபரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

அபேவுக்கு பெரும் செலவில் அரச இறுதிச் சடங்கு நடத்தப்படுவதற்கு ஜப்பான் பொதுமக்களிடையே எதிர்ப்பு வலுத்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

# சர்வதேச செய்திகள்

# அவுஸ்திரேலிய கடற்கரையில் 200 திமிங்கிலங்கள் நிர்க்கதி

அவுஸ்திரேலியாவின் டெஸ்மேனிய மாநில மேற்குக் கரையில் 200க்கும் அதிகமான திமிங்கிலங்கள் கரையொதுங்கியுள்ளன.



இவ்வாறு கரையொதுங்கிய திமிங்கிலங்களில் பாதி அளவானவை தொடர்ந்து உயிருடன் காணப்படுவதாக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் மிக மோசமான திமிங்கிலங்கள் கரையொதுங்கிய சம்பவம் நிகழ்ந்த மக்குரி ஹார்பர் பகுதியிலேயே தற்போதைய சம்பவமும் இடம்பெற்றுள்ளது. திமிங்கில மீட்பாளர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்துள்ளனர்.

# உய்குர்கள் தொடர்பில் ஐ.நாவுக்கு வலியுறுத்து

உய்குர் சிறுபான்மையினருக்கு எதிராக முன்னெடுக்கப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து ஐ.நா. பாதுகாப்பு சபை மற்றும் மனித உரிமைகள் பேரவையில் கலந்துரையாடப்பட வேண்டும் என்று உலக உய்குர் கொங்கிரஸ் கோரிக்கை விடுத்துள்ளது.



இது தொடர்பில் கொங்கிரஸின் உப தலைவர் விடுத்துள்ள ட்வீட்டில் மேற்கண்டவாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதோடு உய்குர்களின் நிலை குறித்து அறிக்கைகள் விடுதல், கவலை தெரிவித்தல் என்பவற்றோடு நடவடிக்கைகளையும் பார்க்க விரும்புவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

# இராணுவத்தை அணிதிரட்ட புட்டின் அதிரடி உத்தரவு

## மேற்கு நாடுகள் மீதும் எச்சரிக்கை

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் முதல் முறையாக இராணுவ அணிதிரட்டலுக்கான உத்தரவை ரஷ்யா நேற்று (21) பிறப்பித்துள்ளது. உக்ரைன் மீதான போர் ஏழு மாதங்களை எட்டி இருக்கும் நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

நாட்டு மக்களுக்கு நேற்று தொலைக்காட்சியில் உரையாற்றிய ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின், ரஷ்ய ஆட்புலங்களை தாம் பாதுகாத்திருப்பதாகவும் மேற்குலகம் நாட்டை அழிக்க விரும்புவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் புதன்கிழமை (நேற்று) அமுலாகும் வகையில் பகுதியளவு இராணுவ அணிதிரட்டல் உத்தரவில் கையெழுத்திட்டதாகவும் புட்டின் குறிப்பிட்டுள்ளார்.

இந்த பகுதியளவு அணிதிரட்டலின் கீழ் 300,000 மேலதிக படையினர் அழைக்கப்பட்டிருப்பதோடு அது கடந்த கால இராணுவ அனுபவம் இருப்பவர்களுக்கு பொருந்தும் என்று ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதன்போது ஏற்கனவே இராணுவப் பயிற்சி பெற்று வேறு வேலைகளில் ஈடுபட்டுள்ள போரிடும் உடல் தகுதியுள்ளவர்களையும் திரட்ட அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஏற்கனவே இராணுவத்தில் பணியாற்றி, படையில் இருந்து விலகி வேறு



பணிகளில் உள்ளோரையும் திரட்ட புட்டின் உத்தரவிட்டுள்ளார்.

ரஷ்யாவை பிளவுபடுத்தி, பல வீனப்படுத்தி, இறுதியில் அழித்து விட மேற்கு நாடுகள் சதிசெய்வதாக புட்டின் குற்றம்சாட்டினார்.

உக்ரைனில் ரஷ்ய துருப்புகள் பின்னடைவை சந்தித்தும் சில பகுதிகளில் சுற்றிவளைப்பை எதிர்கொண்டிருக்கும் நிலையிலேயே மேலதிக துருப்புகள் அழைக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று உக்ரைனின் கிழக்கு மற்றும் தெற்கில் ரஷ்ய கட்டுப்பாட்டு பிராந்தியங்களை ரஷ்யாவுடன் இணைப்பது குறித்து சர்வஜனவாக்கெடுப்புகளை நடத்தும் திட்டங்கள் பற்றிய அறிவிப்பு வெளியான அடுத்த தினமே புட்டின் நாட்டு மக்களுக்கு உரையாற்றியுள்ளார்.

எனினும் இத்தகைய போலியான தேர்தல்களை ஒருபோதும் அங்கீகரிக்க மாட்டோம் என்று அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்ஸ் மற்றும் கனடா உள்ளிட்ட நாடுகள் தெரிவித்துள்ளன.

"எமது நாட்டின் ஆட்புல ஒருமைப்பாடு அச்சுறுத்தலுக்கு உள்ளானால், எமது மக்களை பாதுகாப்பதற்கு நாம் அனைத்தையும் செய்வோம்" என்று புட்டின் குறிப்பிட்டார். பதிலடி கொடுப்பதற்கு ரஷ்யாவிடம் அதிக ஆயுதங்கள் இருப்பதாகவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

உக்ரைனின் லுஹன்ஸ்க் மற்றும் டொனெட்ஸ்க் பகுதிகளை ஒன்றிணைத்த டொபாஸ் பிராந்தியத்தை சுதந்திர நாடுகளாக ரஷ்யா கருதுகிறது. எனினும் உக்ரைனில் ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் இருக்கும் அனைத்து பகுதிகளையும் சட்டவிரோத ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகள் என உக்ரைன் மற்றும் மேற்கத்திய நாடுகள் கருதுகின்றன.

டொனெட்ஸ்கில் சுமார் 60 வீதமான பகுதி தற்போது ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் இருப்பதோடு லுஹன்ஸ்கின் கிட்டத்தட்ட அனைத்து நிலங்களையும் ரஷ்யா கைப்பற்றியுள்ளது.

எனினும் ரஷ்ய படை தற்போது உக்ரைனில் பின்னடைவை சந்தித்து வருகிறது. அண்டை மாகாணமான கார்கிவில் இருந்து ரஷ்ய துருப்புகள் இந்த மாதத்தில் பின்னடைவை சந்தித்ததோடு, லுஹன்ஸ்க் மற்றும் டொனெட்ஸ்க் முன்னரங்குகளில் பெரும் பகுதிக்கான விநியோகப் பாதைகளையும் இழந்துள்ளது.

இந்நிலையில் ரஷ்ய இராணுவ அணிதிரட்டல் அறிவிப்பு உக்ரைன் போரை வேகப்படுத்தும் திட்டத்தை காண்பிப்பதாக அவதானிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 செப்டெம்பர் மாதம் 22ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.